இவ்வாண்டில் துறைகளின் தலைவர்களாகப் பின்வருவோர் கடமையாற்றினர்: பேரா. டபிள்யு.ஐ. த சில்வா (குடிச்சரிதவியல்); கலா. நெலுக சில்வா (ஆங்கிலம்); பேரா. ஜயந்தி த சில்வா (புவியியல்); பேரா. ஜயதேவ உயன்கொட (அரசியல் விஞ்ஞானமும் பொதுக் கொள்கையும்); திரு. ஐ.வி.எதிரிசிங்க (09.07.08 வரை) மற்றும் கலா. சுபாங்கி ஹேரத் (10.07.08 முதல்) (சமூகவியல்); பேரா. நயனி மெலேகொட (வரலாறும் சர்வதேச உறவுகளும்); பேரா. எல்ஏ.டி. ஆனந்த திஸ்ஸ குமார (சிங்களம்) மற்றும் பேரா. சுனில் சந்திரசிறி (பொருளியல்).

பின்வருவோர் அலகுகளின் இணைப்பாளர்களாகச் செயற்பட்டனர். திரு.எம்.எம்.எம்.சபிர் (அரபும் இஸ்லாமிய நாகரிகமும் அலகு); செல்வி நளினி மகேசன் (ஆங்கிலமொழி கற்பித்தல் அலகு); திரு.கே. வலேபொட (பத்திரிகை எழுத்தாண்மை அலகு); திரு. சுசந்த லியனாரச்சி (கணினி அலகு); பேரா.எஸ்.ஏ. நோர்பேர்ட் (கணிதவியல் அலகு).

## அட்டவணை V–01 : நியமனங்கள், பதவியுயர்வுகள், பதவி விலகல்கள் மற்றும் இளைப்பாறல்கள்

| துறை மற்றும் பெயர் | பதவிப்பெயர் | செயற்படும் திகதி |
|---|---|---|
| | | |
| **குடிச்சரிதவியல்** | | |
| திருமதி நிஷாந்தி பெரேரா | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 12.08.2008 |
| **ஆ.மொ.க.அ.** | | |
| செல்வி பி. ஜெயகிருஷ்ணன் | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 02.05.2008 |
| செல்வி டபிள்யு.என்.எம்.விக்கிரமசேகர | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 02.05.2008 |
| செல்வி ஏ.எம்.ஏ.யு. அத்தநாயக்க | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 27.05.2008 |
| செல்வி எஸ்.வை. டயஸ் | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 02.05.2008 |
| திரு.ஆர்.எம். திலகரத்ன | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 02.05.2008 |
| செல்வி ஏ.ஜி.என்.டி. குணரத்ன | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 02.05.2008 |
| **பதவியுயர்வுகள்** | | |
| **ஆங்கிலம்** | | |
| பேரா. நெலுக த சில்வா | பேராசிரியர் | 27.02.2007 |
| **சமூகவியல்** | | |
| கலா. குமுது குசும் குமார | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 14.09.2007 |
| திரு. ஏ. ரொபின்சன் | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 24.01.2008 |
| திரு.எம்.ரி.எம். மஹீஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 01.09.2007 |
| **சிங்களம்** | | |
| பேரா. ரோஹிணி பரணவித்தான | பேராசிரியர் | 06.09.2006 |
| **இளைப்பாறல்கள்** | | |
| **பொருளியல்** | | |
| பேரா. சந்திரா ரொட்றிகோ | சிரேஷ்ட பேராசிரியர் | 30.09.2008 |
| **வரலாறும் சர்வதேச உறவுகளும்** | | |
| பேரா. டபிள்யு.எம். கருணாதாச | பேராசிரியர் | 30.09.2008 |
| பேரா. எம்.ஜி.ஏ. கூரே | துணைப் பேராசிரியர் | 30.09.2008 |
| பேரா. ஆர்.ஏ. ஆரியரத்ன | துணைப் பேராசிரியர் | 30.09.2008 |
| **சிங்களம்** | | |
| பேரா. ஏ.பி. திசாநாயக்க | துணைப் பேராசிரியர் | 30.09.2008 |
| பேரா. பீ. விஜேகுணசிங்க | துணைப் பேராசியர் | 30.09.2008 |
| **பத்திரிகை எழுத்தாண்மை அலகு** | | |
| கலா. தர்மசேன பதிராஜ | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I | 01.10.2008 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பதவி விலகல்கள் | | |
|---|---|---|
| **குடிச்சரிதவியல்** | | |
| பேரா. லக்ஷ்மன் திசாநாயக்க | பீடாதிபதி/ப.ப.பீ. | 25.07.2008 |
| **ஆ.மொ.க.அ.** | | |
| செல்வி எப்.எஸ். நளிம் | தகுதிகாண்நிலை விரிவுரையாளர் | 13.06.2008 |
| செல்வி எம்.பீ. எம்மனுவேல் | போதனாசிரியர் (தரம் II) | 01.04.2008 |
| செல்வி ஜே.ஏ. ஹப்புதந்திரி | போதனாசிரியர் (தரம் II) | 08.04.2008 |

## பீட நியமனங்கள்

பேராசிரியர் நெலுபர் த மெல் 2008 ஒக்ரோபர் 28ஆந் தேதியன்று கலைப்பீடத்தின் கற்கைப் பணிப்பாளர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார். பேராசிரியர் ஜோர்ஜ் கூறே 2008 செப்ரெம்பர் 30ஆந் தேதியிலிருந்து பீடத்தின் கல்விசார் ஆலோசகர் பதவியிலிருந்து விலகினார். கலா. சந்தன அளுத்கே தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தின் (IDC) இணைப்பாளராகத் தொடர்ந்தார்.

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

2008ஆம் ஆண்டில் பீடத்திலிருந்த மொத்த மாணவர் தொகை 3000க்கு மேற்பட்டதாயிருந்தது. கல்விநெறி அலகு முறைமை மாணவர்களுக்கு மதிப்புப் புள்ளிக்கான உள்ளுறைவுப் பயிற்சிநெறிகள் உட்பட ஒரு தொடர்வரிசையான கல்விநெறிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

குடிச்சரிதவியல் துறை முதற் தடவையாக குடிச்சரிதவியலில் சிறப்புப் பட்டத்தை மறுபடி வழங்கியது. 2008 யூலையில் ஆரம்பமான இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு 28 மாணவர்கள் பதிவுசெய்தனர். இத்துறை குடிச்சரிதவியலைப் பொதுப் பட்டத்துக்கான ஒரு பாடமாகவும் ஏனைய சிறப்புப் பட்ட மாணவர்களுக்கு இரண்டாம், மூன்றாம் ஆண்டுப் பாடமாகவும் தொடர்ந்தும் வழங்கியது.

பொருளியல் துறை சிறப்புப் பட்ட மாணவர்கள் மூன்றாம் ஆண்டு முதற்கொண்டு சிறப்புத்துறைச் செயல்முறையைப் பின்பற்றும்வகையில் கல்விநெறி அலகு முறைமையின்கீழ் அதன் விரிவுரைகளைத் தொடர்ந்தும் நடத்தியது. பல்வேறு புதிய கல்விநெறி அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொருளியல் சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்குக் கணிசமான கேள்வி நிலவியதனால் இத்துறை சிறப்புப் பட்டத்துக்கெனச் சிங்களமொழிமூலம் 184, தமிழ்மொழிமூலம் 39 மற்றும் ஆங்கில மொழிமூலம் 34 மாணவர்களைச் சேர்த்துக்கொண்டது.

2008ஆம் ஆண்டில் சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மீளக் கட்டமைப்பதிலும் பாடவிதான அபிவிருத்தியிலும் குறிப்பிடத்தக்க கவனம்செலுத்தியது. கல்விநெறிகளின் மாணவர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. உள்ளுறைவுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் பணியாளரினால் மீளாய்வுசெய்யப்பட்டது.

அதன் சொந்தப் பட்ட மாணவர் கல்விநெறிகளைத் தவிர இத்துறை (அ) வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞானம் போன்ற கலைப்பீடத்தின் வேறு துறைகளிலும், (ஆ) விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் துறையிலும் பொருளியல் கற்பிப்பதற்குத் தொடர்ந்தும் உதவியது. பட்டப்பின் மருத்துவ நிறுவகத்துக்கு மருத்துவ நிருவாகத்திலும் சமூக மருத்துவத்திலும் அதன் எம்.எஸ்சி. மற்றும் எம்டி நிகழ்ச்சித்திட்டங்களின் சுகாதாரப் பொருளியல் ஆக்கக்கூறு தொடர்பில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி உதவியும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்துறை ஆங்கில இலக்கியத்திலும் ஆங்கிலமொழியிலும் பொது மற்றும் சிறப்புப் பட்டங்களுக்காகவும் ஆங்கிலமொழி கற்பித்தலுக்காகவும் கலாசாரப் படிப்புகளுக்காகவும் ஆங்கிலத்தில் ஒரு தொடர்வரிசையான கல்விநெறி அலகுகளை வழங்கியது.

2000ஆம் ஆண்டுதொட்டு ஆங்கிலத்துறை ஆங்கிலமொழியிலும் ஆங்கிலப் பயிற்சியிலும் கல்விநெறி அலகுகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. அனேக மாணவர்கள் அவற்றைத் தெரிவுசெய்துள்ளனர். இத்துறை புதிய மாணவர்களினதும், முதலாம் ஆண்டினுள் ஒரு வெளிவாரி முதல் பரீட்சையின் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் ஆங்கில ஆசிரியர்களினதும் மேலதிக உள்ளெடுப்பின்கீழ் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளது. ஆங்கிலமொழியிலும் ஆங்கில மொழிப் பயிற்சியிலுமுள்ள கல்விநெறிகள் விசேடமாக இம்மாணவர்கள் ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர்களாகவும் பல்வேறு நிறுவகங்களில் பயிற்றுவிப்பாளர்களாகவும் கொள்கையைத் திட்டமிடுபவர்களாகவும் தம்மைத் தயார்படுத்திக்கொள்வதற்கு உதவியுள்ளன.

வரலாறும் சர்வதேச உறவுகளும் துறை 1000க்கும் மேற்பட்ட பொதுப் பட்ட மாணவர்களுக்கும் சிறப்புப் பட்டத்துக்காக அது வழங்குகின்ற இரு பாடங்களான வரலாறு மற்றும் சர்வதேச உறவுகளில் 180 சிறப்புப் பட்ட மாணவர்களுக்கும் கல்விநெறிகளை வழங்கியது.

சிங்களத் துறை பொது மற்றும் சிறப்புப் பட்ட மாணவர்களுக்குக் கல்விநெறிகளை வழங்கியது.

சமூகவியல் துறை தொடர்ந்தும் பொது மற்றும் சிறப்புப் பட்டங்களுக்கான கல்வி நெறிகளை வழங்கியதுடன் பின்வரும் இரு புதிய கற்கை நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பீடச் சபையினதும் மூதவையினதும் அங்கீகாரத்தையும் பெற்றது: (அ) உளவியலில் ஒரு துணைத் துறையைத் தாபிக்கும் நோக்குடன் பொதுப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒரு பாடமாக உளவியல், மற்றும் (ஆ) சமூகவியல் சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினுள் ஒரு கற்கைநெறியாக சமூகப்பணி. முன்னையது 2009இல் தொடங்கவுள்ள அதேவேளையில், பின்னையது 2008 ஒக்ரோபரில் ஆரம்பமாகியது. ல்ஜுபில்ஜன பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் சமூகப் பணியில் இப்புதிய அலகை அறிமுகப்படுத்துவதற்குத் தன்னிச்சையாக முன்வந்துள்ளனர். சுலோவீனியாவில் சமூகப்பணித் துறையில் பெரும் புகழ்பெற்ற ஒரு கல்விமானும் சுலோவீனியா, ல்ஜுபில்ஜன பல்கலைக்கழக சமூகப்பணி பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் விட்ரோ ஃபிளேக்கர் அவர்கள் இப்புதிய கற்கை நெறியின்கீழ் முதலாவது கல்விநெறி அலகைக் கற்பித்தலிலும் ஒழுங்குசெய்தலிலும் இப்போது ஈடுபட்டுள்ளார்.

இத்துறை 2008 ஒக்ரோபரில் தொடங்கி 9 மாதங்களுக்கு ஒரு சிரேஷ்ட ஃபுல்பிறைற் உறுப்பினரான பேராசிரியர் ஸ்ரீனிக ஜயரத்ன அவர்களின் உதவி கிடைக்கின்ற சிறப்புப் பேற்றையும் பெற்றுள்ளது. அவர் உளவியல் சமூகப்பணி மற்றும் ஆராய்ச்சி முறையியல் ஆகிய பரப்புகளில் தமது கல்விப் புலமைப் பங்களிப்பின்மூலம் துறைக்கு ஓர் அருஞ்சொத்தாக இருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக்கொள்கைத் துறை 2008இல் பல்வேறு புதிய முயற்சிகளைத் திடப்படுத்தியது. முக்கிய சாதனங்களாவன: (அ) பட்ட மாணவர் கல்விநெறிக் கட்டமைப்பு மற்றும் பாடத்திட்டத் திருத்தம்; (ஆ) முரண்பாடு, அதிகாரம் மற்றும் சனநாயகம் (CPD) என்ற கருத்திட்டம் தொடக்கிவைக்கப்படுதல். இத்துறை, நோர்வே, ஒஸ்லோ பல்கலைக்கழகம் மற்றும் இந்தோனேசிய கஜ மடா பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கிடையிலான ஒரு முத்தரப்புக் கூட்டுழைப்பான இக்கருத் திட்டத்தின்கீழ் அரசியல் விஞ்ஞானத்தில் எம்ஏ/பீஎச்.டி. நிகழ்ச்சித்திட்டங்களும் முரண்பாடு, அதிகாரம் மற்றும் சனநாயகம் பற்றிய ஓர் ஆராய்ச்சிக் கருத்திட்டமும் இடம்பெறும்; (இ) துறையின் வெப்தளம் பூர்த்தியாக்கப்படல்.

புவியியல் துறையும் பொது மற்றும் சிறப்புப் பட்ட மாணவர்களுக்குக் கல்வி நெறிகளை வழங்கியது. மேலும் அதன் பணியாளர் வீதி அபிவிருத்திக் கருத் திட்டங்கள், கொழும்பு – கட்டுநாயக்க கடுகதி நெடுஞ்சாலை மற்றும் பட்ட மாணவர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் தர உத்தரவாதம் ஆகியவற்றில் நிபுணத்துவ அறிவை வழங்குவதன்மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களித்தனர்.

ஆங்கிலமொழி கற்பித்தல் அலகு (ELTU) தோற்றநிலையான வகுப்பறைகளூடாகக் கூடிய கற்றல் வாய்ப்புக்களை உருவாக்கும் தொலைநோக்குடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனான தொலைக்கல்வி நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் (DEMP) கீழ் கல்வி அமைச்சுக்கு வியாபார ஆங்கிலத்தில் தொடரறா ஈ-டிப்ளோமா ஒன்றை அபிவிருத்திசெய்வதற்கான முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்தது. இம்முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து ELTU உள்ளடக்கத்தை விருத்திசெய்வதில் ஈடுபட்டுள்ளது.

2008இல் அரபு மற்றும் இஸ்லாமிய நாகரிக அலகு அதன் வளங்களையும் பணியாளர் பயிற்சியையும் அபிவிருத்திசெய்யும்பொருட்டு ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதரக அதிகாரிகளுடன் கலந்தாராய்வுகளை நடத்தியது. இத்திட்டத்தின் கீழான கருத்திட்ட முன்மொழிவொன்று பீடச்சபையினதும் மூதவையினதும் அங்கீகாரத்தைப் பெற்றது.

கணிதவியல் பல்வேறு கல்வித்துறைகளுக்கும் துறைகளுக்கிடைப்பட்ட ஒரு பாடமாயுள்ளது. கணிதவியல் அலகு (MU) கலைப்பீட மாணவர்களுக்கு மூன்று கல்விநெறி அலகுகளை வழங்கியது.

பத்திரிகை எழுத்தாண்மை அலகு CMS-தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும் என்ற பெயரின்கீழ் அதன் கல்விநெறி அலகுகளை மீளாய்வுசெய்து திருத்தியது.

### நீடிப்புக் கல்விநெறிகளும் சமூக சேவை வழங்கல் கல்விநெறிகளும்

பரந்துள்ள சமூகத்துக்குத் தொழில்சார் மேம்பாட்டுத் திறன்களை வழங்குகின்றதாகவும் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதிக்கு ஆகக்கூடிய பங்களிப்பாளராகத் தொடர்ந்தும் இருக்கக்கூடியதாகவும் 2008ஆம் ஆண்டில் பீடத்தால் அனேக நீடிப்புக் கல்விநெறிகள் வழங்கப்பட்டன. பீடத்தின் துறைகள் அவற்றின் தேசியப் பங்களிப்பினதும் சமூக சேவை வழங்கலினதும் ஒரு பகுதியாகப் பல்வேறு உசாத்துணைகளையும் மேற்கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிச்சரிதவியல் துறை 'மதிப்பீட்டு ஆராய்ச்சி முறைகளும் SPSSஐப் பயன்படுத்தி மதிப்பீட்டுத் தரவுப் பகுப்பாய்வும்' பற்றிய சான்றிதழ் கல்விநெறியொன்றை நடத்தியதுடன் சமூக விஞ்ஞானங்களில் ஆராய்ச்சிமுறைகளின் பிரயோகம் பற்றிய பயிற்சிச் செயலமர்வொன்றையும் நடத்தியது.

ELTU வியாபார ஆங்கிலத்தில் சான்றிதழ் கல்விநெறிகளையும் (புகுமுக மற்றும் இடைத்தர மட்டங்கள்) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்துக்காக ஆங்கிலத்தில் தேர்ச்சிக் கல்விநெறியொன்றையும் வழங்கியது. இவ்வலகால் மேற்கொள்ளப்பட்ட ஆங்கிலத்தில் நீடிப்புக் கல்விநெறிகளும் உசாத்துணைகளும் குறிப்பிட்ட தேவைகளுக்கான ஆங்கிலத்திலும் (ESP), அதாவது கல்விசார், தொழில்சார் மற்றும் உயர்தொழில் தேவைகளுக்கான ஆங்கிலத்திலும் காலி, தென் தொழில்நுட்ப நிறுவகத்துக்காக ஆங்கில இலக்கியத்திலும் மொழியிலும் பாடத்திட்டமொன்றை வடிவமைப்பதிலும் கவனஞ்செலுத்தின. 2008 சனவரியில் ஆரம்பமான ஆங்கிலத்தில் நீடிப்புக் கல்விநெறிகள் 2007/2008 நடத்தப்பட்ட காலப்பகுதி 10 மாதங்களாகும்.

பொருளியல் துறை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா மற்றும் நுண்நிதியில் டிப்ளோமா ஆகிய இரு டிப்ளோமா கல்விநெறிகளை வழங்கியது.

ஆங்கிலத் துறை பொதுமக்களைச் சேர்ந்த சுமார் 5000 உறுப்பினர்களுக்கு ஆங்கிலத்தில் நீடிப்புக் கல்விநெறிகளை வழங்கியதுடன், பல்வேறு நிறுவனங்களுக்கு உசாத்துணைகளையும் மேற்கொண்டது. அது தொழில்களுக்கான ஆங்கிலம் (பகுதி 1 மற்றும் 2), சட்டத்துக்கான ஆங்கிலம் (பகுதி 1 மற்றும் 2) ஆகிய சான்றிதழ் கல்விநெறிகளை வழங்கியது. அது நிருவாக மற்றும் உயர்தொழில் நோக்கங்களுக்கான உயர்தர ஆங்கிலம், ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கிலம் (DETE) ஆகிய டிப்ளோமா கல்விநெறிகளையும் நடத்தியது.

### அட்டவணை V–02: நீடிப்புக் கல்விநெறிகளில் மாணவர் சேர்ப்பு - 2008

| கல்விநெறி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| தொழில்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் - பகுதி 1 | 861 |
| - பகுதி 2 | 1101 |
| சட்டத்துக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் - பகுதி 1 | 22 |
| - பகுதி 2 | 41 |
| நிருவாக மற்றும் உயர்தொழில் நோக்கங்களுக்காக உயர்தர ஆங்கிலத்தில் டிப்ளோமா - புகுமுக மட்டம் | 548 |
| - இறுதி மட்டம் | 398 |
| ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தில் டிப்ளோமா (DETE) – பகுதி I | 247 |
| – பகுதி II | 173 |
| பத்திரிகை எழுத்தாண்மையில் டிப்ளோமா | 152 |
| நுண்நிதியில் டிப்ளோமா | 24 |
| சுற்றுலாப் பொருளியல், ஹோட்டல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா | 23 |
| **மொத்தம்** | **3590** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டப்பின் கல்விநெறிகள்

2008ஆம் ஆண்டில் பீடம் பல்வேறு பட்டப்பின் கல்விநெறிகளை வழங்கியது. பொருளியல் துறை பொருளியலில் எம்பில்/பீஎச்.டி., பொருளியலில் எம்ஏ, நிதிப் பொருளியலில் எம்ஏ, பொருளாதார அபிவிருத்தியில் டிப்ளோமா (DED) ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியது. வரலாறும் சர்வதேச உறவுகளும் துறை பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களாக சர்வதேச உறவுகளில் எம்ஏ பட்டத்தையும் ஆராய்ச்சி மூலமான எம்ஏ/எம்பில் பட்டத்தையும் வழங்கியது. சமூகவியல் துறை பிரயோக சமூகவியலில் டிப்ளோமா ஒன்றையும் சமூகவியலில் எம்ஏ ஒன்றையும் நடத்தியது. அரசியல் விஞ்ஞானமும் பொதுக்கொள்கையும் துறை ஆராய்ச்சிமூலம் பீஎச்.டி, எம்.பில். மற்றும் எம்ஏ ஆகியவற்றுக்கு இட்டுச்செல்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களை 2008 சனவரியில் நடத்தியது. அரசியல் விஞ்ஞானமும் பொதுக் கொள்கையும் துறை நோர்வே, ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் கூட்டுழைப்புடன் கல்விநெறி வேலை மற்றும் ஆராய்ச்சிமூலமான அரசியல் விஞ்ஞானத்தில் எம்ஏ நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடக்கிவைத்தது. ஆங்கிலத்துறை ஆங்கிலத்தில் எம்ஏ மற்றும் (ஆராய்ச்சிமூலம்) ஆங்கிலத்தில் எம்.பில். ஆகியவற்றை நோக்கிய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இத்துறை ஆங்கிலமொழி கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா, மற்றும் ஆங்கில மொழி கற்பித்தலில் எம்ஏ மற்றும் ஆங்கிலத்தில் எம்ஏ ஆகிய மூன்று பட்டப்பின் பட்டங்களை வழங்கியது. சிங்களத் துறையும் எம்ஏ/எம்.பில்./பீஎச்.டி. நிகழ்ச்சித்திட்டங்களை 2008இல் நடத்தியது.

2008 செப்ரெம்பரில் 'சனிக்கிழமை பட்டப்பின் மாணவர் அரங்கு' தொடக்கிவைக்கப் பட்டது. இந்த அரங்கில் அரசியல் விஞ்ஞானமும் பொதுக்கொள்கையும் துறையைச் சேர்ந்த பட்டப்பின் மாணவர்கள், துறையால் தொடக்கிவைக்கப்பட்ட பட்டப்பின் கற்றலும் ஆற்றலைக் கட்டியெழுப்புதலும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக தமது பூர்வாங்க ஆராய்ச்சி முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கின்றனர்.

### அட்டவணை V–03: பட்டப்பின் கல்விநெறிகளில் மாணவர் சேர்ப்பு – 2008

| கல்விநெறியின் பெயர் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| பிரயோக சமூகவியலில் பட்டப்பின் டிப்ளோமா | 21 |
| பொருளாதார அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமா | (2007இல் ஆரம்பமானது) 23 |
| வரலாற்றில் பட்டப்பின் ஆராய்ச்சி (எம்ஏ மற்றும் எம்பில்) | 12 |
| ஆராய்ச்சிமூலம் எம்ஏ | 30 |
| கல்விநெறி வேலை மற்றும் ஆராய்ச்சிமூலம் எம்ஏ | 22 |
| சமூகவியலில் கலை முதுமாணி | 17 |
| ஆங்கிலத்தில் கலை முதுமாணி (ஆராய்ச்சிமூலம்) | 04 |
| பொருளியலில் முதுமாணி | (2007இல் ஆரம்பமானது) 40 |
| நிதிப் பொருளியலில் முதுமாணி | (2007இல் ஆரம்பமானது) 70 |
| சர்வதேச உறவுகளில் எம்ஏ | 47<br>(2009க்கு தெரிவுசெய்யப்பட்டோர்) 73 |
| ஆங்கிலத்தில் எம்.பில். (ஆராய்ச்சிமூலம்) | 01 |
| பொருளியலில் எம்.பில்./பீஎச்.டி. | 07 |
| எம்.பில்./பீஎச்/டி. ஆராய்ச்சிமூலம் | 10 |
| எம்ஏ/எம்.பில்./பீஎச்.டி. | 30 |
| **மொத்தம்** | **407** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை V–04: பட்டப்பின் படிப்புகளில் பணியாளர் நிலை – 2008

| துறை | பிஎச்.டி பட்டம் தொடருகின்றது | முதுமாணிப் பட்டம் தொடருகின்றது | முதுமாணிப் பட்டம் பூர்த்தியானது |
|---|---|---|---|
| குடிச்சரிதவியல் | 04 | - | - |
| ஆங்கிலம் | 02 | - | - |
| புவியியல் | 06 | 01 | - |
| அரசியல் விஞ்ஞானமும் பொதுக்கொள்கையும் | 05 | 01 | - |
| சமூகவியல் | 04 | - | - |
| பொருளியல் | 02 | - | - |
| சிங்களம் | 02 | - | - |
| வரலாறும் சர்வதேச உறவுகளும் | 03 | - | - |
| ICV அலகு | - | 02 | - |
| ELTU | 01 | 12 | 01 |

## தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் கல்விசார் பணியாளரின் பங்களிப்பு

கலா. ஆர்.டபிள்யு.ரி.பி. ரஞ்சித் பண்டார
கலா. ரி. எல். குணருவன்
பேரா. அமல் ஜயவர்தன
பேரா. எஸ்.ரி. ஹெட்டிகே
பேரா. ரமணி ஜயதிலக்க
கலா. எஸ்.எம்.கே. ஹேரத்
பேரா. நயனி மெலேகொட
கலா. டி.என்.என்.ஆர். தேவசிறி
பேரா. லக்சிறி பர்னாந்து
பேரா. ஜயதேவ உயன்கொட
பேரா. ஜயந்தி த சில்வா
பேரா. டபிள்யு.ஐ த சில்வா
பேரா. கே.ஏ.பீ. சித்திசேன
பேரா. சிரோமி பர்னாந்து
பேரா. நெலுபர் த மெல்
திரு. ஜகத் வெல்லவத்த
பேரா. எம்.ஜி.ஏ. குரே
கலா. நெலுக சில்வா
பேரா. துஷ்யந்தி மெண்டிஸ்
திரு. கமல் வலேபொட
கலா. அஜந்த ஹப்புஆரச்சி
செல்வி என். மகேசன்
திரு. எம்.எம்.எம். சபிர்

### அட்டவணை V–05: வெளியீடுகளும் சமர்ப்பணங்களும

| துறை/அலகு | கட்டுரைகளும் நூல்களும் | சமர்ப்பணங்கள் |
|---|---|---|
| குடிச்சரிதவியல் | 07 | 03 |
| பொருளியல் | 11 | - |
| ஆங்கிலம் | 05 | 06 |
| புவியியல் | 13 | 12 |
| வரலாறும் சர்வதேச உறவுகளும் | - | 02 |
| அரசியல் விஞ்ஞானமும் பொதுக்கொள்கையும் | 07 | - |
| சிங்களம் | 03 | - |
| சமூகவியல் | 08 | 01 |

## உட்கட்டமைப்பு அபிவிருத்தி

புதிய கலை அரங்கில் (NAT) புதிய ஒளிவிளக்குகளும் பகிரங்க ஒலிபரப்பு முறைமையும் IRQUE கருத்திட்டத்தின் சமூக ஒத்திசைவு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பொருத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. கல்விப் பீடம்

### அறிமுகம்

கல்விப் பீடம்தான் மூன்று தசாப்த காலமாக அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தொழில்வல்லமைப் பயிற்சியை வழங்குகின்ற ஒரேயொரு பீடமாயிருந்துள்ளது. 2008ஆம் ஆண்டில் இப்பீடம் வழமையான கல்வி இளமாணிப் பட்ட மாணவர் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை நடத்திய அதேவேளையில், சமூக அபிவிருத்தி மற்றும் உளவளத்துறைப் பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்படக் கல்வித்துறையில் வேறு அனேக பட்டப்பின் கல்விநெறிகளையும் தொடர்ந்து வழங்கியது. பீடம் பி.எட். மற்றும் ஏனைய பல்வேறு கல்விநெறிகளை மூன்று மொழிமூலங்களிலும் நடத்திவந்துள்ளது.

### பணியாளர் பற்றிய தகவல்

மீளாய்வாண்டில் பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் 01.06.2008 முதல் 30.08.2008 வரை தமது ஏழாட்டை விடுப்பைப் பயன்படுத்திய மூன்றுமாத காலப்பகுதியைத் தவிர, கல்விப் பீடத்தின் பீடாதிபதியாகத் தொடர்ந்து கடமையாற்றினார். இக்காலப் பகுதியின்போது பேராசிரியர் எம்.ஈ.எஸ். பெரேரா 01.06.2008 முதல் 15.07.2008 வரையும், பின்னர் திரு. டபிள்யு.எம். பிரக்ஞதர்ஷன 16.07.2008 முதல் 30.08.2008 வரையும் பீடாதிபதியாகப் பதிற்கடமையாற்றினர். திரு. டி. நாகசிங்க சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவிக்கு 09.10.2008 முதற்கொண்டு பதவியுயர்தப்பட்டார்.

பீடத்தில் இரு (02) பேராசிரியர்கள், இரு (02) துணைப் பேராசிரியர்கள், பதினொரு (11) சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் பதினான்கு (14) விரிவுரையாளர்கள் ஆகியோரைக் கொண்ட இருபத்தொன்பது (29) கல்விசார் பணியாள் தொகுதி உறுப்பினர்கள் இருந்தனர். பீடத்தின் ஏனைய பணியாளரில் ஒரு (01) நிருவாக அலுவலர், ஒரு (01) கல்விசார் ஆதரவுப் பணியாளர் மற்றும் பதினேழு (17) கல்விசாராப் பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் அடங்குவர்.

திரு. டபிள்யு.எம். பிரக்னதர்ஷன, கலா. ஏ.ஏ. ஜயவர்தன மற்றும் கலா. டபிள்யு. சந்திரதாச ஆகியோர் முறையே விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கல்வித்துறை, சமூக விஞ்ஞானக் கல்விததுறை, கல்வி உளவியல் துறை ஆகியவற்றின் தலைவர்களாகச் செயற்பட்டனர். பேராசிரியர் எம்.ஈ.எஸ். பெரேரா பணியாளர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளராகக் கடமைகளை ஏற்கும்பொருட்டு 15.08.2008இல் மானுடவியல் கல்வித்துறையின் தலைமைப் பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து, திரு. டி.ஆர். அத்துகோறள இத்துறையின் தலைவராக 15.08.2008 முதல் நியமிக்கப்பட்டார்.

மீளாய்வாண்டில் விரிவுரையாளர்களான திருமதி ஜே. ஹேரத் (சமூக விஞ்ஞானக் கல்வி), திருமதி எஸ். செனரத் (கல்வி உளவியல்) ஆகியோர் பீஎச்.டி. பட்டங்களூடாக எம்.பில். படிப்புக்காகக் கல்வி விடுப்பில் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா. எம். கருணாநிதி தொடர்ந்தும் தேசியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிறுவகத்தின் (NEREC) பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

பீட உறுப்பினர்கள் அனைவரும் 24.10.2008இல் நடத்தப்பட்ட ஒருநாள் கல்விசார் அமர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர். இதில் 15 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டன. முகாமைத்துவ, நிதிப் பீடப் பீடாதிபதி கலா. பீ.எஸ்.எம். குணரத்ன இக்கல்விசார் அமர்வில் பிரதம அதிதியாகப் பங்குபற்றினார்.

புதுடெல்லி, தேசிய கல்வித் திட்டமிடல் பல்கலைக்கழகத்தில் 01.04.2008 முதல் 30.04.2008 வரை நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் பீடத்தைச் சேர்ந்த எட்டு விரிவுரையாளர்கள் பங்குபற்றினர். இதற்கு உலக வங்கி ESDFP மானியத்தின் மூலம் நிதி வழங்கப்பட்டது.

### அட்டவணை V–06: நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள்

| துறை மற்றும் பெயர் | பதவிப்பெயர் | செயற்படும் திகதி |
|---|---|---|
| **நியமனங்கள்** | | |
| **மானுடவியல் கல்வி** | | |
| பேரா. எம்.ஈ.எஸ். பெரேரா | பேராசிரியர் | 05.02.2007 |
| | பணிப்பாளர் (பணியாளர் அபிவிருத்தி நிலையம்) | 15.09.2008 |
| **சமூக விஞ்ஞானக் கல்வி** | | |
| கலா. எல்.கே. புஞ்சி வெடிக்கார | சிரேஷ்ட விரிவுரையாளர் | 28.11.2008 |

### கூட்டங்கள்

மீளாய்வாண்டில் பீடச் சபை ஒன்பது தடவைகள் கூடியது. இவற்றுடன் கல்விசார், நிருவாக மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய பிரச்சினைகளைக் கலந்தாராய்வதற்கென வேறும் அனேக கூட்டங்கள் கிரமமாக நடத்தப்பட்டன.

### பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

இப்பீடம், கல்வி இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் தொடர்ந்தும் வெற்றிகரமாக நடத்தியது.

மானுடவியல் கல்வித் துறை இவ்வாண்டில் இறுதியாண்டு பி.எட். பட்ட மாணவர்களுக்கு ஆங்கில மொழியை முன்னேற்றுதல் பற்றிய ஒரு குறுகியகாலக் கல்விநெறியை வழங்கியது. அடுத்துத் தொடரும் நான்காவது ஆண்டாக இக்கல்விநெறி வழங்கப்பட்டது.

விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வித்துறையும் சமூக விஞ்ஞானக் கல்வித் துறையும் கல்வி உளவியல் துறையும் ஆசிரியர்களின் தொழிலுக்கும் கல்வி இளமாணிப் பட்ட மாணவர் நிகழ்ச்சித் திட்டத்துக்கும் பொருத்தமான பாடநெறி அலகுகளைத் தொடர்ந்தும் வழங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை V–07: பட்ட மாணவர் சேர்ப்பு

| கல்விநெறி | | மாணவர் எண். | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| பி.எட். பகுதி I | சிங்களம் | 13 | 112 | 125 |
| | தமிழ் | 01 | 17 | 18 |
| | ஆங்கிலம் | 04 | 19 | 23 |
| பி.எட். பகுதி II | சிங்களம் | 04 | 73 | 77 |
| | தமிழ் | 02 | 23 | 25 |
| | ஆங்கிலம் | 04 | 10 | 14 |
| பி.எட். பகுதி III | சிங்களம் | 11 | 110 | 121 |
| | தமிழ் | 01 | 15 | 16 |
| | ஆங்கிலம் | 04 | 12 | 16 |
| மொத்தம் | | 44 | 391 | 435 |

## பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

இவ்வாண்டிலும் சமூக விஞ்ஞானக் கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கல்வி, மானுடவியல் கல்வி, கல்வி உளவியல் ஆகிய துறைகள் தொடர்ந்தும் பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்குப் பங்களித்தன. இத்துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் தத்துவ முதுமாணி (எம்.பில்.) மற்றும் தத்துவக் கலாநிதி (பீஎச்.டி.) மாணவர்களுக்கான ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்தனர்.

மானுடவியல் கல்வித்துறை தொடர்ந்தும் இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தைக் கற்பித்தலில் (TESL) பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை வழங்கியது. இம்முழுநேரக் கல்விநெறி பீடத்தின் ஏனைய துறைகளைச் சேர்ந்த விரிவுரையாளர்களினதும் திரு. சீ. காரியவசம், திருமதி எல். குமாரணதுங்க, திருமதி கமலா விஜேரத்ன போன்ற வருகைதரும் தொழில் வல்லுனர்களினதும் உதவியுடன் நடத்தப்பட்டது.

சமூக விஞ்ஞானக் கல்வித்துறை விரிவுரைகள், தனிமுறைப் போதனைகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள், ஆய்வுக்கட்டுரை மேற்பார்வை என்பவற்றை வழங்குவதன்மூலம் பீடத்தால் வழங்கப்படும் ஏனைய எல்லாக் கல்விநெறிகளுக்கும் தொடர்ந்தும் பங்களிப்புச்செய்கின்றது. இத்துறை சமூக அபிவிருத்திக் கல்வி நெறிக்கு 2009ஆம் ஆண்டுக்கான மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக விளம்பரப்படுத்தியுள்ளது.

விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வித்துறை பீடத்தால் நடத்தப்படும் பட்டப்பின் கல்விநெறிகள் எல்லாவற்றுக்கும் பங்களிப்பதன்மூலம் ஏனைய துறைகளுடன் சேர்ந்து ஒத்தாசை வழங்கியது.

கல்வி உளவியல்துறை பீடத்தால் வழங்கப்படும் பட்டப்பின் கல்விநெறிகளை நடத்துவதற்கு ஏனைய துறைகளுக்கு உதவிபுரிகின்ற அதேவேளையில், 2009ஆம் ஆண்டுக்கான உளவளத்துறையில் பட்டப்பின் டிப்ளோமா கல்விநெறிக்கு விளம்பரப் படுத்தியுள்ளது.

இக்கல்விநெறிகளை வெற்றிகரமாக வழங்குவதில் ஏனைய துறைகளைச் சேர்ந்த கல்விசார் பணியாளர் தொகுதி உறுப்பினர்களும் பொருத்தமான சிறப்புத் துறைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வருகைதரும் தொழில்வல்லுனர்களும் தொடர்ந்தும் உதவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை V–08: பட்டப்பின் மாணவர் சேர்ப்பு

*(பட்டம் மற்றும் பால் வாரியாக வகைப்படுத்தப்பட்டது)*

| கல்விநெறி | மாணவர் எண். | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (முழுநேரம்) (சிங்களமூலம்) | 48 | 113 | **161** |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (முழுநேரம்) (தமிழ்மூலம்) | 22 | 11 | **33** |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் (TESL) | 15 | 18 | **33** |
| தத்துவ முதுமாணி | 08 | 04 | **12** |
| மொத்தம் | **93** | **145** | **238** |

### நீடிப்புக் கல்விநெறிகள்/சமூக சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

இப்பீடம் நீடிப்புக் கல்விநெறிகளைத் தொடர்ந்து வழங்கியது. பகுதிநேர மாணவர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணை V-09இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை V–09: நீடிப்புக் கல்விநெறிகளில் மாணவர் சேர்ப்பு

| கல்விநெறி | | மாணவர் எண். | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| பட்டப்பின் டிப்ளோமா கல்வியில் (ப.நே.) கல்விநெறி | சிங்களம் | 394 | 1026 | **1420** |
| | ஆங்கிலம் | 16 | 62 | **78** |
| மொத்தம் | | **410** | **1088** | **1498** |

### அட்டவணை V–10: செயலமர்வுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பணியாளர் பங்கேற்பு

*(பணியாளர்/துறை: பயிற்சி நிகழ்ச்சித்திட்டரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பெயர் மற்றும் துறை | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்/ செயலமர்வு | இடம் |
|---|---|---|
| **கல்வி உளவியல்** | | |
| கலா. டபிள்யு. சந்திரதாச | கல்வி முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | NUEPA, புதுடெல்லி, இந்தியா |
| கலா. எம். விதானபத்திரண | உளவியல் மற்றும் உளவளத் துணையில் நடத்தப்பட்ட மறுபயிற்சிநெறி | மனவதிர்ச்சித் தீர்வுக்கும் மன ஆரோக்கியத்துக்குமான சம்முத்தன வளநிலையம் |
| திருமதி ஆர்.டி.சி. நிரோஷினி<br>செல்வி வை. சக்திவேல் | உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழை (CTHE) பூர்த்தி செய்தல் | பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொ.ப. |
| **சமூக விஞ்ஞானக் கல்வி** | | |
| பேரா. எஸ். சந்திரசேகரம் | அறிவுப் பொருளாதாரம் பற்றிய செயலமர்வு | சியோல், தென் கொரியா |
| திரு. எஸ். கலகம<br>திருமதி எல்.என்.பீ.வெடிகந்தகே | கல்வி முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | NUEPA, புதுடெல்லி, இந்தியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மானுடவியல் கல்வி | | |
|---|---|---|
| பேரா. எம்.ஈ.எஸ். பெரேரா | ஆசிரியர் கல்வியில் தர உத்தரவாதம் பற்றிய செயலமர்வு | இ.தி.ப. மற்றும் கனடா, பொது நலவாயக் கற்றலினால் ஒழுங்கு செய்யப்பட்டது. |
| செல்வி எஸ்.என்.ராஜேந்திரம் | ஆங்கிலமொழி கற்பித்தல் மற்றும் ஐசிரி | IPBA, கோலாலம்பூர், மலேசியா |
| திரு. எல்.எம்.கே. பண்டார<br>திரு. எஸ்.எஸ். தஹநாயக்க | கல்வி முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | NUEPA, புதுடெல்லி, இந்தியா |
| திருமதி ஈ.எஸ். நெரஞ்சனி | உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழை (CTHE) பூர்த்தி செய்தல் | பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொ.ப. |
| **விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வி** | | |
| பேரா. டபிள்யு.ஜி. கருணாரத்ன | பாடசாலை விஞ்ஞானக் கருத்திட்டம் பற்றிய செயலமர்வு | NSF |
| திரு. பீ.கே.ஜே.ஈ. நோனிஸ் | கல்வி முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | NUEPA, புதுடெல்லி, இந்தியா |
| திருமதி டி.வி.கே.பீ.செனெவிரத்ன | உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழை (CTHE) பூர்த்தி செய்தல் | பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொ.ப. |

### அட்டவணை V–11: பட்டப்பின் பட்டங்களுக்குப் படிக்கின்ற கல்விசார் பணியாளரின் நிலை

| துறை | பிஎச்.டி பட்டம் தொடருகின்றது | முதுமாணிப் பட்டம் தொடருகின்றது | முதுமாணிப் பட்டம் பூர்த்தியானது |
|---|---|---|---|
| கல்வி உளவியல் | 01 | 01 | - |
| சமூக விஞ்ஞானக் கல்வி | 03 | 01 | - |
| மானுடவியல் கல்வி | - | 03 | - |
| விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வி | - | 02 | **01** |

### அட்டவணை V–12: பட்ட மாணவர் மற்றும் பட்டப்பின் கல்விநெறி இணைப்பாளர்கள்

| கல்விநெறி | பெயரும் துறையும் |
|---|---|
| அடிப்படைக் கல்விநெறி | திரு. எல்.எம்.கே. பண்டார (மானுடவியல்) |
| கல்வி இளமாணி பாகம் I | திரு. எஸ். கலகம (சமூக விஞ்ஞானம்) |
| பாகம் II | கலா. ஏ.ஏ. ஜயவர்தன (சமூக விஞ்ஞானம்) |
| பாகம் III | திரு. டபிள்யு. சந்திரதாச (கல்வி உளவியல்) |
| PGDE (முழுநேரம்) சிங்களமூலம் | திரு. சீ. கஸ்தூரியாரச்சி (சமூக விஞ்ஞானம்) |
| PGDE (முழுநேரம்) தமிழ்மூலம் | கலா. எம். கருணாநிதி (சமூக விஞ்ஞானம்) |
| PGDE (முழுநேரம்) ஆங்கிலமூலம் | செல்வி எஸ். ராஜேந்திரம் (மானுடவியல்) |
| PGDE (வார இறுதி) சிங்களமூலம் | திரு. டபிள்யு.எம். பிரக்னதர்ஷன (விஞ்ஞான, தொழில் நுட்பம்)<br>திரு. எஸ். கலகம (சமூக விஞ்ஞானம்) |
| PGDE (பகுதி நேரம்) ஆங்கிலமூலம் | கலா. எம். விதானபத்திரண (கல்வி உளவியல்) |
| PGD சமூக அபிவிருத்தியில் | கலா. ஏ.ஏ. ஜயவர்தன (சமூக விஞ்ஞானம்) |
| PGD உளவளத்துணையில் | பேரா. ஆர். அபேபால (கல்வி உளவியல்)<br>திருமதி ஆர்.டி.சி. நிரோஷினி |
| M.Ed. | திரு.என்.வீ.கருணாசேன (விஞ்ஞான, தொழில்நுட்பம்) |
| M.Phil. | பேரா. ஆர். அபேபால (கல்வி உளவியல்) |
| Ph. D. | பேரா. எஸ். சந்திரசேகரம் (சமூக விஞ்ஞானம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளரின் பங்களிப்பு

கலா. எம்.ஈ.எஸ். பெரேரா (மானுடவியல் கல்வி)
திரு. டி.ஆர். அத்துகோறள (மானுடவியல் கல்வி)
பேரா. எஸ். சந்திரசேகரம் (சமூக விஞ்ஞானக் கல்வி)
கலா. ஏ.ஏ. ஜயவர்தன (சமூக விஞ்ஞானக் கல்வி)
கலா. எம். கருணாநிதி (சமூக விஞ்ஞானக் கல்வி)
கலா. டபிள்யு. சந்திரதாச (கல்வி உளவியல்)
கலா. எம். விதானபத்திரண (கல்வி உளவியல்)
பேரா. டபிள்யு.ஜி. கருணாரத்ன (விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வி)

### அட்டவணை V–13: வெளியீடுகளும் சமர்ப்பணங்களும்

*(துறை வாரியாகத் தொகுக்கப்பட்டது)*

| வெளியீடுகள் | துறை | | | |
|---|---|---|---|---|
| | மானுடவியல் கல்வி | சமூக விஞ்ஞானக் கல்வி | கல்வி உளவியல் | விஞ்ஞான, தொழில்நுட்ப கல்வி |
| வெளியீடு | 04 | 03 | 02 | 02 |
| நூல்கள் | 05 | - | 02 | - |
| ஆற்றுப்படுத்தல்கள்/ சிறப்புப் பேருரைகள் | 02 | 01 | - | - |
| ஆராய்ச்சி | 02 | 06 | 02 | 02 |

## மாணவர் அலுவல்கள்

பீட மாணவர் சங்கத்தில் பதவிவகிப்போர் 2008.09.02ஆந் தேதியன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பீடத்துக்கு 2008ஆம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட உலக வங்கி நிதிகளின் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதன்மூலம் விரிவுரை அறை இல. 1ஐ புதுப்பிப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. சட்ட பீடம்

## அறிமுகம்

திரு. என். செல்வக்குமரன் சட்ட பீடத்தின் பீடாதிபதியாகத் தொடர்ந்ததுடன், கலா. டி. உடகமவும் சட்டத்துறைத் தலைவராக 14.08.2008 வரையும் தொடர்ந்தார். திருமதி ஐ. நாணாயக்கார 15.08.2008 முதல் சட்டத்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

திருமதி இந்திரா நாணாயக்கார பரீட்சைகளின் இணைப்பாளராக 14.08.2008 வரை கடமையாற்றியதைத் தொடர்ந்து, திருமதி ஆர். விஜேசேகர 01.09.2008 முதல் ஈராண்டு காலப்பகுதிக்குப் பரீட்சைகளின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். திருமதி எச்.கே.எஸ்.டி. கீகனகே சட்ட பீடத்தின் உதவிப் பதிவாளராகக் கடமையேற்றார். திரு. என். செல்வக்குமரன் 2008 சனவரி முதல் இப்பல்கலைக் கழகத்தின் விளையாட்டுச் சபைத் தவிசாளராக நியமிக்கப்பட்டார். அவர் 2008 ஆகஸ்டில் இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகவும் மேன்மைதங்கிய சனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

## பீடத்தின் 60ஆவது ஆண்டுநிறைவுக் கொண்டாட்டங்கள்

இவ்வாண்டில் பீடத்தின் 60ஆவது ஆண்டுநிறைவுக் கொண்டாட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இக்கொண்டாட்டங்களைக் குறிக்குமுகமாகப் பீடம் கல்விசார் அமர்வுகள், கண்காட்சி, பேருரை, மாணவர் செயற்றிற நிகழ்ச்சி, சட்ட உதவிக் கிளினிக்குகள் ஆகியவற்றை நடத்தியது. கல்விசார் அமர்வுகள் 2008 ஒக்ரோபர் 24ஆம், 25ஆம் தேதிகளில் இடம்பெற்றன. சட்டக் களத்தைச் சேர்ந்த அனேக கல்வியறிவாளிகள் இவ்வமர்வுகளில் கட்டுரைகள் சமர்ப்பித்துப் பங்குபற்றினர்.

## தேசிய சட்ட வாரம்

பீடமானது இலங்கை வழக்கறிஞர் சங்கத்துடன் இணைந்து "தேசிய சட்ட வாரத்தை" சட்ட பீடத்தில் ஒழுங்குசெய்தது. இது 2008 மார்ச் 15ஆம், 16ஆந் தேதிகளில் நடத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வுக் கண்காட்சி மற்றும் இலவச சட்ட ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியது.

## பணியாளர் பற்றிய தகவல்

கல்விசார் பணியாளர் தொகுதியில் ஒரு (01) துணைப் பேராசிரியர், பதினான்கு (14) சிரேஷ்ட விரிவுரையாளர்கள், இரண்டு (02) விரிவுரையாளர்கள் மற்றும் பன்னிரண்டு (12) தகுதிகாண்நிலை விரிவுரையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய இருபத்தொன்பது (29) நிரந்தர உறுப்பினர்கள் இருந்தனர்.

செல்வி நிர்மலா பெரேரா தொடர்ந்தும் ஏழாட்டை விடுப்பிலிருந்தார். கலா. டி. உடகமவுக்கு ஒக்ரோபர் முதல் ஏழாட்டை விடுப்பு வழங்கப்பட்டது. கலா. (வண.) என். டயஸ் இலங்கையில் கழிப்பதற்கான ஏழாட்டை விடுப்பிலிருந்தார்.

## கூட்டங்கள்

இவ்வாண்டில் பீடச்சபை பதின்மூன்று (13) தடவைகள் கூடியதுடன், உயர் பட்டக்குழு பதின்மூன்று (13) கூட்டங்களையும் நடத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை V–14: பட்டப்பின் பட்டங்களுக்குப் படிக்கின்ற கல்விசார் பணியாளர் நிலை

| பீடம் | பீஎச்.டி. | முதுமாணி |
|---|---|---|
| சட்டம் | 02 | 03 |

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டம்

2007/08ஆம் கல்வியாண்டு 01.10.2007இல் ஆரம்பமாகி 2008ஆம் ஆண்டு பூராவும் தொடர்ந்தது. வருடாந்தப் பரீட்சைகள் 09.06.2008இல் ஆரம்பமாகி 30.07.2008இல் முடிவுற்றன. மாணவர்கள் 2008 ஒக்ரோபரில் இலங்கைச் சட்டக் கல்லூரியால் நடத்தப்பட்ட சட்டத்தரணிகளின் அனுமதிக்கான இறுதிப் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக ஆண்டு IV பரீட்சைப் பெறுபேறுகள் மறுதர மாணவர் பெறுபேறுகளுடன் 2007 ஆகஸ்டில் வெளியிடப்பட்டன.

பீடத்தின் 2008/09ஆம் கல்வியாண்டு 06.10.2008இல் ஆரம்பமாகியபோதிலும், முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான சட்டப் படிப்புகளைத் தொடங்குவதற்கு முன்னர், ஒன்றரை மாதகாலம் நீடித்த தீவிர ஆங்கில நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையிலிருந்து பல்கலைக்கழக வாழ்க்கைக்குத் தம்மை இசைவுபடுத்திக்கொள்ளும்வகையில் அவர்களை ஆற்றுப் படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கும் இக்காலப்பகுதி பயன்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் வெளியேயும் உள்ள அனுபவமும் தகைமையும் கொண்ட அனேக வளப்பகிர்வாளர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர்.

அட்டவணை V–15: பட்ட மாணவர் சேர்ப்பு

*(கல்வி ஆண்டு மற்றும் பால் ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| கல்விநெறியும் கல்வி ஆண்டும் | மாணவர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் |
| எல்எல்பி 1ஆம் ஆண்டு | 39 | 162 | 228* |
| 2ஆம் ஆண்டு | 39 | 172 | 211 |
| 3ஆம் ஆண்டு | 38 | 157 | 195 |
| 4ஆம் ஆண்டு | 33 | 153 | 186 |

* *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து இடமாற்றப்பட்ட 27 மாணவர்களுடன்.*

## பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள்

பீடம் 2007இல் தொடங்கிய அதன் சட்ட முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தது. இறுதிப்பரீட்சை 2008 யூன் 07 முதல் யூலை 05 வரை நடத்தப்பட்டது.

வழங்கப்பட்ட பாடங்களில் உயர்தரக் கம்பனிச் சட்டம், வங்கித் தொழில் மற்றும் நிதி நிறுவனங்கள், சர்வதேச வணிக நடுத்தீர்ப்பு, சர்வதேச வர்த்தகச் சட்டம், தொழில் சட்டம், அரசியலமைப்புச் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், கடல் சட்டம், சிறுவர் உரிமைகள் சட்டம், பெண்களின் உரிமைச் சட்டம் என்பவை அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007/08 நிகழ்ச்சித்திட்டத்துக்கான மொத்த மாணவர் எண்ணிக்கை 116. இவர்களில் 56 ஆண் மாணவர்களும் 51 பெண் மாணவிகளும் அடங்குவர்.

மாணவர் குழுமம் நீதித்துறை அலுவலர்கள், உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோக பூர்வமற்ற வழக்கறிஞர்கள், வணிக மற்றும் வங்கித் துறைகளிலுள்ள சட்ட அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

ஆண்டு 2005/06 எல்எல்எம் நிகழ்ச்சித்திட்டப் பெறுபேறுகள் 2008 யூனில் வெளியிடப்பட்டன. சட்டத்தில் எம்.பில். மற்றும் பீ.எச்டி. நிகழ்ச்சித்திட்டங்கள் வழமைபோன்று ஆண்டுபூராவும் தொடர்ந்தன.

## சமூகசேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

சட்ட பீடம் அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் நீதிக்கான சம வாய்ப்புக் கருத்திட்டத்தின் (UNDP) அனுசரணையுடன் சட்ட உதவியுடனான அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்திருந்தது. இவை பீடத்தின் 60வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகப் புத்தளம், எம்பிலிபிட்டிய, ஹட்டன், நாத்தாண்டிய ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டன.

## நிலையங்களின் சாதனைகள்

மனித உரிமைக் கற்கை நிலையம் (CSHR) அனேக வெளிஎட்டல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியதுடன், அதன் நூலகத் திரட்டுகளையும் அதிகரித்தது. அவர்கள் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தி மனித உரிமைகள் தினத்தையும் கொண்டாடினர்.

### அட்டவணை V–16: வெளியீடுகளும் சமர்ப்பணங்களும்

| பீடம் | வெளியீடுகள் | ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் சிறப்புப் பேருரைகள் |
|---|---|---|
| சட்டம் | 04 | 21 |

## உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2008ஆம் ஆண்டில் NLT கட்டடக் கூரையின் ஒருபகுதி புனர்நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. முகாமைத்துவ, நிதிப்பீடம்

## அறிமுகம்

முகாமைத்துவ, நிதிப் பீடம் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு ஆகிய இரு மட்டங்களிலும் அதன் கல்விநெறிகளுக்கு அதிகரித்துவரும் கேள்வியைக் கண்கூடாகக் கண்டது. இது பட்ட மாணவர் மட்டத்தில் கடந்த ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் Z-புள்ளிமட்டங்கள் அதிகரித்துவருதலின் ஊடாகவும், எம்பிஏ நிகழ்ச்சித்திட்டத்துக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துவருதலின் ஊடாகவும் தெளிவாகப் பிரதிபலிக்கப்படுகின்றது. விசேடமாகக் கட்டட இடவசதி தொடர்பில் அனேக புறக்கட்டுப்பாடுகளைப் பீடம் எதிர்நோக்கிய போதிலும் இதற்குப் பதிற்செயலாக அது மாணவர்களின் வருடாந்த உள்ளெடுப்பை அடுத்த தொகுதி மாணவர்களுடன் 425 வரை அதிகரிப்பதற்கு உடன்பட்டுள்ளது. தற்போது படிப்படியாக அதிகரித்துவரும் மாணவர் உள்ளெடுப்புக்குத் துணையாதரவாகப் பீடம் அதன் முக்கிய கல்விநெறிகள் எல்லாவற்றையும் முப்படியாக வழங்குவதுடன் தற்போதுள்ள கட்டட இடவசதியின் பயன்பாட்டையும் பெரிதும் உகந்ததாக்கியுள்ளது. நடப்பில் நிலவுகின்ற பாதுகாப்பு நிலைமையின் நிமித்தம் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டின் விளைவாகப் பீடம் அதன் நடவடிக்கைகளைக் குறுக்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இச்சிரமங்கள் எல்லாவற்றின் மத்தியிலும் பீடம் எஞ்சித் தேங்கியிருந்த எல்லா மாணவர்களையும் பூரணமாகச் சேர்த்துக்கொண்டுள்ளது. கடைசி இரட்டைத்தொகுதி மாணவர்கள் 2008ஆம் ஆண்டில் பட்டம் பெற்றனர். பீடம் அதன் பட்ட மாணவர் நிகழ்ச்சித் திட்டத்தைத் தனியொரு மொழிமூலமாக, அதாவது ஆங்கில மொழிமூலமாக, ஒருமைப்படுத்தியதன் நன்மைகளை அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. பீடத்தால் உருவாக்கப்படும் பட்டதாரிகள் பெருமளவுக்குத் தொழிலுக்கமர்த்தப்படக்கூடியவர் களாகியுள்ளனர்.

## படிநிலைப்படுத்தல் - உலகில் மிகச்சிறந்த 1,000 வியாபாரக் கல்விக்கூடங்கள

கல்விசார் விடயங்களுக்கு உலகளாவிய ஒரு முக்கிய தகவல்மையமான ***EDUNIVERSAL*** உலகெங்கும் மிகச்சிறந்த 1,000 வியாபாரக் கல்விக்கூடங்கள் (2008) மத்தியில் பீடத்தை நிரல்படுத்தியுள்ளமையை, பீடத்தின் குறுகிய வரலாற்றுக் காலத்தினுள் ஈடு இணையற்ற ஒரு சாதனையாக, அதன் பங்கீடுபாட்டாளர்கள் அனைவரினதும் கூட்டுமுயற்சிக்கான விலைமதிப்பற்ற ஒரு வெகுமதியாகக் கருதலாம். இத்தெரிவுக்கு, கல்வி மட்டத்தின் உன்னதநிலையும் சர்வதேசப் பரிமாணமும், அதாவது அந்நிறுவனங்களின் சர்வதேச செல்வாக்கும், அடிப்படையா யிருந்துள்ளன. இத்தெரிவு ஆராய்ச்சி, பணி மற்றும் 9 புவியியல் பிரதேசங்களை (ஆபிரிக்கா, வட அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா, மத்திய ஆசியா, இயுரேசியாவும் மத்திய கிழக்கும், கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா, தூரகிழக்கு, ஓஷானியா) சேர்ந்த புகழ்பெற்ற சர்வதேச நிபுணர்களினதும் ஐக்கிய நாடுகள் முறைமையின் கல்விசார் கவுன்சில் பிரதிநிதிகளினதும் பங்கேற்பு ஆகியவற்றினூடாக மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய நிபுணத்துவத்தின் ஒரு வெளிப்பாடாகும்.

கொழும்பு முகாமைத்துவ, நிதிப் பீடம்தான் இலங்கையில் பல்கலைக்கழகத் துறையில் இம்முதன்மையான உயரத்தை எட்டிய முதலாவதும் ஒன்றேயொன் றானதுமான முகாமைத்துவப் பீடமாகும். ***EDUNIVERSAL*** இந்த 1,000 கல்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடங்களை, உலக சனத்தொகையின் 97%க்குக் கூடியவர்கள் வசிக்கின்ற, மொத்தம் 151 நாடுகளை உள்ளடக்கிய, 9 பல்கலைக்கழக வலயங்களிலிருந்து தெரிவு செய்துள்ளது. கோட்டா முறையொன்றின் அடிப்படையில் மிக முக்கியமான 1,000 கல்விக்கூடங்கள் என்று ***EDUNIVERSAL*** உத்தியோகபூர்வ அறிவிப்பு தெரிவிக்கின்றது. அதாவது, உத்தியோகபூர்வ தெரிவின் ஒரு பகுதியாயுள்ளமை, சம்பந்தப்பட்ட கல்விக்கூடத்தினாலும் நாட்டினாலும் அதன் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச செல்வாக்குக்குச் சாதகமாக எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் குறிக்கின்றது. மேலும் தகவல்கள்: www.eduniversal.net

## பணியாளர் பற்றிய தகவல்

கலா. பீ.எஸ்.எம். குணரத்ன முகாமைத்துவ, நிதிப் பீடத்தின் பீடாதிபதியாக 21.05.2008 முதல் மற்றுமொரு பதவிக்காலத்துக்கு மீளத் தெரிவு செய்யப்பட்டார். செல்வி எஸ். தம்பிராசா தொடர்ந்தும் பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகக் கடமையாற்றினார். திருமதி எம்.ஏ.பீ.பீ. சந்திரதாச 07.01.2008 முதல் பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டார்.

கலா. ஏ.ஏ. அசீஸ் தமது ஏழாட்டை விடுப்பைப் பயன்படுத்துவதற்காக விடுவிக்கப் பட்டதனால், திரு. டி.எம்.எஸ். தசநாயக்க வணிகம் மற்றும் நிதித் தலைவராக 14.08.2008 முதல் நியமிக்கப்பட்டார். திரு. ஜி. ரணவீரகே, கலா. (திருமதி) கே. திசாநாயக்க, திரு. டபிள்யு.ஜீ. பிரேமரத்ன, கலா. என்.என்.ஜே. நவரத்ன மற்றும் கலா. எச்.என்.பீ. ஜயசிங்க ஆகியோர் முறையே கணக்கீடு, முகாமைத்துவ மற்றும் நிறுவனக் கற்கைகள், சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம், நிதி மற்றும் வியாபாரப் பொருளியல் ஆகிய துறைகளின் தலைவர்களாகத் தொடர்ந்தனர். திரு. டபிள்யு.ஏ.எஸ்.பீ. வீரதுங்க கல்விசார் அலுவல்கள் இணைப்பாளராக 01.02.2008 முதல் நியமிக்கப்பட்டார்.

நிரந்தர கல்விசார் பணியாளர் தொகுதியில் இரண்டு (02) துணைப் பேராசிரியர்கள், முப்பது (30) சிரேஷ்ட விரிவுரையாளர்கள், எட்டு (08) விரிவுரையாளர்கள், மற்றும் எட்டு (08) தகுதிகாண்நிலை விரிவுரையாளர்கள் ஆகியோரைக்கொண்ட ஐப்பது (50) உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களுடன் இரண்டு (02) கணினிப் போதனாசிரியர்களும் பீடத்திலுள்ளனர்.

### அட்டவணை V-17: நியமனங்களும் பதவியுயர்வுகளும்

| துறை மற்றும் பெயர் | பதவிப்பெயர் | செயற்படும் திகதி |
|---|---|---|
| **பதவியுயர்வுகள்** | | |
| **முகாமைத்துவ, நிறுவனக் கற்கைகள்** | | |
| திரு. பி. நிஷாந்த | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 01.11.2008 |
| கலா. ஜீ.ஏ.ரி.ஆர்.பெரேரா | விரிவுரையாளர் | 01.11.2008 |
| **கணக்கீடு** | | |
| திரு. ரி.என். குணரத்ன | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 16.12.2007 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டங்கள்

மீளாய்வாண்டில் பீடச் சபை பத்து (09) தடவைகள் கூடியது. துறைக் கூட்டங்களுக்கு மேலதிகமாகத் துறைகளுக்கிடையிலான கூட்டுப் பணியாளர் கூட்டங்களும் ஒழுங்காக நடத்தப்பட்டன. பாடவிதான அபிவிருத்திக் குழு, பீடப் பரீட்சைக் குழு, உயர் பட்டக் குழு, பட்டப்பின் மற்றும் தொழில் இடைநிலை அபிவிருத்தி அலகின் முகாமைச் சபை என்பவை அவற்றின் வழமையான கூட்டங்களை நடத்தின.

## பணியாளர் அபிவிருத்தி

### அட்டவணை V-18: பட்டப்பின் கல்விநெறிகளில் கல்விசார் பணியாளரின் பங்கேற்பு

| பட்டப்பின் கல்விநெறி | பூர்த்தியானது | தொடர்கின்றது | ஆரம்பமானது |
|---|---|---|---|
| பீஎச்.டி. | - | 15 | 01 |
| எம்.பில். | - | 02 | - |
| எம். எகொன். | - | 01 | - |
| எம்பிஏ | 02 | 06 | 02 |
| மொத்தம் | 02 | 24 | 03 |

பீடத்தின் கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்கள் பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட வழமையான மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பயன்பெற்றனர். கல்விசார் பணியாளர் நாட்டினுள் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றினர்.

### அட்டவணை V–19: பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பு

| கல்விநெறி | பணியாளர் எண். | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் |
| உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE) | 03 | 02 | 05 |

## சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

இவ்வாண்டில் பீடம் அதன் இரண்டாவது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை வெற்றிகரமாக ஒழுங்குசெய்தது. இதில் இத்துறையிலுள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொண்டனர். கலா. எச்.என்.பீ. ஜயசிங்க, கலா. கே. கஜேந்திரா ஆகியோர் மாநாட்டின் இணைப்பாளர்களாகச் செயற்பட்டனர். பீடம் கொழும்பு வியாபாரக் குறிப்பேடு தொகுதி 1 இதழ் 2ஐ 12.12.2008இல் நடைபெற்ற வருடாந்த ஆராய்ச்சி அமர்வில் வெளியிட்டது.

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

ஒரு புதிய தொகுதி மாணவர்கள் (2007 உ/த) 2008.10.29ஆந் தேதியன்று பீடத்துக்கு அனுமதிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நீடிப்புக் கல்விநெறிகள

பட்டப்பின் மற்றும் தொழில் இடைநிலை அபிவிருத்தி அலகு எம்பிஏ நிகழ்ச்சித்திட்டத்தினதும் வியாபார நிருவாகத்தில் நிறைவேற்று டிப்ளோமாவினதும் கல்விசார் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாயுள்ளது. 2008ஆம் ஆண்டில் திரு. ஜே. ஏ. எஸ். கே. ஜயக்கொடி அலகின் இணைப்பாளராக தொடர்ந்தார்.

இவ்வாண்டில் எல்லா நிகழ்ச்சித்திட்டங்களும் தடங்கலேதுமின்றி வெற்றிகரமாக நடத்தப்பட்டன. நான்கு எம்பிஏ நிகழ்ச்சித்திட்டங்களுக்குமென (2008/10) மொத்தம் 175 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர் (கீழே அட்டவணை V-20).

வழமையான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாகத் தொடர்ச்சியான கல்விநெறி வேலை மதிப்பீடுகள், வளாகத்துக்கு வெளியே, நிறுவன/கைத்தொழில் அடிப்படையிலான ஒப்படைகள் மற்றும் குறைநிரப்புகின்ற அதிதி விரிவுரைகள் என்பவை இந்நிகழ்ச்சித்திட்டங்களின் பிரபல்யமான அம்சங்களாயிருந்தன. பீடத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட வதிவுச் செயலமர்வுகள் எம்பிஏ பரீட்சார்த்திகளுக்குக் கற்றல் உந்துகையைத் துரிதப்படுத்துகின்ற வாய்ப்பைக் கொண்ட தனித்துவமான ஓர் அனுபவத்தை வழங்கின. கைத்தொழில் அனுபவமிக்க கணிசமான எண்ணிக்கையிலான தொழில்சார் நிபுணர்கள் வளப்பகிர்வாளர்களாகவும் வருகைதரும் விரிவுரையாளர்களாகவும் பங்குபற்றினர்.

### அட்டவணை V–20: எம்பிஏ, பட்டப்பின் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாணவர் சேர்ப்பு

| நிகழ்ச்சித்திட்டம் | மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|
| பீஎச்.டி. | 01 | |
| | 2007 – 2009 | 2008 – 2010 |
| எம்பிஏ | 76 | 71 |
| எம்பிஏ நிதியில் | 54 | 55 |
| எம்பிஏ சந்தைப்படுத்தலில் | 24 | 34 |
| எம்பிஏ ம. வ. முகாமையில் | 12 | 15 |
| ஈடிபிஏ நிகழ்ச்சித்திட்டம் | 39 | |
| **மொத்தம்** | 381 | |

### அட்டவணை V–21: வெளியீடுகளும் சமர்ப்பணங்களும்

| துறை | சமர்ப்பணங்கள்/ வெளியீடுகள்/ தெரிவிப்புகள்/ ஆராய்ச்சி/பொழிப்பு குறிப்பேடுகள் | தேசிய, சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகள் | கட்டுரைகள் மற்றும் நூல்கள் | அழைப்பு விரிவுரைகள் |
|---|---|---|---|---|
| கணக்கீடு | - | 04 | - | - |
| வியாபாரப் பொருளியல் | 02 | 04 | 01 | 02 |
| நிதி | - | 07 | 01 | 03 |
| மனிதவள முகாமைத்துவம் | - | 02 | - | 01 |
| முகாமைத்துவ, நிறுவனக் கற்கைகள் | 05 | 01 | 01 | - |
| சந்தைப்படுத்தல் | - | 06 | - | - |
| **மொத்தம்** | 07 | 25 | 03 | 06 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. மருத்துவ பீடம்

பேராசிரியர் துலித என். பர்னாந்து பீடத்தின் பீடாதிபதியாக 07.08.2008 வரை கடமையாற்றினார். பேராசிரியர் ஹர்ஷலால் ஆர். செனெவிரத்ன 08.08.2008 முதல் பீடத்தின் புதிய பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவ்வாண்டில் திரு. பீ. எம். எஸ். பண்டார பிரதிப்ப பதிவாளராகப் பதவியுயர்த்தப்பட்டதுடன் செல்வி எச்.ஜி.டி. ஸ்ரீயானி உதவிப் பதிவாளராகத் தொடர்ந்தார்.

மருத்துவ கண்காட்சி (MEDEX) மற்றும் மாணவர் மருத்துவ குறிப்பேடு தொடக்கி வைக்கப்படல் என்பவை இவ்வாண்டின் முனையம்சங்களாயிருந்தன.

கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) 26.02.2008 முதல் 01.03.2008 வரை நடத்தப்பட்டது. வெற்றிகரமாக முடிவுற்ற இந்நிகழ்ச்சிமூலம் அண்ணளவாக ரூ. 8 மில்லியன் ஈட்டப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 100,000க்கும் கூடிய மக்கள் கலந்துகொண்டனர். இவ்வருமானம் மாணவர்களுக்கான வசதிகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும்.

மாணவர்கள் நிகழ்கால மருத்துவ ஆராய்ச்சி, அபிப்பிராயம் மற்றும் சிந்தனைகளை ஏனைய மாணவர்களுக்கும் கல்விசார் பணியாள்தொகுதி உறுப்பினர்களுக்கும் வருகைதரும் உசாத்துணையாளர்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு உட்படுத்திய ஒரு சாதனத்தை வழங்கும் நோக்கத்தைக்கொண்ட முதன்முதலான மாணவர் மருத்துவ குறிப்பேட்டின் தொகுதி I 2008 யூலையில் வெளியிடப்பட்டது.

உடலமைப்பியல் வளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்துக்காக 10.11.2008இல் தொடங்கிய பதிகால் அமைக்கும் வேலை 180 நாட்களினுள் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பிணிஆய்வு மருத்துவக் கட்டடத்தின் இரு தளங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. முழுக் கட்டடமும் 2009இன் தொடக்கத்தில் தயாராயிருக்கும்.

ப.மா. ஆணைக்குழுவால் விதந்துரைக்கப்பட்டவாறு எல்லாப் பல்கலைக்கழகங் களுக்கும் பொதுவான ஒரு காலண்டரைப் பின்பற்றுவதற்கும் பீடம் திட்டமிடுகின்றது. இக்காலண்டர் தேதிகள் ஆண்டின் முடிவளவில் தயாராயிருக்கும்.

புதிய பாடவிதானத்தைப் பின்பற்றிய 9ஆவது மருத்துவ மாணவர் தொகுதி (உ.த./2001 தொகுதி) இவ்வாண்டின்போது தமது படிப்புகளைப் பூர்த்திசெய்தது.

### பணியும் நோக்கும்

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடமே தென்னாசியாவில் இரண்டாவது பழைமைவாய்ந்த மருத்துவப் பாடசாலை. அத்துடன், இந்நாட்டுப் பல்கலைக்கழகக் கல்வியின் முன்னோடி. இப்பீடத்தின் பணி, *"திறமை, இரக்கம் மற்றும் அக்கறையுடன் தனியாளினதும் சமுதாயத்தினதும் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்யப் பங்களிக்கும் ஒரு பட்டதாரியை அபிவிருத்தி செய்தல்"* எம்.பி.பி.எஸ். பாட விதானக் குறிக்கோள்கள் பீடத்தின் பணியை நிறைவேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பீடத்தின் எதிர்காலநோக்கு 2010ஆம் ஆண்டிற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாசியாவின் ஆகச் சிறந்த மருத்துவப் பாடசாலையாக அபிவிருத்தியடைதல். இந்த எதிர்கால நோக்கை மெய்யாகக் காணும்பொருட்டுப் பீடம் மீளாய்வாண்டில் தற்போதுள்ள பௌதிக உட்கட்டமைப்பையும் கற்றல் சூழலையும் அபிவிருத்தி செய்தலிலும் மருத்துவம் தொடர்பான துறையில் உயர் கல்வியைப் பல்வகைப் படுத்துதலிலும் பல்வேறு தொடக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைப்புகளைத் தாபித்தல், பீடத்தின் முகாமைத்துவக் கட்டமைப்பை இயலெளிமைப்படுத்துவதற்கான IRQUE கருத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட உசாத்துணையாளர்களான SLIDA விதந்துரைத்தவாறு பீடத்தின் பாடவிதான அமுலாக்கல் குழுவை (CIC) தாபித்தல் என்பவை அடங்கும். CIC இன் பிரதான பொறுப்பு பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானங்களுக்கிணங்கப் பாடவிதானத்தைச் சீராகவும், பயனுறுதியுள்ளமுறையிலும் அமுல்செய்தலும் கல்வித்துறைகளுடன் நல்ல உறவையும் ஒத்திசைவையும் கட்டியெழுப்புதலுமாகும்.

## பணியாளர்

2008இல் நான்கு (04) சிரேஷ்ட பேராசிரியர்கள், பதினாறு (16) பேராசிரியர்கள், ஐந்து (05) துணைப் பேராசிரியர்கள், ஐம்பத்தாறு (56) சிரேஷ்ட விரிவுரையாளர்கள், நாற்பத்தொன்பது (49) விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு (01) ஆய்வு அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய நூற்று முப்பத்தொரு (131) நிரந்தரக் கல்விசார் பணியாளர் இருந்தனர்.

நீடிக்கப்பட்ட பீடம் கொழும்பு வைத்தியசாலைகளின் தொகுதியிலுள்ள 90 உசாத்துணை மருத்துவர்கள், கொழும்பிலுள்ள சட்ட வைத்திய அதிகாரிகள், மஹரகம தேசிய புற்றுநோய் நிறுவகம் ஆகியவற்றின் வைத்திய அதிகாரிகள், மாவட்ட வைத்தியசாலைகள், சுற்றயல் வைத்திய அலகுகள், மாநகரசபை மருந்தகங்கள் ஆகியவற்றின் வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆகியோரையும் சுமார் 14 பொது வைத்தியத் தொழில் புரிபவர்களையும் கொண்டுள்ளது.

### அட்டவணை V–22: புதிய நியமனங்கள், பதவியுயர்வுகள், பதவி விலகல்கள் மற்றும் இளைப்பாறல்கள்

| பெயர் | பதவிப்பெயர் | துறை |
|---|---|---|
| **புதிய நியமனங்கள்** | | |
| கலா. பீ.எச்.ஐ.யு. வைத்யதிலக | தகுதிகாண் விரிவுரையாளர் | உயிர் இரசாயனவியல் |
| கலா. எம்.ஆர். ஹனிபா | தகுதிகாண் விரிவுரையாளர் | பீடாதிபதியின் அலுவலகம் |
| கலா. எம்.என். லூக்காஸ் | தகுதிகாண் விரிவுரையாளர் | குழந்தை மருத்துவம் |
| **பதவியுயர்வுகள்** | | |
| பேரா. டி.என். சமரசேகர | அறுவை மருத்துவப் பேராசிரியர் (தலைவர்) | அறுவை மருத்துவம் |
| கலா. ஏ. களுஆரச்சி | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | மகப்பேற்றியல், பெண்நோயியல் |
| கலா. டி.ஜே.ஆர். கொலொன்ன | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | மகப்பேற்றியல், பெண்நோயியல் |
| கலா. எச்.ஜே.எம். பெரேரா | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | சட்ட மருத்துவம் |
| கலா. எஸ். ராஜபக்ஷ | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | பிணிஆய்வு மருத்துவம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கலா. தீபிகா பர்னாந்து | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | ஒட்டுண்ணியியல் |
| கலா. ஆர். அஜந்தன் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | குழந்தை மருத்துவம் |
| கலா. எஸ். வாசலதந்திரி | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | உடற்றொழிலியல் |
| கலா. எம்.டி.ஜே. விஜயபண்டார | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | மருந்தாக்கவியல் |
| திரு. டபிள்யு. பத்திரண | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | மருந்தாக்கவியல் |
| கலா. ஏ.யு. அபயதீர | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | அறுவை மருத்துவம் |
| கலா. என்.ஆர். பெரேரா | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | நோயியல் |
| கலா. பீ. கலப்பத்தி | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | மருந்தாக்கவியல் |
| கலா. எச்.டபிள்யு.டபிள்யு.குணசேகர | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | உடலமைப்பியல் |
| கலா. மங்கள குணதிலக்க | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | உடற்றொழிலியல் |
| கலா. எஸ்.ஏ.ஏ.பீ. கருணாநாயக்க | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | பிணிஆய்வு மருத்துவம் |
| கலா. எல்.டி.ஜே.யு. சேனரத் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | சமூக மருத்துவம் |
| கலா. எம்.சி. வீரசிங்க | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | சமூக மருத்துவம் |
| கலா. என்.எம்.சி.கே. அரம்பேபொல | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | சமூக மருத்துவம் |
| கலா. என்.டி.என். மெண்டிஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | சட்ட மருத்துவம் |
| கலா. ஜி.ஆர். கொன்ஸ்ரன்ரைன் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | பிணிஆய்வு மருத்துவம் |
| **இளைப்பாறல்கள்** | | |
| பேரா. எஸ்.பீ. லமாபதுசூரிய | சிரேஷ்ட பேராசிரியர் | குழந்தை மருத்துவம் |
| **பதவி விலகல்கள்** | | |
| பேரா. பீ.ஜே.ஜே.எப். பெரேரா | துணைப் பேராசிரியர் | உடலமைப்பியல் |
| கலா. ஹிமானி காரியவசம் | சிரேஷ்ட விரிவுரையாளர் | மருந்தாக்கவியல் |
| கலா. டி.ஜே.ஆர். கொலொன்ன | சிரேஷ்ட விரிவுரையாளர் | மகப்பேற்றியல், பெண்நோயியல் |

## கூட்டங்களும் குழுக்களும்

மீளாய்வாண்டில் பீடச்சபை பதினேழு (17) கூட்டங்களை நடத்தியது. பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழு, ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்கள் குழு, ஒழுக்கநெறி மீளாய்வுக் குழு, அனுமதிக் குழு என்பவை அவற்றின் வழமையான கூட்டங்களை நடத்தின. இக்குழுக்களின் கூட்டக் குறிப்புகள் பீடச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் மூதவைக்கு விதப்புரைகளும் செய்யப்பட்டன.

## பட்ட மாணவர் கல்வி

2007 உ.த. தொகுதியைச் சேர்ந்த 193 மருத்துவ மாணவர்களும் 27 இயன்மருத்துவ மாணவர்களும் தத்தமது பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்களை முறையே 2008 யூலையிலும் நவம்பரிலும் தொடங்கினர். 2008ஆம் ஆண்டு முடிவில் இருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை மருத்துவத்தில் 1,278 மற்றும் இயன்மருத்துவத்தில் 75 ஆகும்.

**மருந்தாக்கலில் பி.எஸ்சி. கல்விநெறி** விஞ்ஞான பீடத்துடன் இணைந்து நடத்தப் படுகின்றது. 2005/2006 உயர்தரத் தொகுதியிலிருந்து பதின்மூன்று (13) மாணவர்கள் இப்பீடத்தில் தமது பட்ட மாணவர் படிப்புகளைத் தொடங்கினர். இது இப்பட்டக் கல்விநெறியை மேற்கொள்கின்ற 10ஆவது தொகுதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவு மாணவர்கள்

பிரதானமாக ஜேர்மனி, ஐ.இ., அவுஸ்திரேலியா, நோர்வே மற்றும் நியுசீலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பாடத்துறைகளில் குறுகியகாலப் பயிற்சி (தெரிவு) நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

## நீடிப்புக் கல்விநெறிகள்

இப்பீடம் தொடர்ந்தும் ஐந்து (5) நீடிப்புக் கல்விநெறிகளை நடத்தியது.

**அட்டவணை V–23: நீடிப்புக் கல்விநெறியில் மாணவர்களின் சேர்ப்பு**

| கல்விநெறி | சேர்க்கப் பட்டோர் | தகைமை பெற்றோர் |
|---|---|---|
| உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல், மரபணுத் தொழில்நுட்பத்தில் எம்.எஸ்சி. | 06 | 02 |
| நச்சியலில் டிப்ளோமா | 50 | - |
| மருந்தியலில் டிப்ளோமா | - | 02 |
| தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் பட்டப்பின் டிப்ளோமா | 19 | 11 |
| தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் டிப்ளோமா கல்விநெறி | 08 | 05 |
| சுகாதார அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமா | 45 | - |
| அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தணித்தலில் சான்றிதழ் கல்விநெறி | 19 | 20* |

*மறுதரத் தொகுதியிலிருந்து ஒரு மாணவரை உள்ளடக்கியது

## பட்டப்பின் கல்வி

நீடிப்புக் கல்விநெறிகளாகக் கல்விநெறி வேலைமூலம் நடத்தப்படும் பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முற்றிலும் புறம்பாக பீடத்தால் வழங்கப்படும் ஏனைய பட்டப்பின்படிப்புப் பட்டங்கள் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டனவற்றுக்கு வரையறுக்கப்பட்டுள்ளன. மீளாய்வு ஆண்டில் மூன்று (3) மாணவர்கள் தத்துவக் கலாநிதி (பீ.எச்டி.) படிப்புகளைப் பூர்த்திசெய்தனர்.

இவ்வாண்டில் பீடத்திலுள்ள நிரந்தரக் கல்விசார் பணியாளர் படிப்புச் சபைகளின் உறுப்பினர்களாகத் தமது சேவைகளை வழங்கியதன்மூலம் மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கல்விசார் அம்சங்கள் எல்லாவற்றுக்கும் பொறுப்புடையவர்களாகக் கணிசமான பங்களிப்புகளைச் செய்துள்ளனர். அத்தகைய சேவைகள் பன்முகப்பட்டவை. அவையாவன, படிப்புச் சபைகளில் பங்கேற்றல், விரிவுரைகள் நடத்துதல், (பிணி ஆய்வுத்துறைகளில்) பயிற்றுனர்கள், ஆராய்ச்சி மேற்பார்வையாளர்கள் மற்றும் பரீட்சகர்களென்ற பங்கை நிறைவேற்றுதல் ஆதியனவாகும்.

## பணியாளர் செயல் நிறைவேற்றமும் அபிவிருத்தியும்

பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்படும் பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டில் பதினெட்டு (18) கல்விசார் பணியாளர்கள் கடல்கடந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் எழுபத்தெட்டு (78) பேர் சர்வதேச மாநாடுகளிலும் பங்குபற்றினர். பணியாளர் தொகுதியிலுள்ள பத்து (10) உறுப்பினர்கள் (கல்விசார் மற்றும் கல்விசாராத) அரசகருமமொழித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பேச்சுத் தமிழ்ப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தனர். ஒரு பணியாளர் சிங்களப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தார்.

## மாணவர் நடவடிக்கைகள் 2008

இவ்வாண்டில் மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட பல்வேறு கலாசார/சமூக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வெவ்வேறு தொகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்யும் பொறுப்பேற்றனர். இந்நடவடிக்கைகளில் புதியவர்களை வரவேற்றல், கூட்டணிக் கொண்டாட்டங்கள், பீட இசை நிகழ்ச்சி, சட்ட-மருத்துவக் கொண்டாட்டங்கள், 'நின்னத' என்பவை அடங்கும். மாணவர் விஞ்ஞான அமர்வுகள் 2008 ஒக்ரோபர் 23ஆம், 24ஆம் தேதிகளில் பீடத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பயனுறுதியுள்ள முறையில் செயற்படக்கூடியதாக (கல்விசார் மற்றும் கல்விசாராப்) பணியாளரின் பயிற்சிக்கும் இந்நிதிகள் பயன்படுத்தப்பட்டன.

## பீடத்துக்கு வருகைதந்தோர்

தாய்லாந்திலிருந்து கலா. ஜெஃப்றி மைக்கேல் சிமித்

ஐக்கிய இராச்சியத்திலிருந்து கலா. பொப் சிம்ப்சன்

## புறக்கட்டுப்பாடுகள்

ஆயிரத்து முந்நூறுக்கு மேற்பட்ட மாணவர் தொகையையும் சுமார் முந்நூற்றெண்பது கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளரையும் கொண்டுள்ளதனால் பீடத்தில் இடவசதி நெருக்கடியான ஒரு பிரச்சினையாயுள்ளது.

வரவு-செலவுத்திட்டக் கட்டுப்பாடுகளின் நிமித்தம் விரிவாக்க நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளன.

## தேசிய மட்டத்தில் கல்விசார் பணியாளரின் பங்களிப்பு

பேரா. ஜயசேகர, எம்.எம்.ஆர்.டபிள்யு.
பேரா. சுனேத்ரா அத்துகோறள
கலா. மத்திவ், சி.பீ.டி.டபிள்யு.
கலா. விஜேசுந்தர, டபிள்யு.எஸ்.எஸ்.
பேரா. பெர்னாந்து, டி.என்.
பேரா. ராஜபக்ஷ, எல்.
பேரா. செனெவிரத்ன, ஆர். த ஏ.
திருமதி லங்காதிலக, கே.
கலா. குணவர்தன, என்.எஸ்.
கலா. செனரத், எல்.டி.ஜே.யு.
கலா. பெர்னாந்து, டி.
கலா. செனரத், எல்.டி.ஜே.யு.
கலா. பத்திரண, எஸ்.
கலா. ஸ்ரீ ரங்கநாதன், எஸ்..
கலா. கொரியா, ஈ.
பேரா. பெர்னாந்துபுள்ளே, பி.எம்.ஆர்.
கலா. அபயதீர, ஏ.யு.
கலா. சமரசேகர, டி.டி.
கலா. கலப்பத்தி, பீ.
கலா. வீரசிங்க, எம்.சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா. வீரசிங்க, எம்.சி.
பேரா. றிஸ்வி ஷெரீஃப்
கலா. லனரோல், ஆர்.டி.
கலா. கட்டுலந்த, பீ.
பேரா. லமாபதுசூரிய, எஸ்.பீ.
பேரா. பெர்னாந்து, எஸ்.எஸ்.டி.
கலா. கருணாநாயக்க, பீ.
கலா. குணதுங்க, டபிள்யு.
பேரா. சேனாநாயக்க, எம்.பீ.
கலா. த சில்வா ஷம்யா
பேரா. பெரேரா, ஏ.ஜே.
கலா. அஜந்தன், ஆர்.
பேரா. செனெவிரத்ன, எச்.ஆர்.
கலா. சேனாநாயக்க, சி.பீ.
கலா. ரொட்றிகோ இஷானி
திருமதி விஜேரத்ன, எஸ்.
பேரா. ரந்தெனிய, சி.
கலா. விக்கிரமசிங்க, வி.பீ.
பேரா. கருணாவீர, என்.டி.
கலா. களுஆரச்சி, ஏ.
பேரா. மென்டிஸ், என்.
கலா. த சொய்ஸா, பீ.
பேரா. விஜேரத்ன, சி.என்.
பேரா. சமரசிங்க, டி.
பேரா. சமரசேகர, டி.என்.
கலா. தொடம்பஹல, எஸ்.எச்.
கலா. த சில்வா வருணி
கலா. குணவர்தன, என்.எஸ்.
பேரா. ஜயக்கொடி, ஆர்.எல்.
கலா. டயஸ், எம்.என்.ஜே.ஆர்.
கலா. அறம்பேபொல, சி.
பேரா. த ஆபுறூ, கே.
பேரா. விஜயரத்ன, எஸ்.எம்.
கலா. த சொய்சா, எம்.ஐ.எம்.
பேரா. அங்குணவெல, பீ.
கலா. பொன்னம்பெருமா, ஜீ.ஜீ.
கலா. கருணாதிலக்க, ஐ.எம்.

## சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளரின் பங்களிப்பு

பேரா. பெர்னாந்து, டி.என்.
பேரா. பெரேரா, ஏ.ஜே.
பேரா. செனெவிரத்ன, எச்.ஆர்.
பேரா. விஜேரத்ன, சி.என்.
கலா. தொடம்பஹல, எஸ்.எச்.
பேரா. லமாபதுசூரிய, எஸ்.பீ.
பேரா. கருணாவீர, என்.டி.
பேரா. பெர்னாந்துபுள்ளே, பி.எம்.ஆர்.
பேரா. த ஆபுறூ, கே.
கலா. காரியவசம், எச்.
திரு. பத்திரண, டபிள்யு.
கலா. விஜயபண்டார, எம்.டி.ஜே.
பேரா. மெண்டிஸ், என்.
பேரா. சமரசிங்க, டி.
கலா. கருணாதிலக, ஐ.எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை V–24: வெளியீடுகளும் சமர்ப்பிப்புகளும்

| துறை | சமர்ப்பிப்புகள்/ வெளியீடுகள்/ தெளிவிப்பு/ஆராய்ச்சிச்சுருக்கம் ; /சஞ்சிகை | மாநாடுகளில் வாசித்த ஆய்வுக் கட்டுரைகள்/ தேசிய மற்றும் சர்வதேச | அழைப்பு விரிவுரைகள் | அதிதி விரிவுரைகள் | பேருரைகள் |
|---|---|---|---|---|---|
| உடலமைப்பியல் | 05 | 01 | - | - | - |
| பிணி ஆய்வு மருத்துவம் | 12 | - | - | - | - |
| சமூக மருத்துவம் | 38 | 06 | 01 | - | 01 |
| சட்ட மருத்துவம் | 07 | - | - | - | - |
| மகப்பேற்றியல், பெண்நோயியல் | 67 | 33 | - | - | - |
| நுண்ணுயிரியல் | 12 | - | - | - | - |
| குழந்தை மருத்துவம் | 36 | - | - | - | - |
| ஒட்டுண்ணியியல் + MRU | 17 | - | - | - | - |
| நோயியல் | 12 | - | - | 11 | - |
| மருந்தாக்கவியல் | 10 | 03 | - | - | - |
| உடற்றொழிலியல் | 10 | - | - | - | - |
| அறுவை மருத்துவம் | 35 | - | - | - | - |
| மனித மரபணுவியல் அலகு | 44 | 05 | - | - | - |
| விலங்கு மனை | 04 | - | - | - | - |
| MEDARC | 23 | - | - | - | - |
| தொடர்புள்ள சுகாதார விஞ்ஞான அலகு | 01 | - | - | - | - |
| அறிமுக அடிப்படை விஞ்ஞான மூலம் | 02 | - | - | - | - |
| நடத்தைசார் விஞ்ஞான மூலங்கள் | 04 | - | - | - | - |
| **மொத்தம்** | **368** | **48** | **01** | **11** | **01** |

## மருத்துவக் கல்வி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (MEDARC)

### அறிமுகம்

2008ஆம் ஆண்டு தொடர்பில் MEDARC பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது:

1. பணியாளருக்குப் பாடவிதான மதிப்பீட்டு உத்திகளை அறிமுகப்படுத்தலும், பாடவிதான மதிப்பீட்டை நிறுவனமயப்படுத்தலும்
2. கல்விசார் பணியாளருக்குப் பணியாளர் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்தல்.
3. தற்காலிகப் பணியாளருக்கு பிரச்சினை அடிப்படையிலான கற்றலில்/ கற்பித்தலில் பயிற்சியை அறிமுகப்படுத்துதல்
4. மாணவர் கற்றலுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பை அபிவிருத்திசெய்தல்.
5. மருத்துவக் கல்வி நடவடிக்கைகளில் ஆராய்ச்சிசெய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் பற்றிய தகவல்

கலா. ஐ.எம். கருணாதிலக்க MEDARC பணிப்பாளராகத் தொடர்ந்து கடமையாற்றினார். இந்நிலையத்தில் ஒரு (01) மருத்துவக் கல்வி உசாத்துணையாளர், ஒரு (01) விரிவுரையாளர், ஒரு (01) தகுதிகாண்நிலை விரிவுரையாளர் ஆகியோரைக்கொண்ட மூன்று (03) பணியாள்தொகுதி உறுப்பினர்கள் இருந்தனர்.

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

பாடவிதானம் பற்றிய பின்னூட்டலைப் பெறுவதற்காகப் பின்வரும் மாணவர் தொகுதிகளுடன் மாணவர் கல்விசார் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன – உ.த. 2003, 2004, 2005, 2006 மற்றும் 2007.

"மாணவர் கல்விசார் குழுவின் பயனுறுதித்தன்மையை முன்னேற்றுதல்" பற்றிய செயலமர்வொன்று உ.த. 2003, 2004, 2005, 2006 மற்றும் 2007 மாணவர் தொகுதிகளுக்கு நடத்தப்பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்ட ஆராய்ச்சி உதவியாளர்களுக்கு கலா. ஐ.எம்.கருணாதிலக்க, கலா. ஏ.எம். ஒலுபெலியாவ ஆகியோரால் "தரம்சார்ந்த ஆராய்ச்சிமுறை" பற்றிய செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

உ/த 2007 மருத்துவ மாணவர் தொகுதிக்கும் உ/த 2006 பி.எஸ்சி. இயன்மருத்துவ மாணவர் தொகுதிக்கும் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

பீடக் காலண்டரில் மொடியூல் மதிப்பீட்டை மாற்றியமைத்தல் மற்றும் மதிப்பீடுகளை ஒருங்கிணைத்தல் பற்றிய விரிவான கலந்தாராய்வுகள் சிரேஷ்ட பணியாளருடன் நடத்தப்பட்டதுடன், செயல்திட்டமொன்றும் விருத்திசெய்யப்பட்டது.

MEDARC பணியாளர் கற்பித்தல்/கற்றல் நடவடிக்கைகள், மதிப்பீடுகள் மற்றும் கணிப்பீடு ஆகியவற்றுக்குத் துணையாதரவளிப்பதற்காக மொடியூல் குழுக்கள் எல்லாவற்றுக்கும் ஒதுக்கப்பட்டனர்.

பிரயோக விஞ்ஞானமூலத்தில் அடிப்படை மொடியூலின் அபிவிருத்திக்குப் பங்களித்தல்.

மாணவர் கைந்நூலைத் தொகுத்தல்.

MEDARC பணியாள்தொகுதி உறுப்பினர்கள் பி.எஸ்சி. இயன்மருத்துவம் மற்றும் தொழில்சார் மருத்துவத்தில் பாடவிதான அபிவிருத்திக் குழுக்களின் உறுப்பினர்களாகக் கடமையாற்றினர்.

இறுதியாண்டுக் கற்றல் சூழல் பற்றிய பின்னூட்டலைப் பெறும்பொருட்டு அண்மைக் காலப் பட்டதாரிகளுடன் கவனக்குவிப்புக்குழுக் கலந்தாராய்வுகள் நடத்தப்பட்டன.

இலங்கைத் தேசிய வைத்தியசாலை, லேடி றிட்ஜ்வே வைத்தியசாலை ஆகியவற்றின் சிரேஷ்ட உசாத்துணையாளர்களால் புதிய உள்ளுறைவுப் பயிற்சி வைத்திய அலுவலர்களுக்கு ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சி (உள்ளக வைத்தியரின் பங்கும் பொறுப்புரைகளும்) 2008 யூலை 3ஆந் தேதியன்று நடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீடிப்புக் கல்விநெறிகள்

MEDARC குழுவால் கல்விசார் பணியாளருக்காகப் பணியாளர் அபிவிருத்திக் கல்விநெறியொன்று விருத்திசெய்யப்பட்டது. இதற்கு IRQUE கருத்திட்டத்தால் நிதி வழங்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவத்துக்கான மையக்குழு அனர்த்த முகாமைத்துவத்தில் சான்றிதழ் கல்விநெறியை 2ஆவது தொகுதிக்கு வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

### பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள்

கலா. ஐ.எம். கருணாதிலக்க IRQUE கருத்திட்ட நடவடிக்கையை – மருத்துவக் கல்வியில் பயிற்சிநெறிகள்: மருத்துவக் கல்வியில் தொலைக்கற்றல் கல்விநெறிகள் (டன்டீ பல்கலைக்கழகம்) – ஒத்திசைவித்தார். இக்கல்விநெறியைப் பின்பற்றிய ஏழு பீட உறுப்பினர்களில் மூவர் இதனைப் பூர்த்திசெய்துள்ளனர். MEDARC பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் உள்நாட்டுத் தனிப்பட்டமுறைப் பயிற்சியாசிரியர்களாகச் செயற்பட்டனர்.

### பணியாளர் அபிவிருத்தி

1. "திறந்த தினம் - 2008" பிணிஆய்வு விஞ்ஞான மூலத்தின் குறிக்கோள்களைக் கலந்தாராய்வதற்கு நீடித்த பீடப் பணியாளருக்காக 2008 மே 14ஆந் தேதியன்று நடத்தப்பட்டது. ஆலோசனைகளும், பின்னூட்டலும் பெற்றுக்கொள்ளப்பட்டன.
2. 1ஆவது பிணி ஆய்வுக்கட்டப் பாடவிதான அபிவிருத்திச் செயலமர்வு இயன் மருத்துவக் கல்விநெறிக்காக 2008 யூலை 09ஆந் தேதியன்று நடத்தப்பட்டது.
3. 2ஆவது பிணி ஆய்வுக்கட்டப் பாடவிதான அபிவிருத்திச் செயலமர்வு இயன் மருத்துவக் கல்விநெறிக்காக 2008 செப்ரெம்பர் 18ஆந் தேதியன்று நடத்தப் பட்டது.
4. கல்விசார் பணியாளருக்காக மதியபோசன நேர உரையாடல் அரங்குகள் நடத்தப்பட்டன (அட்டவணை V-25).

**அட்டவணை V–25: கல்விசார் பணியாளருக்கு மதியபோசன நேர உரையாடல் அரங்குகள்**

| பெயர் | தலைப்பு | திகதி |
|---|---|---|
| கலா. நிலுக்ஷி அபேசிங்க | சரியொத்தவர் கற்றல் | 29.02.2008 |
| கலா. ஜி.ஆர்.கொன்ஸ்ரன்ரைன், கலா. ஆர். ஹனிபா | பிணிஆய்வுக் கற்பித்தலில் மாறுகின்றமை பற்றிய கவனிப்பு | 08.08.2008 |
| பேரா. ஜெனிபர் பெரேரா | மாணவர்களுக்குப் பயனுறுதியுள்ள பின்னூட்டல் வழங்கல் | 17.10.2008 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை V–26: செயலமர்வுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பணியாளர் பங்கேற்பு**

| பெயர் | தலைப்பு | திகதி |
| --- | --- | --- |
| பேரா. கெரல்வின் குணரத்ன<br>கலா. இந்திக கருணாதிலக்க<br>கலா. கோமிந்த பொன்னம்பெரும | "மிகச்சிறந்த பதிலளிப்பு MCQகள் - உங்கள் கவலைகளைத் தெளிவு படுத்தல்" பற்றிய 1ஆவது செயலமர்வு | 24.03.2008 |
| கலா. ஐ.எம். கருணாதிலக்க<br>கலா. ஏ.எம். ஒலுபெலியாவ | "எவ்வாறு ஒரு செயல்விளைவுள்ள PBL/SGD வசதிப்படுத்துநராக இருத்தல்" பற்றிய 1ஆவது செயலமர்வு | 11.08.2008 |
| | "சுகாதார உயர்தொழில் கல்வியின் போக்குகள்" பற்றிய செயலமர்வு | 23.09.2008 |
| | "பாடவிதானத் திருத்தத்தின் இன்றியமையாமை பற்றிய செயலமர்வு | 26.09.2008 |
| பேரா. கொல்வின் குணரத்ன<br>பேரா. லலித மெண்டிஸ்<br>கலா. இந்திக கருணாதிலக்க | "மிகச்சிறந்த பதிலளிப்பு MCQகள் - உங்கள் கவலைகளைத் தெளிவு படுத்தல்" பற்றிய 2ஆவது செயலமர்வு | 10.09.2008 |
| கலா. ஐ.எம். கருணாதிலக்க | "பாடவிதான அபிவிருத்தி" பற்றிய செயலமர்வு | 04, 05.09.2008 |
| பேரா. லலித மெண்டிஸ்<br>கலா. ஐ.எம். கருணாதிலக்க | "பொறுப்பு அடிப்படையிலான கற்றல்" பற்றிய செயலமர்வு | 19.11.2008 |

**அட்டவணை V–27: வெளியீடுகளும் சமர்ப்பிப்புகளும்**

| வெளியீடுகளும் சமர்ப்பிப்புகளும் | இதழ்களின் எண்ணிக்கை |
| --- | --- |
| வெளியீடுகள், ஆராய்ச்சிக் குறிப்பேடுகள் | 01 |
| தனிவரைவு நூல்கள், அறிக்கைகள், தலையங்கங்கள், ஏனைய கட்டுரைகள் | 05 |
| சுருக்கங்கள், சமர்ப்பிப்புகள் | 12 |

## மெய்நிகர் கற்றல் நிலையம் (VLC)

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் (UCFM) மெய்நிகர் கற்றல் நிலையம் (VLC) தற்போது மெய்நிகர் கற்றல் நிலையத்தின் தலைவரான பிணி ஆய்வு மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலா. சேனக ராஜபக்ஷவின் மேற்பார்வையின்கீழ் செயற்படுகின்றது. நிலையத்தின் ஆய்வுகூடம் 69 கணினிகளுக்கான இடவசதியுடன் ஒரு மத்திய சேவையகத்தையும் கொண்டுள்ளது.

இந்த ஆய்வுகூடத்தின் ஒரு பகுதி சில சமயங்களில் மொழிகளில் கல்விநெறிகளை நடத்துவதற்காக மொழி நிலையத்தால் பகிர்ந்துகொள்ளப்படுகின்றது.

இவ்வாண்டில் ஒரு (01) வலையமைப்பு நிருவாகி, ஒரு (01) கணினிப் பிரயோக உதவியாளர் ஆகியோரைக் கொண்ட இரு (02) நிரந்தரப் பணியாள் தொகுதி உறுப்பினர்கள் இருந்தனர்.

நிலையத்தில் பீடத்தின் ஒவ்வொரு துறையையும் அலகையும் மூலத்தையும் மொடியூலையும் சேர்ந்த பிரதிநிதிகளைக்கொண்ட VLC குழு உள்ளது. இக்குழு நிலையத்துக்கு ஆலோசனை முறைமையில் செயற்படுகின்றது. கலா. தீபிகா பர்னாந்து VLC குழுத் தலைவராயிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

VLC விடயவிதானங்களை அணுகுவதற்கு வலைத்துறை விருத்தி செய்யப்பட்டுள்ளது. அது 'மூடில்' என்ற பெயரிலான ஒரு கற்றல் முகாமைத்துவ முறைமை (LMS). கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்விக்கூடம் உட்பட அனேக பல்கலைக்கழகங்களில் பரந்தரீதியில் பயன்படுத்தப்படும் இந்த LMS, உரிமம் பெறத் தேவையற்ற ஒரு திறந்த மூல முறைமையாகும். மாணவர்கள் ஒரு பயனர் பெயரைக் கொண்டு பதிவுசெய்து பணியாள்தொகுதி உறுப்பினர்களால் வழங்கப்பட்ட கற்றல் விடயவிதானங்களை அணுகுவதற்கு LMS இயலச்செய்கின்றது. தனியாள் பயன்பாட்டையும் மதிப்பீட்டு அளவுகளின்போது மாணவர்கள் பெற்ற புள்ளிகளையும் தடம்பற்றுவதற்கு இம்முறைமையைப் பயன்படுத்த முடியும்.

VLC வழங்கிய வசதிகளைப் பயன்படுத்துவதன்மூலம் பின்வருவன சாதிக்கப்பட்டுள்ளன:

- பட்ட மாணவர்கள் அணுகக்கூடியதாகப் பல்வேறு விரிவுரையாளர்கள் தமது விரிவுரைகளைத் தெளிவாகக் காணக்கூடியதாக மேலேற்றுவதற்கு VLC செயல்முறை ஆசிரியர்கள் உதவியுள்ளனர்.
- 2008இல் மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்பட்ட உ/த 2007 மாணவர் தொகுதிக்கு ஆங்கிலமொழி கற்பித்தலுக்காகக் கணினிகளைப் பயன்படுத்தல்.
- அடிப்படை ஆங்கிலத்தில் ஊடாட்ட மொடியூல்களைத் தொகுத்தல்.

இவற்றுக்கு மேலதிகமாக மாணவர்கள் ஆராய்ச்சி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் இலக்கிய மதிப்பீட்டுக்காக இணையத்தை அணுகுவதற்கும் SPSS ஐப் பயன்படுத்தி சமூக ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் தரவுப் பகுப்பாய்வுக்குமென VLC க்கு வருகைதருகின்றனர்.

### பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

மெய்நிகர் கற்றல் நிலையம் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றவேண்டுமாயின் ஊடாட்டக் கற்றல் விடய விதானங்களை அபிவிருத்திசெய்வதில் பணியாள் தொகுதி உறுப்பினர்களுக்குப் பயிற்சியளித்தல் மிக முக்கியமானது. விருத்திசெய்யப்பட்டுள்ள 'மூடில்' வலைத்துறையூடாக மாணவர்கள் விடயவிதானங்களை அணுகுவர். 'பவர் பொயின்ற்' மற்றும் 'ஆர்டிகுலேற்' ஆகியவற்றைப் பயன்படுத்தி பணியாள் தொகுதி உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட ஊடாட்டப் பல்ஊடக விடயவிதானங்கள் மாணவர்கள் பயன்படுத்துவதற்குக் கிடைப்பதாயுள்ளன. இக்கற்றல் விடயவிதானங்கள் தற்போது கிடைப்பதற்குள்ள கற்றல் முறைகளை மேம்படுத்துமென்றும் பலப்படுத்துமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பீடத்தின் பணியாளர் மெய்நிகர் கற்றல் நிலையத்தால் ஒத்திசைவிக்கப்பட்ட ஊடாட்டக் கற்றல் விடயவிதானத் தயாரிப்புப் பற்றிய செயலமர்வுகளிலும் SPSS பற்றிய ஒரு செயலமர்விலும் பங்குபற்றினர்.

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கும் மொரட்டுவைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்கும் இடையில் இணைப்புகள் விருத்திசெய்யப்பட்டுத் தாபிக்கப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உட்கட்டமைப்பும் அபிவிருத்திக்கான வாய்ப்புவளமும்

மெய்நிகர் கற்றல் நிலையம் பீடத்துக்கும் தனிப்பட்ட பணியாளருக்கும் ஈட்டல்களை உருவாக்கக்கூடியதாக வேறு பல்கலைக்கழகங்களுக்கும் தனிப்பட்ட பயனர்களுக்கும் சந்தைப்படுத்தப்படக்கூடிய வாய்ப்புவளத்தைக் கொண்டுள்ளது. CAL ஆய்வுகூடத்தில் உள்ள வளங்கள் கணினி வசதிகள் தேவைப்படுகின்ற செயலமர்வுகளுக்காகவும் விஞ்ஞான அமர்வுகளுக்காகவும் நிறுவனங்களுக்கும் சங்கங்களுக்கும் வாடகைக்கு விடப்படலாம். மருந்தாக்கல் கம்பனிகள் போன்ற தனியார் நிறுவனங்களின் அனுசரணையைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியம்பற்றி எண்ணிப் பார்க்கப்படுவதுடன், பல்கலைக்கழக ஒழுங்குவிதிகளினுள் அத்தகைய அனுசரணையைப் பெறுவதற்கான முறைகள்பற்றியும் ஆராயப்படுகின்றது. இவற்றுடன் மெய்நிகர் கற்றல் நிலையத்தின் அர்ப்பணிப்புள்ள பணியாளர் வலைப்பக்க அபிவிருத்தி போன்ற சேவைகளை வேறு பல்கலைக்கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்குவதன்மூலம் ஒரு குறிப்பிட்ட தொகை நிதியை உருவாக்கமுடியும்.

## விலங்கு மனை

### அறிமுகம்

விலங்கு மனை குரங்குகள், எலிகள், சுண்டெலிகள் மற்றும் சீமைப் பெருச்சாளிகள் ஆகியவற்றின் இனவாழ்வுக் கூட்டமைவுகளைப் பேணிவருகின்றது. அது பட்ட மாணவர் கற்பித்தலுக்கும் பட்டப்பின்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அதேபோன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாளரால் மேற்கொள்ளப்படும் ஏனைய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் விலங்குகளையும் தொழில்நுட்ப உதவியையும் வழங்குகின்றது.

எமது தொலைநோக்கு விலங்குப் பரிசோதனைக்கு அதிநவீன வசதிகளைக்கொண்ட முதன்மையான ஒரு நிலையமாக விலங்கு மனையை அபிவிருத்தி செய்தலாகும்.

### பணியாளர்

விலங்கு மனையின் தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் (உயிர் இரசாயனவியல்) கலா. எஸ். ஜீவதயாபரன் நியமிக்கப்பட்டார். இது தொழில்நுட்ப அலுவலர்களும் நான்கு தேர்ச்சித்திறனற்ற தொழிலாளர்களும் கல்விசாராப் பணியாளரில் அடங்கினர்.

### பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

விஞ்ஞான மற்றும் மருத்துவ பீடங்களால் கூட்டாக நடத்தப்படும் பி.எஸ்சி. மருந்தியல் நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்றுகின்ற பட்ட மாணவர்கள் தமது மாணவர் ஆராய்ச்சிப் பணிக்கு விலங்கு மனையிலுள்ள வசதிகளைப் பயன்படுத்துகின்றனர். விலங்கியல் துறையும் பட்ட மாணவர் செயல்முறை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இவ்வசதிகளைப் பயன்படுத்துகின்றது.

### பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல், ஒட்டுண்ணியியல், மருந்தாக்கவியல், உடற்றொழிலியல் ஆகிய துறைகளையும் உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் நிறுவனத்தையும் சேர்ந்த கல்விசார் பணியாளருக்கும் பட்டப்பின் மாணவர்களுக்கும் விலங்கு மனை வசதிகள் வழங்கப்படுகின்றன. இவ்வசதிகள் வழங்கப்படும் உயர் பட்டப் படிப்புகளில் எம்.எஸ்சி., எம்.பில். மற்றும் பீஎச்.டி. என்பவை அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆராய்ச்சி

### சிமியன் மலேரியா கருத்திட்டம்

ஒட்டுண்ணியியல் துறையின் மலேரியா ஆராய்ச்சி அலகால் நடத்தப்படும் ஒரு பிரதான ஆராய்ச்சிக் கருத்திட்டமான இதில் மலேரியா பற்றிய ஆராய்ச்சிக்காக 1984 முதற்கொண்டு விலங்கு மனையில் 30–40 குரங்குகள் பேணப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டம் கடத்தலைத் தடுக்கின்ற தடைகாப்புநிலை, இலிங்கமில் குருதிக் கட்டங்களுக்கெதிரான தடைகாப்புநிலை, மறுக்களிப்புத் தொற்றுகள் என்பவை அடங்கலாக மலேரியா பற்றிய பல்வேறு மூலமுதலான ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு களுக்கு வழிவகுத்துள்ளது.

விலங்கு மனை ஒன்பது (09) ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கு அதன் சேவைகளை வழங்கியதுடன், மூன்று (03) ஆராய்ச்சி வெளியீடுகளுக்கும் தெரிவிப்புகளுக்கும் பங்களித்துமுள்ளது.

## IRQUE-QEF, MBBS கற்கை நிகழ்ச்சித்திட்டம்

### கருத்திட்டப் பின்னணியும் அடிப்படையும்

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் (UCFM) ஒரு தசாப்தத்துக்கு முன்னர் அதன் பட்ட மாணவர் மருத்துவப் பாடவிதானத்தைத் திருத்துகின்ற முதன்முயற்சியில் ஈடுபட்டது. எனவே, IRQUE-QEF நிதியுதவி அதன் மாணவர்களாலும் பணியாளர்களாலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டதுடன் இலங்கையில் மருத்துவக் கல்வியின் முன்னோடியும் நாட்டில் ஆகப் பழைமைவாய்ந்த மருத்துவக் கல்விக் கூடமுமான பீடத்தை மேலும் அபிவிருத்திசெய்வதற்கு மிக அவசியமானதாகவும் கருதப்பட்டது.

### கருத்திட்டக் குறிக்கோள்கள்

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நோக்குக்கும் பணிக்கும் அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கூட்டுத் திட்டத்துக்கும் இணங்க, தொடக்க முன்மொழிவில் முனைப்படுத்திக் காட்டப்பட்ட ஒரு விரிவான SWOT பகுப்பாய்வின் அடிப்படையில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் பரந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இம்முன்மொழிவு விருத்திசெய்யப்பட்டது. இக்கருத்திட்டத்தின் குறிக்கோள்களாவன: நாட்டின் தேசிய, சமூக மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்கிணங்க வெவ்வேறு பின்னணிகளில் பயனுறுதியுள்ள சுகநலப் பராமரிப்புச் சேவைகளை வழங்கும் ஆற்றலுள்ள ஒரு மருத்துவப் பட்டதாரியை உருவாக்குதல்; சுகாதார முறைமையொன்றில் பாகுபாடேதும் இன்றி, வேறுபட்ட குழுக்களுக்கிடையில் ஒத்திசைவை முன்னேற்றுபவராக, சமூகத்தினதும் சூழலினதும் தேவைகளுக்குத் துலங்கலுடனும் பொறுப்புடனும் பதிற் செயலாற்றுபவராகச் செயற்படும் ஆற்றலுள்ள ஒரு பட்டதாரியை உருவாக்குதல்; அரச சுகாதார சேவைக்கு வெளியே தொழில்வாய்ப்பை ஈட்டக்கூடியதாகப் பட்டதாரிக்கு வலுவளிக்கின்ற திறன்களை விருத்திசெய்தல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தக்கூடியதான திறமையானதும் செயல்விளைவுள்ளதுமான முகாமைத்துவத்துக்காகக் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் செயலாற்றலையும் நிறுவனக் கட்டமைப்பையும் விருத்திசெய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்குப் பொருந்துகின்றவகையில் மாறிவரும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தித் தேவைகள் தொடர்பில் பங்களிக்கின்ற சுகாதாரத் தொழில்வல்லுனர் களாகச் சேவையாற்றக்கூடிய சிறந்த தரமான மருத்துவப் பட்டதாரிகளை விருத்தி செய்தலே இக்கருத்திட்டத்தின் இறுதிவிளைவும் பயன்களுமாகும்.

## பணியாளர் பற்றிய தகவல்

IRQUE-QEF-MBBS கற்கை நிகழ்ச்சித்திட்ட அலுவலகம் பேராசிரியர் சந்திரிகா விஜயரத்ன, இணைப்பாளர், கலா. சிசிர எல். பத்திரண, பிரதி இணைப்பாளர், உதவிக்கு ஒரு (01) கருத்திட்டப் பணியாளர் ஆகியோரைக் கொண்டுள்ளது.

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டம்

இக்கருத்திட்டத்தின் இறுதிவிளைவும் பயன்களும் இலங்கைக்குப் பொருந்துகின்ற வகையில் மாறிவரும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தித் தேவைகள் தொடர்பில் பங்களிக்கின்ற சுகாதாரத் தொழில்வல்லுனர்களாகச் சேவையாற்றக்கூடிய சிறந்த தரமான மருத்துவப் பட்டதாரிகளை விருத்திசெய்தலாகும். எனவே, இக்கருத்திட்டம் அதன் நடவடிக்கைகளூடாகப் பட்டதாரிகளின் தரத்தை மேம்படுத்த உதவுகின்றது.

## நீடிப்புக் கல்விநெறிகள்/சமூகசேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

இக்கருத்திட்டம் நேரடியான சமூக சேவை நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டிருக்க வில்லை. எனினும் CIAI நடவடிக்கைகளுக்கு உதவுவதன்மூலம் இறுதி வெளியீடாக உருவாக்கப்படும் பட்ட மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளூடாகச் சமூகம் மேலும் சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ளும்.

## ஆராய்ச்சி

இக்கருத்திட்டம்தானே ஆராய்ச்சியை நடத்துவதில்லை. எனினும் இக்கருத்திட்டம் 2005இல் 10 ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கும், 2006இல் 9 ஆராய்ச்சிக் கருத் திட்டங்களுக்கும், 2008இல் 8 ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கும் நிதி வழங்கியது. 2009இல் மேலும் 12 கருத்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்கெனக் கருத்திட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டன. இவ்வாராய்ச்சிக் கருத்திட்டங்கள் கல்விசார் பணியாளரால் மாணவர்களின் பங்கேற்புடன் நடத்தப்படுகின்றன. மாணவர் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும்பொருட்டு சர்வதேச அரங்குகளில் அவர்களின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிப்பதற்காக அவர்களுக்குப் பிரயாண மானியங்களும் வழங்கப்பட்டன.

## உட்கட்டமைப்பும் வளங்களும்

இக்கருத்திட்டம் 5 ஆண்டுக் காலப்பகுதிக்கான உலக வங்கிக் கடன் வசதியான 998,944 யுஎஸ் டொலரைப் பயன்படுத்திக் கருத்திட்டத்தின்கீழ் முன்மொழியப்பட்ட கொள்வனவையும் ஏனைய நடவடிக்கைகளையும் ஒத்திசைவிக்கின்றது. இக்கடன் வசதியில் இதுவரை 70 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. விஞ்ஞான பீடம்

### அறிமுகம்

2008ஆம் ஆண்டில் பேராசிரியர் ரி.ஆர். ஆரியரத்ன விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக 10.01.2008 முதற்கொண்டு ஒரு புதிய பதவிக் காலத்துக்கு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். பேராசிரியர் ஆர்.எல்.சி. விஜேசுந்தர பீடத்தின் பீடாதிபதியாகத் தமது பதவிக்காலத்தை 31.12.2007இல் பூர்த்திசெய்தார். பேராசிரியர் ரி.ஆர். ஆரியரத்ன பீடத்தின் பீடாதிபதியாக 10.01.2008இல் பதவி ஏற்கும்வரை 2008 சனவரி 1 முதல் 10 வரையிலான ஒரு குறுகிய காலத்துக்குப் பேராசிரியர் ஆர். ஹேவமான்ன பதில் பீடாதிபதியாகச் சேவையாற்றினார்.

2007 க.பொ.த (உ/த) மாணவர்களைச் சேர்ந்த புதிய தொகுதி 06.08.2008இல் பீடத்துக்கு அனுமதிக்கப்பட்டது. பௌதிக விஞ்ஞானத் துறைக்கும் உயிரியல் விஞ்ஞானத் துறைக்கும் அனுமதிக்கப்பட்ட பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 242உம், 121உம் ஆகும். மேலதிகமாக இரு நேரடி உள்ளெடுப்புகளாக 53 மாணவர்களும், 57 மாணவர்களும் முறையே உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல், கைத்தொழில் புள்ளிவிவரவியல் மற்றும் கணித நிதி ஆகிய கல்விநெறிகளுக்கு அனுமதிக்கப்பட்டனர். பீடம் அதன் கல்விநெறிகளை வெற்றிகரமாகவும் அட்டவணைப்படியும் நடத்தியது.

பீடம் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் அவுஸ்திரேலிய லா டிரோப் பல்கலைக் கழகத்துக்குமிடையில் எட்டப்பட்ட ஓர் உடன்பாட்டின்கீழ் உள்ளுறைவுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு அனுப்புவதற்கு மாணவர் ஒருவரைத் தெரிவுசெய்துள்ளது. மற்றுமோர் உடன்படிக்கை, 3+2 விஞ்ஞான இளமாணி (பௌதிகவியல்) என்று அழைக்கப்படும் ஒரு கூட்டு இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துக்காக விஞ்ஞான பீடத்துக்கும் யுஎஸ்ஏ ஜோர்ஜியா மாநிலப் பல்கலைக் கழகக் கலை மற்றும் விஞ்ஞானக் கல்லூரிக்குமிடையில் வகுக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தால் பேராசிரியர் டபிள்யு.டி. ரத்னசூரியவுக்கு கல்விசார் விஞ்ஞானக் கலாநிதி (D.Sc.) பட்டமொன்று வழங்கப்பட்டது.

விஞ்ஞான பீடம் அதன் வருடாந்தக் கல்விசார் அமர்வுகளை கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கல்விசார் அமர்வுகளுக்குச் சமாந்தரமாக 24.10.2008இல் வெற்றிகரமாக நடத்தியது.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் (SLAAS) இவ்வாண்டுக்கான வருடாந்த அமர்வுகள் 2008. திசெம்பர் 3 முதல் 6 வரையான காலப்பகுதியில் விஞ்ஞான பீடத்தில் நடத்தப்பட்டன.

மீளாய்வாண்டில் விஞ்ஞான பீட மாணவர்கள் 'விளையாட்டுத் தினம்', 'புதியவர்களை வரவேற்றல்', *'தகாட்ட பாலிய மற்றும் மஹாசொஹொன் சாமயாம'*, *'அவுறுது உத்சவய'*, *'கீ பதுர'*, *'சீல வியாபாரய'*, *'வெசக் பக்திகீத'*, *'செத் பிரித்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சஜ்ஜாயனய, 'சிரமதான வியாபாரய'* மற்றும் 'இரத்த தான இயக்கம்' போன்ற பல்வேறு கலாசார நடவடிக்கைகளையும் ஏனைய நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்தனர். நிதிச் சிரமங்களை எதிர்நோக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு விடுதி வசதிகளைத் தாபிப்பதற்கு நிதி திரட்டும்பொருட்டு விஞ்ஞான பீட மாணவர்களால் ஒரு பக்கத்துக்கு ஆறுபேரைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றும் ஒழுங்குசெய்யப்பட்டது.

### பணியாளர் பற்றிய தகவல்

இவ்வாண்டில் பின்வரும் கல்விசார் பணியாளர்கள் அடைப்புக்குறிகளுக்குள் தரப்பட்டுள்ள அந்தந்தத் துறைகளின் தலைவர்களாகச் செயற்பட்டனர். பேரா. ரி.ஆர். ஆரியரத்ன 09.01.2008 வரையும், பேரா. ஜே.கே.டி.எஸ். ஜயனெத்தி 10.01.2008 முதற்கொண்டும் (பௌதிகவியல்); திரு. சி.ஜே. விஜேரத்ன 11.06.2008 வரையும், கலா. ஆர்.ரி. சமரதுங்க 12.06.2008 முதற்கொண்டும் (கணிதவியல்); பேரா. ஆர். ஹேவமான்ன 11.03.2008 வரையும், கலா. எஸ். குலதுங்க 12.03.2008 முதற் கொண்டும் (அணுக்கரு விஞ்ஞானம்); கலா. ரி.டி. சில்வா (தாவர விஞ்ஞானங்கள்); கலா. டி.ஆர். வீரசேகர 08.01.2008 வரையும், கலா. டபிள்யு.என். விக்கிரமசிங்க 09.01.2008 முதற்கொண்டும் (புள்ளிவிவரவியல்); திருமதி டி.என். த சில்வா 14.08.2008 வரையும், பேரா. டபிள்யு.எஸ். பிரேமவங்ச 15.08.2008 முதற்கொண்டும் (விலங்கியல்).

**அட்டவணை V–28:**

**நியமனங்கள், பதவியுயர்வுகள், இளைப்பாறல்கள் மற்றும் பதவி விலகல்கள்**

| பெயர் | துறை | பதவிப்பெயர்/ பதவி | தேதி |
|---|---|---|---|
| **பதவியுயர்வுகள்** | | | |
| பேரா. ஈ.டி த சில்வா | இரசாயனவியல் | சிரேஷ்ட பேராசிரியர் | 01.12.2005 |
| பேரா. கே.ஆர்.ஆர். மஹாநாம | - அதே - | பேராசிரியர் | 06.09.2007 |
| கலா. டபிள்யு.ஆர்.எம். த சில்வா | - அதே - | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I | 27.04.2007 |
| கலா. எஸ். ரன்வல | தாவர விஞ்ஞானங்கள் | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I | 23.07.2007 |
| கலா. பீ. சப்புதந்திரி | - அதே - | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 10.12.2006 |
| செல்வி ஈ.எஸ். கருணாரத்ன | - அதே - | தொழில்நுட்ப அலுவலர், தரம் II | 01.01.2006 |
| கலா. சீ.டி. தங்கல்ல | விலங்கியல் | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 01.01.2008 |
| கலா. எம்.ஆர். விஜேசிங்க | - அதே - | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I | 05.11.2007 |
| கலா. சீ.டி. திலகரத்ன | புள்ளிவிவரவியல் | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 05.05.2008 |
| **பதவி விலகல்கள்** | | | |
| கலா. ஏ.கே.கே. பிரேமதாச | கணிதவியல் | சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II | 01.03.2008 |
| **இளைப்பாறல்கள்** | | | |
| போ. கே. அபேநாயக்க | தாவர விஞ்ஞானங்கள் | சிரேஷ்ட பேராசிரியர் | 30.09.2008 |

### பீட நியமனங்கள்

கலா. சி.எம். எதிரிசிங்க பல்கலைக்கழக ஐரி குழு, பீட ஐரி குழு மற்றும் நெற்வேர்க் குழு ஆகியவற்றின் பீடப் பிரதிநிதியாகவும் பீடத்தின் வெப் மாஸ்டராகவும் கடமையாற்றினார். பேராசிரியர் டி.யு.ஜே. சொன்னதர மற்றும் கலா. ரி.டி. சில்வா ஆகியோர் முறையே பட்டக் கற்கைகளினதும் பட்டப்பின் கற்கைகளினதும் பணிப்பாளர்களாகத் தொடர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா. எஸ். வீரசிங்க, கலா. டபிள்யு.பி. யாப்பா ஆகியோர் மேம்படுத்தல் கல்விநெறிகளுக்கான பீட இணைப்பாளர்களாகத் தொடர்ந்தனர். மேலும் தர உத்தரவாதம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையம், வெப் போன்ற பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை V–29: விருதுகளும் சாதனைகளும் - 2008

| பெறுநர் | விருதுகள்/சாதனைகள் | வழங்கும் முகவராண்மை |
|---|---|---|
| பேரா. டபிள்யு.டி. ரத்னசூரிய | டி.எஸ்சி. | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பேரா. டபிள்யு.டி. ரத்னசூரிய | கொழும்புப் பல்.கழகத்தில் சிறந்த ஆராய்ச்சி விஞ்ஞானி | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| பேரா. டபிள்யு.டி. ரத்னசூரிய | சனாதிபதி ஆராய்ச்சி விருது – 2002 | சனாதிபதி செயலகம் |
| பேரா. ஈ.டி. த சில்வா | சனாதிபதி ஆராய்ச்சி விருது – 2002 | சனாதிபதி செயலகம் |
| பேரா. எம்.ஆர். சூரியாரச்சி | சனாதிபதி ஆராய்ச்சி விருது – 2002 | சனாதிபதி செயலகம் |
| பேரா. ஆர்.எல்.சி. விஜேசுந்தர | சனாதிபதி ஆராய்ச்சி விருது – 2002 | சனாதிபதி செயலகம் |

## விடுப்பு

இவ்வாண்டில் பீடத்தைச் சேர்ந்த ஏழு கல்விசார் பணியாளர்கள் ஏழாட்டை விடுப்பைப் பயன்படுத்தினர். 08 உறுப்பினர்கள் கல்வி விடுப்பைப் பெற்றனர்.

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

கைத்தொழில் மற்றும் நிதி முறைமை (IFS) கணினி விஞ்ஞானக் கல்விநெறிகளைப் பின்பற்றும் மாணவர்களுக்கு ஐரி-3001 – முகாமைத்துவத் தகவல் முறைமைகள் மற்றும் ஐரி-3002 – தரவுத்தள முறைமைகள் ஆகிய இரு புதிய கல்விநெறி அலகுகளை இலவசமாக நடத்தியது. பட்ட மாணவர் கற்பித்தலுக்காக அவர்களால் பௌதிகவியல் துறையில் கணினி ஆய்வுகூடமொன்றும் தாபிக்கப்பட்டது.

EC 2010 - தொழில் அபிவிருத்தி மற்றும் EC 3010 – தொழில் அபிவிருத்தி ஆகிய கல்விநெறி அலகுகள் ஒன்றிணைக்கப்பட்டு EC 3015 – தொழில் அபிவிருத்தி என்ற பெயரில் தனியொரு கல்விநெறி அலகாக்கப்பட்டது. இது 3ஆம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் 30 மணித்தியால 2 நன்மதிப்புக் கல்விநெறி அலகொன்றாகும். இது EC 4006 – உள்ளுறைவுப் பயிற்சிக்கு ஒரு முன்நிபந்தனையாயிருக்கும் என்பதுடன் இக்கல்விநெறிக்கு 80% வரவும் கட்டாயமாக்கப்பட்டது. மேலும் சிறப்புப் பட்ட மாணவர்களுக்கு 80% வரவு விதி கட்டாயமாக்கப்பட்டது.

புள்ளிவிவரவியல் துறையால் நடத்தப்படும் பொது மற்றும் சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டன.

உயிர் விஞ்ஞானப் பட்டத்துக்கான புதிய உள்ளெடுப்புக்கு 3ஆம் ஆண்டில் ஒரு சிறப்புப் பட்டமாக சூழல் விஞ்ஞானத்தைப் பின்பற்றும் தெரிவு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை V–30:
## பட்டப்பின் மற்றும் நீடிப்புக் கல்விநெறிகளில் மாணவர் சேர்ப்பு
*(பட்டம் மற்றும் பால்ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| கல்விநெறி | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| உயிர்ப் பல்வகைமை முகாமைத்துவத்தில் டிப்ளோமா | 18 | 04 | 22 |
| கதிரியக்கப் பகுப்பாய்வில் டிப்ளோமா | 05 | 03 | 08 |
| பகுப்பாய்வு இரசாயனத்தில் விஞ்ஞான முதுமாணி | 13 | 20 | 33 |
| பிரயோகப் புள்ளிவிவரவியலில் விஞ்ஞான முதுமாணி | 11 | 14 | 25 |
| இரசாயனவியல் கல்வியில் விஞ்ஞான முதுமாணி | 05 | 07 | 12 |
| சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி | 04 | 12 | 16 |
| பௌதிகவியல் கல்வியில் விஞ்ஞான முதுமாணி | 10 | 08 | 18 |
| விஞ்ஞானத்தில் தத்துவ முதுமாணி | 03 | 04 | 07 |
| விஞ்ஞானத்தில் பீஎச்.டி. | 01 | 02 | 03 |
| மொத்தம் | 70 | 74 | 144 |

## அட்டவணை V–31: பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களின் இணைப்பாளர்கள்

| துறை | கல்விநெறி | ஆரம்பமானது/ தொடர்கின்றது | இணைப்பாளர் |
|---|---|---|---|
| இரசாயனவியல் | பகுப்பாய்வு இரசாயனத்தில் 24ஆவது எம்.எஸ்சி. | ஆரம்பமானது | கலா.கே.ஆர்.ஆர்.மகாநாம |
| இரசாயனவியல் | பிரயோக சேதன இரசாயனத்தில் 2ஆவது எம்.எஸ்சி. | ஆரம்பமானது | கலா. டி.ரி.யு. அபேதுங்க |
| இரசாயனவியல் | இரசாயனவியல் கல்வியில் 2ஆவது எம்.எஸ்சி. | ஆரம்பமானது | பேரா. எஸ். ஹேவகே |
| தாவர விஞ்ஞானம் | தாவரக் கலம், திசு வளர்ப்பில் 5ஆவது எம்.எஸ்சி. | தொடர்கின்றது | கலா. ரி.டி. சில்வா |
| தாவர விஞ்ஞானம் | தாவரக் கலம், திசு வளர்ப்பில் 6ஆவது எம்.எஸ்சி. | தொடர்கின்றது | கலா. எச். கத்திரியாரச்சி |
| தாவர விஞ்ஞானம் | விவசாய நுண்ணுயிரியலில் 1ஆவது எம்.எஸ்சி. | தொடர்கின்றது | கலா. சி.எம்.நாணாயக்கார |
| பௌதிகவியல் | பௌதிகவியல் கல்வியில் 1ஆவது எம்.எஸ்சி. | தொடர்கின்றது | கலா. டி.டி.என்.பி. தயா |
| பௌதிகவியல் | பௌதிகவியல் கல்வியில் 2ஆவது எம்.எஸ்சி. | ஆரம்பமானது | கலா. ஆர்.எம்.வி. கூரே |
| பௌதிகவியல் | பிரயோக இலத்திரனியலில் 2ஆவது எம்.எஸ்சி. | தொடர்கின்றது | பேரா. டி.யு.ஜே.சொன்னதர |
| பௌதிகவியல் | பிரயோக இலத்திரனியலில் 3ஆவது எம்.எஸ்சி. | தொடர்கின்றது | கலா. சி.எம். எதிரிசிங்க |
| பௌதிகவியல் | பிரயோக இலத்திரனியலில் 4ஆவது எம்.எஸ்சி. | ஆரம்பமானது | பேரா. டி.யு.ஜே.சொன்னதர |
| பௌதிகவியல் | வளிமண்டலப் பௌதிகவியல், இயக்கவியல்சார் வானிலை ஆய்வு மற்றும் இயற்கை அனர்த்த ஆயத்த நிலையில் 1ஆவது எம்.எஸ்சி. | தொடர்கின்றது | கலா. கே.பீ.எஸ்.சி.ஜயரத்ன |
| புள்ளிவிவரவியல் | பிரயோகப் புள்ளிவிவரவியலில் 7ஆவது எம்.எஸ்சி. | ஆரம்பமானது | கலா. டி ஆட்டிகல |
| விலங்கியல் | சூழல் விஞ்ஞானத்தில் 12ஆவது எம்.எஸ்சி. | ஆரம்பமானது | கலா. டி. வீரக்கோன் |

இவற்றுடன் இவ்வாண்டில் 06 பீஎச்.டி. மற்றும் 08 எம்.பில். பட்டங்கள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீடிப்புக் கல்விநெறிகள்/சமூக சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள

பணியாளர் தொகுதியைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களும் செயலமர்வுகளுக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வளப்பகிர்வாளர்களாகச் செயற்பட்டனர். அவையாவன: நனோ விஞ்ஞானத்திலும் நனோ தொழில்நுட்பத்திலும் வாய்ப்புக்களை ஆராய்தல் (பேரா. கே.எம்.என். த சில்வா மற்றும் கலா. டபிள்யு.ஆர்.எம். த சில்வா); அணுவாயுதப் பரிகரணம் - அதன் வாய்ப்புவளமும் சாத்தியங்களும் மற்றும் அணுவாயுத யுத்த நடவடிக்கை – கோட்பாடும் உலகின்மீது அதன் தாக்கமும் (பேரா. ஆர். ஹேவமான்ன); வான்கோள் ஆய்வியல் (கலா. கே.பீ.எஸ்.சி. ஜயரத்ன); மின்னல் பாதுகாப்பு (கலா. கே.பீ.எஸ்.சி. ஜயரத்ன); பட்டப்பின் மாணவர்களுக்கான GRC செயலமர்வு (பேரா. ரி.ஆர். ஆரியரத்ன, பேரா. டி.யு.ஜே. சொன்னதர, பேரா. எஸ்.டபிள்யு. கொட்டகம, பேரா. டபிள்யு.டி. ரத்னசூரிய மற்றும் கலா. பீ.வி. ரந்தெனிய); தரவுப் பகுப்பாய்வுக்கு SPSS மென்பொருளின் பயன்பாடு (கலா. டி. ஆட்டிகல, திரு. ஈ.ஆர்.ஏ.டி. பண்டார, செல்வி ஜே.எச்.டி.எஸ்.பீ. திசேரா); SPSS ஐப் பயன்படுத்தித் தரவுப் பகுப்பாய்வு (செல்வி ஜே.எச்.டி.எஸ்.பீ. திசேரா, திரு. ஈ.ஆர். ஏ.டி. பண்டார, திரு, எஸ்.ஜி. தர்மரத்ன); க.பொ.த உ/த உயிரியல் ஆசிரியர்கள் (பேரா. டபிள்யு.டி. ரத்னசூரிய); பாடசாலை ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை நடத்துதல் பற்றி உ/த ஆசிரியர்கள் (கலா. எம்.ஆர். விஜேசிங்க). இவற்றுடன் பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் மைக்றோ கொன்ட்றோலர் நிகழ்ச்சியமைப்பும் அதன் பிரயோகங்களும் (கலா. ஆர். லேல்வல); பிரயோக இலத்திரனியலும் தன்னியக்கத் தொழில்நுட்பமும் (திரு.எச்.எச்.ஈ. ஜயவீர); உ/த பௌதிகவியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு (கலா. டி.டி.என்.பி. தயா); 'பரிசரிகயோ' பதவிநிலை ஆலோசகரால் இயற்கை முகாம் (கலா. பீ.என். தயாவங்ச) போன்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயலமர்வுகளையும் ஒத்திசைவித்தனர்.

## பணியாளர் அபிவிருத்தி

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு (NSTEC), சுற்றாடல் அமைச்சு, பணியாளர் அபிவிருத்தி நிலையம், SLASS மற்றும் IRQUE கருத்திட்டம் போன்ற பல்வேறு உள்நாட்டு நிறுவகங்களால் நடத்தப்பட்ட தேசிய செயலமர்வுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் இருபது (20) கல்விசார் பணியாளரும் ஒரு (01) கல்விசார் ஆதரவுப் பணியாளரும் இரண்டு (02) கல்விசாராப் பணியாளரும் பங்குபற்றிய அதேவேளையில், சர்வதேச செயலமர்வுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் ஆறு (06) கல்விசார் பணியாளரும் ஒரு (01) நிருவாக அலுவலரும் பங்குபற்றினர் (அட்டவணை V-32). இவ்வாண்டில் பணியாளர் பங்குபற்றிய தேசிய மற்றும் சர்வதேசச் செயலமர்வுகளின்/பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை V–32: சர்வதேசச் செயலமர்வுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பணியாளரின் பங்கேற்பு

| பெயரும் துறையும் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்/செயலமர்வு |
|---|---|
| பேரா. ரி.ஆர். ஆரியரத்ன (பௌதிகவியல்) | SAARC – யப்பான் உள்ளுறைவுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், யப்பான் |
| பேரா. டி.யு.ஜே. சொன்னதர (பௌதிகவியல்) | தரமான கல்வி பற்றிய பிராந்திய மாநாடு, புதுடெல்லி, இந்தியா |
| கலா. டி.டி. விக்கிரமசிங்க (விலங்கியல்) | உயிர்ச் சூழல் முறைமை மாதிரிப்படுத்தல் பற்றிய பயிற்சி - நவம்பர் 2007 உயிர்ச் சூழலியல் மாதிரிப்படுத்தலுக்கான ஐரோப்பிய யூனியனால் ஒழுங்கு செய்யப்பட்டது. மூன்றாம் உலக விஞ்ஞான அகாதமி, டிரீஸ்ரி, இத்தாலி |
| | நீர், சுகாதாரம், பால்நிலை மற்றும் நீடுறுதியான அபிவிருத்தி பற்றிய பிராந்தியச் செயலாற்றல் மாநாடு – பெப்ருவரி 2008, தென்னாபிரிக்காவில் பெண்களின் காணி மற்றும் நீர் உரிமைகள் (WLWRSA) மற்றும் நீர்ப் பங்காண்மைக்கான பெண்களால் (WfWfW) ஒழுங்குசெய்யப்பட்டது. கபறோன், பொட்ஸ்வானா. |
| | ஊர்வனவியலில் 2ஆவது பாடசாலை – செப்ரெம்பர் 2008 இந்திய வன சீவராசி நிறுவகத்தாலும் இந்திய அரசாங்கத்தாலும் கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்டது, தெஹ்ரடுன், இந்தியா |
| கலா. ஆர்.பீ. பெரேரா (இரசாயனவியல்) | இரசாயன ஆயுதங்களுக்கெதிரான உதவிக்கும் பாதுகாப்புக்குமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார், (2008), சீனா |
| செல்வி ஆர்.எம். குணரத்ன (விஞ்ஞானம்) | மனிதவள அபிவிருத்தி பற்றிய உயர் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம், இந்திய முகாமைத்துவ, தொழில்நுட்ப நிறுவகம் |

## தனியார் துறையுடனான தேசிய அபிவிருத்தி வலையமைப்புக்குப் பங்களிப்பு

பேரா. எச்.டி. குணவர்தன
கலா. எஸ். ரண்வல
கலா. டபிள்யு.என். விக்கிரமசிங்க
பேரா. கே.எம்.என். த சில்வா
கலா. எச்.எஸ். கத்ரியாரச்சி
பேரா. எம்.ஆர். சூரியாரச்சி
பேரா. கே.ஆர்.ஆர். மஹாநாம
கலா. சி.எம். நாணாயக்கார
திரு. ஈ.ஆர்.ஏ.டி. பண்டார
கலா. ஆர்.டி. விஜேசேகர
பேரா. ரி.ஆர். ஆரியரத்ன
பேரா. டபிள்யு.டி. ரத்னசூரிய
கலா. டி.ஆர். ஜயவர்தன
பேரா. டி.யு.ஜே. சொன்னதர
பேரா. வை.என்.ஏ. ஜயதுங்க
திரு. சி.ஜே. விஜேரத்ன
பேரா. ஜே.கே.டி.எஸ். ஜயனெத்தி
பேரா. டபிள்யு.எஸ். பிரேமவன்ச
கலா. ஜே.கே. விஜேரத்ன
கலா. எஸ்.ஆர்.டி. றோசா
கலா. டபிள்யு.பி. யாப்பா
பேரா. ஆர். ஹேவமான்ன
கலா. கே.பீ.எஸ்.சி. ஜயரத்ன
கலா. எம்.ஆர். விஜேசிங்க
கலா. ரி.டி. சில்வா
கலா. ஆர்.வி. கூறே
கலா. டி.டி. விக்கிரமசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை V–33: வெளியீடுகளும் சமர்ப்பிப்புகளும்

| | தாவர விஞ்ஞானங்கள் | இரசாயனவியல் | கணிதவியல் | விலங்கியல் | புள்ளிவிவரவியல் | பௌதிகவியல் | அணுக்கரு விஞ்ஞானம் |
|---|---|---|---|---|---|---|---|
| வெளியீடுகள் | 03 | 14 | 02 | 20 | 05 | 09 | - |
| வெளியீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டவை | - | 01 | - | 05 | 02 | - | - |
| தெரிவிப்புகள் | 13 | 20 | - | 27 | 09 | 18 | - |
| சமர்ப்பிப்புகள் | - | 03 | - | - | - | - | - |
| சமர்ப்பிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டவை | - | - | - | - | - | - | *02* |
| நூல்கள்/தனியொருவிடய நூல்கள் | - | 02 | - | - | - | - | - |
| பேருரைகள்/சிறப்புப் பேருரைகள் | - | 02 | - | - | - | - | - |
| ***மொத்தம்*** | *16* | *42* | *02* | *52* | *16* | *27* | *02* |

### உட்கட்டமைப்பு மற்றும் வளங்கள் மற்றும் நன்கொடைகள்

மருந்தாக்க உற்பத்திப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு இரசாயனவியல் துறையின்கீழ் சுயாதீனமான மருந்தாக்கப் பகுப்பாய்வு ஆய்வுகூடமொன்றைத் தாபிக்கும்பொருட்டுக் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கும் இலங்கை மருந்துத் தயாரிப்பாளர்கள் சங்கத்துக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) கைச்சாத்திடப்பட்டது. இக் கருத்திட்டத்துக்கு 5 ஆண்டுகளுக்கு மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு ரூ. 71 மில்லியன் ஆகும்.

பீடத்தில் IFS நடத்துகின்ற ஜரி கல்விநெறிகளைப் பின்பற்றுகின்ற மாணவர்களுக்காக ரூ. 426,760.00 பெறுமதியான கணினி ஆய்வுகூடமொன்றை IFS நன்கொடையாக வழங்கியுள்ளது.

வளிமண்டல மற்றும் மின்னல்சார் பௌதிகவியல், மாஸ் ஸ்பெக்ட்றோமெட்றி ஆகிய பரப்புகளில் ஆராய்ச்சியின் அபிவிருத்திக்காக சுவீடன், உப்சலா பல்கலைக் கழகத்தின் சர்வதேச விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து (ISP) பௌதிகவியல் துறைக்குத் தொடர்ந்தும் மானியங்கள் கிடைத்தன. இத்துறையின் உபகரண அபிவிருத்தி நிலையத்தின் (CID) செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்கும் ISP நிதிகளை வழங்கியது.

கைத்தொழில் புள்ளிவிவரவியலினதும் கணித நிதியினதும் இரண்டு நேரடி உள்ளெடுப்புகளுக்கான மூன்றுமாடிக் கட்டடத்தின் நிர்மாணம் 2008 மேயில் ஆரம்பமாகியது. இது 2009ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான பீட மாணவர்களுக்கு ஒரு புதிய சிற்றுண்டிச்சாலைத் தொகுதி தேசியத் திட்டமிடல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத் துக்காகக் காத்துள்ளது. விஞ்ஞான பீட நூலகத்துக்கான புதிய நூலகக் கட்டடம் ப.மா.ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுத் தேசியத் திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்துக்காகக் காத்துள்ளது. விலங்கியல் துறைக்கான உயிரியல் தொகுதி II செயற்படுத்தப்படும் கட்டத்திலுள்ளது.

## புறக்கட்டுப்பாடுகள்

விரிவுரை/தனிமுறைப் பயிற்சி அறைகள் மற்றும் முறையான கணினி நிலைய மொன்று இல்லாமை பீடக் கல்விசார் நடவடிக்கைகளின் விரிவாக்கத்தைப் பாதிக்கத் தொடங்கியுள்ளது. நிதிகள் இல்லாமை புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதித்துள்ளது. கணிதவியல் மற்றும் இரசாயனவியல் துறைகளுக்கு முன்மொழியப்பட்ட விஸ்தரிப்புகள் உருப்பெறவில்லை.

மாணவர்களுக்கான கணினி வசதிகளை வலுப்படுத்துதல் பீடத்தின் இன்றியமையாத ஒரு தேவையாயுள்ளது. மாணவர்களுக்கான வாசிப்புப் பிரதேசங்கள், பரீட்சை மண்டபங்கள் போன்ற பொது வசதிகள் அதிகரிக்கப்பட்ட உள்ளெடுப்புகளுக்கு ஈடுகொடுப்பதற்குப் போதுமானவையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. பட்டக் கற்கைகள் பீடம்

## அறிமுகம்

பட்டக் கற்கைகள் பீடம் (FGS) "கொழும்புப் பல்கலைக்கழகத்தினுள் பட்டப்பின் கற்கைகளையும் சிறப்புத்துறை சார்ந்த அல்லது பல்துறை சார்ந்த ஆராய்ச்சிகளையும் ஆதரிப்பதற்கும் ஒத்திசைவிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான" ஆணையுடன் 1987இல் தாபிக்கப்பட்டது. அதன் பணியைக் கருத்திற்கொண்டு, மீளாய்வாண்டில் இப்பீடம் அதன் பங்கீடுபாட்டாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அதன் நடவடிக்கைகளை மேற்கொண்டு, பல்வேறு குறிக்கோள்களையும் நிறைவேற்றியது.

### பணியாளர் தோற்றப்பாடு

பேரா. லக்ஷ்மன் திசாநாயக்க பீடத்தின் பீடாதிபதியாக 24.08.2008 வரை கடமையாற்றியதைத் தொடர்ந்து, பேராசிரியர் கே. சுனில் சந்திரசிறி 25.08.2008 முதல் பதில் பீடாதிபதியாகக் கடமையாற்றினார். திரு. சமன் உயன்கொட ஆண்டுபூராவும் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகத் தொடர்ந்தார். திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். நாகஹபிட்டிய 10.08.2008 வரை சிரேஷ்ட உதவி நிதியாளராகக் கடமையாற்றினார். திருமதி எஸ்.பீ.பீ.என். சில்வாவிடம் 11.08.2008 முதல் பீடத்தின் உதவி நிதியாளர் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. திரு. சரத் எஸ். விதானகம பணிப்பாளராக ஆண்டுபூராவும் தொடர்ந்தார்.

இவ்வாண்டில் பீடாதிபதியுடன் ஒழுங்கான பணியாளர் தொகுதி உறுப்பினர்களாக இரு சிரேஷ்ட கல்விமான்கள் (ஒப்பந்தத்தில்) விரிவுரைகளை நடத்தியதுடன் பல்வேறு கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒத்திசைவித்தனர். கற்கைப் பணிப்பாளரின் நோக்கெல்லையின்கீழ் இருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மேற்பார்வை கடந்த ஆண்டில் தாபிக்கப்பட்ட இணைப்பாளர்கள் குழுவினூடாக மேற்கொள்ளப்பட்டது.

பட்டக் கற்கைகள் பீடம் எட்டு நிரந்தர ஊழியர்களையும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியம்புரியும் பதின்மூன்று பணியாளரையும் கொண்டுள்ளது.

இவ்வாண்டில் பீடச்சபையின் ஆக்க அமைவு பின்வருமாறு இருந்தது:

| | |
|---|---|
| **பீடாதிபதி/ப.க.பீ. (தலைவர்)** | - பேரா. லக்ஷ்மன் திசாநாயக்க<br>- *2008 ஆகஸ்ட் வரை*<br>- பேரா. கே. சுனில் சந்திரசிறி<br>- *2008 செப்ரெம்பர் முதல்* |
| **பிற பீடங்களின் பீடாதிபதிகள்** | |
| பீடாதிபதி/கலை | - பேரா. அமல் ஜயவர்தன |
| பீடாதிபதி/கல்வி | - பேரா. எஸ். சந்திரசேகரம் |
| பீடாதிபதி/சட்டம் | - திரு.என்.செல்வக்குமரன் |
| பீடாதிபதி/முகாமை, நிதி | - கலா. பீ.எஸ்.எம்.குணரத்ன |
| பீடாதிபதி/மருத்துவம் | - பேரா. துலித பர்னாந்து - *2008 யூலை வரை*<br>- பேரா. எச்.ஆர். செனெவிரத்ன - *2008 ஆகஸ்ட் முதல்* |
| பீடாதிபதி/விஞ்ஞானம் | - பேரா. ரி.ஆர். ஆரியரத்ன |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **பணிப்பாளர்/மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம்** | - பேரா. எம்.எச்.ஆர். ஷெரிஃப் |
| **பேரவை நியமத்தர்கள்** | - பேராசிரியர் ஏ.எச்.எம்.ஹுசெய்ன் - *30.06.2008 வரை*<br>- திரு. நளின் ஆட்டிகல - *30.06.2008 வரை*<br>- கலா. கிங்ஸ்லி விக்கிரமசூரிய - *2008 யூலை முதல்*<br>- வித்யாநிதி கலா. என்.ஆர். த சில்வா - *2008 யூலை முதல்*<br>- திரு. திலக் கருணாரத்ன |
| **மேலவை நியமத்தர்கள்** | - பேரா. பி.எல்.பண்டிதரத்ன<br>- பேரா. சிசிர பின்னவல<br>- பேரா. நிமல் கே. டங்கல்ல – *2008 ஆகஸ்ட் முதல்* |
| **பேரவையிலிருந்து நியமத்தர்** | - பேரா. ஜயந்த த சில்வா |

பின்வருவோரும் அழைப்பின்பேரில் பீடச்சபைக் கூட்டங்களில் பங்குபற்றினர்:

| | |
|---|---|
| தவிசாளர்/BSDS | - பேரா. ஜீ.ஐ.சி.குணவர்தன |
| கற்கைப் பணிப்பாளர்கள் | - திரு. சரத் எஸ். விதானகம |
| சிரேஷ்ட கல்விமான்கள் FGS | - கலா. கே. சர்வேஸ்வரன் |
| | - திருமதி அனுருத்திக செனெவிரத்ன |

மீளாய்வாண்டில் பீடம் பதினான்கு (14) பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களையும் பதினொரு (11) முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியதுடன், பல்துறை ஆராய்ச்சியில் அதன் எம்பில்/பீஎச்.டி. பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தது. பீடம் எதிர்காலத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

ப.க. பீடத்திலுள்ள கற்பித்தல் பணியாளர் பல்கலைக்கழகத்திலிருந்தும் கைத்தொழிலிலிருந்தும் ஈர்க்கப்பட்டனர். இது கற்பித்தலில் மட்டுமன்றி ஆராய்ச்சியிலும் பல்கலைக் கழக – தனியார்துறைக் கூட்டுப் பங்காண்மையை மேம்படுத்தியுள்ளது. பிற பீடங்களிலிருந்தும் கைத்தொழிலிலிருந்தும் ஈர்க்கப்பட்ட பின்வரும் பணியாளர் வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் இணைப்பாளர்களாகக் கடமையாற்றினர்.

## அட்டவணை V–34: பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களின் இணைப்பாளர்கள

| நிகழ்ச்சித்திட்டம் | இணைப்பாளர் |
|---|---|
| எம்பில்/பீஎச்டி | கலா. கே. சர்வேஸ்வரன் |
| பிணிஆய்வு உளவியலில் எம்.பில். | கலா. பியாஞ்சலி த சொய்சா |
| நூலக, தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி | திரு. சி.சி. ஜயசுந்தர (09.11.2008 வரை)<br>செல்வி சுமணா ஜயசூரிய |
| வியாபாரக் கற்கைகளில் முதுமாணி | கலா. ரஞ்சித் பண்டார<br>பேரா. எச்.டி. கருணாரத்ன (01.11.2008) |
| மகளிர் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி | கலா. சந்தனி லியனகே |
| மகளிர் உரிமைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி | கலா. கே. சர்வேஸ்வரன்<br>செல்வி அனுருத்திக செனெவிரத்ன<br>(20.10.2008 முதல்) |
| முரண்பாட்டுத் தீர்வில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி | கலா. கே. சர்வேஸ்வரன் |
| தொழில் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி | கலா. டி.ஏ.சி. சில்வா |
| யப்பானியக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி | பேரா. ஜயந்தி த சில்வா |
| தகவல் முறைமை முகாமைத்துவத்தில் டிப்ளோமா/முதுமாணி | திரு. சி.சி. ஜயசுந்தர |
| அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி | சங். கலா. டபிள்யு. விமலரத்தன |
| அமெரிக்கக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி | பேரா. நெலுகா சில்வா - 01.10.2008 வரை |
| உளவளத்துணை, உளச்சமூகவியல் பணியில் ப.பி.டிப்ளோமா | கலா.வருணி கனேபொல |
| வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா | கலா. ரஞ்சித் பண்டார |
| சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்ளோமா[1] | கலா. ரஞ்சித் பண்டார |
| சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்ளோமா m-கற்றல்முறை | திரு. சரத் எஸ். விதானகம |

[1]நுழைவுத் தகைமை க.பொ.த. உ/த பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை V–35: பட்டப்பின் மாணவர் சேர்ப்பும் பட்டம்பெறுதலும்
(பட்டம், சேர்ப்பு மற்றும் பட்டம்பெற்றமைரீதியாக வகைப்படுத்தப்பட்டது)

| நிகழ்ச்சித்திட்டம் | சேர்ப்பு | பட்டம் பெற்றோர்/ நிலை |
|---|---|---|
| பிணி ஆய்வு உளவியலில் எம்.பில். | 06 | * |
| பல்துறைக் கற்கைகளில் எம்.பில். | 05 | 01 |
| மனித உரிமைகளில் முதுமாணி | 11 | * |
| முரண்பாட்டுத்தீர்வில் முதுமாணி | 13 | 01 |
| தயாரிப்பு முகாமைத்துவத்தில் முதுமாணி | 16 | 03 |
| யப்பானியக் கற்கைகளில் முதுமாணி | 07 | 01 |
| தொழில் கற்கைகளில் முதுமாணி | 08 | 02 |
| மகளிர் கற்கைகளில் முதுமாணி | 04 | 02 |
| அபிவிருத்திக் கற்கைகளில் முதுமாணி | 48 | * |
| வியாபார கற்கைகளில் முதுமாணி | 203 | * |
| நூலக, தகவல் விஞ்ஞான முதுமாணி | - | 01 |
| பிரயோக உளவியலில் விஞ்ஞான முதுமாணி | - | 01 |
| மனித உரிமைகளில் பட்டப்பின் டிப்ளோமா | 30 | * |
| முரண்பாட்டுத்தீர்வில் பட்டப்பின் டிப்ளோமா | 22 | * |
| தயாரிப்பு முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா | 35 | 06 |
| உளவளத்துணை, உளச்சமூகப்பணியில் பட்டப்பின் டிப்ளோமா | 22 | 17 |
| யப்பானியக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | 13 | * |
| தொழில் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | 25 | 02 |
| மகளிர் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | 05 | 03 |
| அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | 125 | 12 |
| வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PgD.BM) | 116 | 77 |
| அமெரிக்கக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | 13 | 05(06*) |
| தகவல் முறைமை முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா | 76 | * |
| முரண்பாடு, சமாதானக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | 32 | * |
| சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்ளோமா | 42 | * |
| **மொத்தம்** | **877** | **129** |

* முதுமாணிப் பட்டத்துக்காகத் தொடர்தல்

இப்பீடத்தால் நடத்தப்படும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் சீராகத் தொடர்ந்தன. மேலும், உரிய கற்கைச் சபைகளின் வழமையான கூட்டங்கள் ஆண்டு முழுவதும் நடத்தப்பட்டன. வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PgD.BM), வியாபாரக் கற்கைகளில் முதுமாணி (MBS), அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா (PgD.DS) ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களில் புகுவதற்கான கேள்வி அதிகரித்துவருவதனால் இவ்வாண்டின்போது இரு தொகுதி மாணவர்களைச் (வார நாட்கள் மற்றும் வார இறுதிகள்) சேர்த்துக் கொள்வதற்கு இப்பீடம் நடவடிக்கை எடுத்தது.

## புதிய கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

வியாபார முகமான நிகழ்ச்சித்திட்டங்களுக்குள்ள கேள்வியானது இத்துறையில் மேலும் வாய்ப்புக்களைத் தேடும்படி பீடத்தைத் தூண்டியது. இதன்விளைவாக 2007 யூலையில் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் *m*-கற்றல்முறையூடாக தொலைக்கற்றல் கல்வியை எட்டக்கூடியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLT மொபிரெல் உதவியுடன் மேலும் வலுப்படுத்தப்பட்டது. *m*-கற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் முறைப்படியான அங்குரார்ப்பணம் 10.09.2008இல் இடம்பெற்றது. பட்டக் கற்கைகள் பீடத்தில் *e*-கற்றல் மற்றும் *m*-கற்றல் வசதிகளை வழங்குவதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் SLT மொபிரெல்லுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று (MOU) கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கான தொழில்நுட்ப ஆதரவை மொபிரெல் வழங்குகின்ற அதேவேளையில், மென்பொருள் திட்டத்தை மைக்றோ சொப்ட் வழங்குகின்றது. தொடக்கத்தில் இந்நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குசெய்வதில் UCSCயும் பயனுள்ள உதவியை வழங்கியது. கல்விசார் உள்ளீடுகளை வழங்குவதற்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த முகாமைக்கும் FGS பொறுப்பாயுள்ளது. *m*-கற்றல் மற்றும் *e*-கற்றல் வசதிகளை விருத்திசெய்வதற்காக பட்டக் கற்கைகளின் *m*-கற்றல் கலைக்கூடத்துக்குப் பொறுப்பான SLT மொபிரெல் ஒதுக்கியுள்ள முழுநேர ஊழியரொருவர் பீடத்தில் நிலைகொண்டுள்ளார்.

நாட்டில் பிணிஆய்வு உளவியலில் முதன்முதலான முதுமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (M.Phil) பிரதம அதிதியாக கௌரவ சுகாதார அமைச்சர் திரு. நிமல் சிறிபால த சில்வா அவர்களின் பங்கேற்புடன் 2008 பெப்ருவரியில் ஆரம்பமானது. கற்பித்தல், பிணிஆய்வு வேலை, ஆராய்ச்சி ஆகியவற்றின் இணைப்பான இந்த ஈராண்டு நிகழ்ச்சித்திட்டத்துக்கு இலண்டன் பல்கலைக்கழக கிங்ஸ் கல்லூரியின் ஸ்ரீ லங்கா ட்றோமா குறூப் ஆதரவளிக்கின்றது.

2008 யூலையில் FGS தொடக்கிவைத்துள்ள மற்றொரு புதிய நிகழ்ச்சித்திட்டம் தகவல் முறைமை முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமாவாகும்.

கொஸ்ர றிக்கா, சமாதானத்துக்கான ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தின் கூட்டுழைப்புடன் முரண்பாட்டுத்தீர்வில் பட்டப்பின் டிப்ளோமா திருத்தப்பட்டு முரண்பாடு மற்றும் சமாதானக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி எனத் தலைப்பிடப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் 15.10.2008இல் தொடங்கியது. கொஸ்ர றிக்கா, சமாதானத்துக்கான ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேரா. பார்பரா ரின்ற் நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பணத்தில் கௌரவ அதிதியாகப் பங்குபற்றியதுடன், 'பல்கலாசார வாதமும் சமாதானமும்' என்ற முதலாவது பாடநெறி மொடியூலுக்கு விரிவுரையாளராகவும் செயற்பட்டார்.

## 2009இல் வரவிருக்கின்ற கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

எதிர்வரும் ஆண்டில் பின்வரும் இரு புதிய நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு FGS திட்டமிட்டுள்ளது.

அ) பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடலில் முதுமாணி

ஆ) தென்னாசியக் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா/முதுமாணி

முதலாவது நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டு, கிட்டிய எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாசியக் கற்கைகளில் முதுமாணிப் பட்டத்துக்கு வழிவகுக்கின்ற பட்டப்பின் டிப்ளோமா ஒன்றைத் தாபிப்பதற்கான முன்மொழிவு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் அங்கீகாரத்துக்காக மூதவையால் விதந்துரைக்கப்பட்டது.

## புலமைப்பரிசுகள்

கொஸ்ர றிக்காவில் சமாதானத்துக்கான பல்கலைக்கழகத்தில் கிடைக்கக்கூடியதாக சர்வதேச சமாதானக் கற்கைகளில் ஓராண்டு முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கான புலமைப்பரிசை கொஸ்ர றிக்கா சமாதானத்துக்கான ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் வழங்கியது. சட்ட பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ஏ. சர்வேஸ்வரன் இதற்குத் தெரிவுசெய்யப்பட்டு இந்நோக்கத்துக்காக அவர் கொஸ்ர றிக்கா பயணமானார்.

பட்டக் கற்கைகள் பீடத்துக்கு மற்றொரு 12 நாள் கல்விச் சுற்றுலா யப்பானிய அரசாங்கத்தால் சார்க்-யப்பான் தலைமைத்துவ அபிவிருத்திச் சுற்றுலா 2008இன்கீழ் வழங்கப்பட்டது. யப்பானியக் கற்கைகளில் ஒரு பட்டப்பின் டிப்ளோமா மாணவியான செல்வி சுவேந்திரனி மெனிக் ஜயரத்ன இச்சுற்றுலாவில் இலங்கையைப் பிரதிநிதித் துவப்படுத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்டார். வருடாந்தம் நடத்தப்படும் கன்சாய் பல்கலைக்கழக மொழி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு வேறு இரு மாணவர்கள் பீடத்தால் நியமிக்கப்பட்டனர்.

## பீடக் கல்விசார் அமர்வுகள்

பீடத்தின் வருடாந்தக் கல்விசார் அமர்வு 24.10.2008இல் கேட்போர்கூடத்தில் நடத்தப் பட்டது. பதில் பீடாதிபதி பேராசிரியர் சுனில் சந்திரசிறி வரவேற்புரை நிகழ்த்தினார். உபவேந்தர் பேராசிரியர் கிஷானிக்க ஹிரிம்புரேகம இந்நிகழ்ச்சியில் கௌரவ அதிதியாகப் பங்குபற்றினார். பிரதம அதிதியும் பேருரைப் பேச்சாளருமான பேராசிரியர் ஏ.டி.வி. த எஸ். இந்திரரத்ன "நவீன அறிவுப் பொருளாதாரத்தில் பட்டப்பின் கற்கைகளின் பங்கு" பற்றி ஒரு விரிவுரையாற்றினார்.

கிடைக்கப்பெற்ற பல்வேறு பொழிப்புக்களில் 12 வெளியீட்டுக்காகத் தெரிவுசெய்யப் பட்டன.

## எதிர்காலப் போக்குகள்

பீடம் எம்.பில்./பீஎச்.டி. நிகழ்ச்சித்திட்டத்தை மீளக் கட்டமைக்கவும்; நன்மதிப்பு அடிப்படையிலான மதிப்பீட்டு முறைமையை அறிமுகப்படுத்தவும் பாடநெறிகளினதும் பாடவிதானங்களினதும் மாணவர் மதிப்பீட்டை அறிமுகப்படுத்தவும் புதிய ஊழியர் கோப்பு பதவிகளை நாடவும் எதிர்பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சித்திட்ட ஒத்திசைவு

பட்டக் கற்கைகள் பீடத்தால் நடத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான நாளாந்தப் பிரச்சினைகளையும் சர்ச்சைக்குரிய விடயங்களையும் தீர்க்கும்பொருட்டுப் பீடம் இணைப்பாளர்கள் கூட்டங்களை நடத்தியது. இக்கூட்டங்கள் சர்ச்சைக்குரிய பிரதான விடயங்கள் இனங்காணப்படுதலையும் நிகழ்ச்சித்திட்டங்களின் தரமும் கல்விசார் ஒத்திசைவும் நிருவாகமும் மேம்படுத்தப்படுதலையும் எளிதாக்கின.

## ஒழுக்கநெறிக் குழு

ஆராய்ச்சி முன்மொழிவுகள் எல்லாவற்றினதும் ஒழுக்கநெறி அம்சத்தை நுணுகி ஆராய்வதற்கு ஒழுக்கநெறிக் குழுவுக்குப் புத்துயிரளிப்பதற்கான நடவடிக்கைகளைப் பீடம் மேற்கொண்டது. திரு. ஸ்ரீபன் கோகில், பேராசிரியர் அமல் ஜயவர்தன, திரு. சரத் விதானகம, கலா. குமுது திசாநாயக்க ஆகியோர் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

## செயற்பாட்டுப் பத்திரம் மற்றும் பீடக் குறிப்பேடு

கற்கைப் பணிப்பாளரின் முன்மொழிவொன்றின்பேரில் செயற்பாட்டுப் பத்திரத் தொடரொன்றை ஆரம்பிப்பதற்குப் பீடம் தீர்மானித்தது. இப்பத்திரங்கள் இறுதியாக உத்தேசிக்கப்பட்டுள்ள FGS குறிப்பேட்டில் வெளியிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி VI

## சிறிபாளி வளாகம்

### அறிமுகம்

1996இல் மேற்கு வளாகமாக நிறுவப்பட்ட சிறிபாளி வளாகம், பின்பு தன் பெயரைச் 'சிறிபாளி வளாகம்' என மாற்றியது. 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 27(1)ஆம் பிரிவின் நியதிகளின்படி 11.09.1998 முதல் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

இவ்வளாகம் வெகுசன ஊடகத்துறை, அரங்காட்டற் கலைகள்துறை என்ற இரு துறைகளுடன் தொடர்ந்து செயற்பட்டது. சிரேஷ்ட கல்விசார் பணியாளர்கள் போதாமை இவ்விரு துறைகளையும் பீடங்களென்ற அந்தஸ்துக்கு உயர்த்துகின்ற செயல்முறைக்குத் தடங்கலாயிருந்தது. மீளாய்வாண்டின்போது மொழிப் பிரிவும் கணினிக் கற்கைகள் பிரிவும் தொடர்ந்தும் இரு தனிவேறு அலகுகளாகச் செயற்பட்டன. எதிர்காலத்தில் இவ்விரு அலகுகளும் துறைகளென்ற அந்தஸ்துக்கு விருத்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வெகுசன ஊடகங்கள் துறை வெகுசன ஊடகங்களில் நான்காண்டுச் சிறப்புப் பட்டமொன்றை வழங்குகின்றது. இதன் மாணவர்கள் நான்காண்டுக் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தின்போது 43 கல்விநெறி அலகுகளைப் பூர்த்திசெய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். இவற்றில் 26 பிரதம கல்விநெறி அலகுகள், 11 தெரிவுக்கு உரியவை, மற்றும 6 அடிப்படைக் கல்விநெறி அலகுகளாகும். மாணவர்களின் செயல்நிறைவேற்றத்தைத் தீர்மானிப்பதில் பாடப்பரப்புகளின் கோட்பாட்டியல் அம்சங்களும் செயல்முறை அம்சங்களும் தேர்வுமுறைகளாகப் பயன்படுத்தப் படுகின்றன. பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதற்கு நான்காம் ஆண்டில் ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

அரங்காட்டற் கலைகள் துறைதான் இலங்கையில் அரங்காட்டற் கலைகளில் கல்விநெறியொன்றை வழங்குகின்ற ஒரேயொரு துறையாகும். 2008ஆம் ஆண்டில் இசை, நடனம் மற்றும் நாடகமும் அரங்கமும் ஆகிய மூன்று பிரதம வகுதிகளில் 23 மாணவர்கள் பட்டம்பெற்றனர். அரங்காட்டற் கலைப் பட்ட மாணவர்கள் இக்கல்விநெறியின்போது கலையும் வடிவமும், திரைப்படம், தொலைக்காட்சி போன்ற ஏனைய பரப்புகளில் அறிவுச்செல்வத்தை ஈட்டினர். இவ்வாண்டில் 51 புதிய பட்ட மாணவர்கள் இத்துறையின்கீழ் பதிவுசெய்யப்பட்டனர். இத்துறை அதன் பட்ட மாணவர் பாடத்திட்டங்களை இற்றைப்படுத்தி, இப்போது 43 கல்விநெறி அலகுகளை (129 நன்மதிப்புகள்) வழங்குகின்றது. மேலும் இத்துறை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்தும் தொழிலாண்மை நிறுவனங்களிலிருந்தும் நல்ல அனுபவமுள்ள கல்விமான்களினதும் தகுதிபெற்ற கலைஞர்களினதும் சேவைகளைப் பெற்றது.

திரு.டபிள்யு.என். வில்சன் வளாகத்தின் முதல்வராக 13.03.2008 வரை கடமையாற்றியதைத் தொடர்ந்து கலா. ரியுடர் வீரசிங்க பதில் முதல்வராக 14.03.2008 முதல் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக் கல்விசார் மற்றும் நிர்வாக முடிவுகள் வளாகச் சபையுடன் கலந்தாலோசித்து எடுக்கப்பட்டன. இவ்வாண்டின்போது வளாகச் சபையின் ஆக்க அமைவு பின்வருமாறு:

**முதல்வர்**
- திரு.டபிள்யு.என். வில்சன் - 13.03.2008 வரை
- கலா. ரி. வீரசிங்க (பதில்) - 14.03.2008 முதல்

**பேரவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**
- திருமதி ரமணி அமரசூரிய-செப்ரெம்பர் 2008 வரை
- கலா. பண்டித் டபிள்யு.டி.அமரதேவ செப்ரெம்பர் 2008 வரை
- திரு. ரோஹண வீரசிங்க - ஒக்ரோபர் 2008 முதல்
- திரு. ஜினதாச பீரிஸ் - ஒக்ரோபர் 2008 முதல்

**மேலவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**
- பேரா.அமல் ஜயவர்தன- செப்ரெம்பர் 2008 வரை
- பேரா. எம்,ஈ.எஸ். பெரேரா - ஒக்ரோபர் 2008 முதல்

**துறைகளின் தலைவர்கள்**
- வெகுசன ஊடகங்கள் - கலா. ஆர். ஹெட்டியாரச்சி (பதில்)
- அரங்காட்டற் கலைகள் - திருமதி எம்.டி. குமுதினி

## பணியாளர் பற்றிய தகவல்

வளாகத்தின் பதில் முதல்வராக கலா. ரியுடர் வீரசிங்க தொடர்ந்த அதேவேளையில், திருமதி ஏ.எச். லியனகே சிரேஷ்ட உதவிப் பதிவாளராகச் செயற்பட்டார். மீளாய்வாண்டில் கலா. ஆர். ஹெட்டியாரச்சி மற்றும் திருமதி எம்.டி. குமுதினி (பதில்) ஆகியோர் முறையே வெகுசன ஊடகங்கள் மற்றும் அரங்காட்டற் கலைகள் ஆகிய துறைகளின் தலைவர்களாகத் தொடர்ந்தனர்.

2008ஆம் ஆண்டில் மொத்த ஊழியர் எண்ணிக்கை எழுபத்து மூன்றாக (73) இருந்தது. இது முதல்வர், மூன்று (03) நிருவாகப் பணியாளர், பதினான்கு (14) கல்விசார் பணியாளர், இரண்டு (02) கல்விசார் ஆதரவுப் பணியாளர், இரண்டு (02) தொழில்நுட்பத் தரத்தினர் மற்றும் ஐம்பத்து இரண்டு (52) கல்விசாராத் தரத்தினர் ஆகியோரை உள்ளடக்கியது.

திரு. ஜயந்த வன்னிசிங்க (வெகுசன ஊடகங்கள்), திருமதி உபேக்கா கங்கொடவில (அரங்காட்டற் கலைகள்) ஆகியோர் முறையே 02.08.2006 மற்றும் 03.11.2006 முதற் கொண்டு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் IIக்குப் பதவியுயர்த்தப்பட்டனர்,

நிரந்தரக் கல்விசார் பணியாளர்களைத் தவிர, கைத்தொழிலிலிருந்து நிபுணர்களும் வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து ஆசிரியர்களும் வருகைதரும் பணியாளர்களாகப் பெற்றுக்கொள்ளப்பட்டனர்.

### அட்டவணை VI–01: கல்விசார் பணியாளர்

| கல்விசார் / துறை | மொத்தம் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | தகுதிகாண் நிலை விரிவுரையாளர் | போதனாசிரியர்கள் | உதவி நூலகர் | கல்வி விடுமுறையிலுள்ள விரிவுரையாளர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வெளிநாட்டில் | உள்நாட்டில் |
| வெகுசன ஊடகங்கள் | 08 | 04 | - | 03 | 01 | - | 04 | - |
| அரங்காட்டற் கலைகள் | 05 | 02 | 01 | 02 | - | - | 01 | - |
| நூலகம் | 01 | - | - | - | - | 01 | - | - |
| **மொத்தம்** | **14** | **06** | **01** | **05** | **01** | **01** | **05** | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வெகுசன ஊடகங்கள் துறையிலுள்ள நான்கு பணியாளர்கள் தமது பீஎச்.டி. பட்டத்துக்காகப் படித்துக்கொண்டிருக்கின்றனர் – செல்வி எச்.எம்.எச். சிறிவர்தன (ஐக்கிய இராச்சியம்), திரு. எஸ்.எம். செனரத் (சீனா), திரு.டி. ஸ்ரீ ரஞ்சன் (சீனா) மற்றும் திரு. பீ. நிஷாந்த (சீனா).

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

ஒவ்வொரு பட்டக் கல்விநெறிக்குமான (வெகுசன ஊடகங்களில் பிஏ மற்றும் அரங்காட்டற் கலைகளில் பிஏ) வருடாமந்த மாணவர் உள்ளெடுப்பு அண்ணளவாக 60. பட்ட மாணவர் பாடத்திட்டங்களின் பாடவிதான உள்ளடக்கங்கள் அரங்காட்டற் கலைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறைகளில் மிகப்பரந்த பரப்புகளை உள்ளடக்குகின்றன. எனினும் வளாகத்தில் கற்பித்தல் மற்றும் பரீட்சை நடவடிக்கைகளை நடத்துவதற்கு விரிவுரையாளர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல. இதன்விளைவாக வளாகம் பிரதானமாக வருகைதரும் பணியாளர்களின் சேவைகளில் கடுமையாகத் தங்கியிருந்தது. பொதுவாக வளாகத்தால் கல்வியாண்டொன்றில் ஏறக்குறைய 75 வருகைதரும் பணியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

அட்டவணை VI–02:
பட்ட மாணவர் சேர்ப்பு, மகாபொல மற்றும் கல்வி உதவுதொகை

| கல்வியாண்டு | மாணவர் உள்ளெடுப்பு | | | கல்வி உதவுதொகை பெறும் மாணவர் | மஹாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர் |
|---|---|---|---|---|---|
| | வெகுசன ஊடகம் | அரங்காட்டற் கலைகள் | மொத்தம் | | |
| 2003 / 2004 | 26 | 24 | 50 | 03 | 38 |
| 2004 / 2005 | 32 | 27 | 59 | 21 | 32 |
| 2005 / 2006 | 33 | 26 | 59 | 30 | 14 |
| 2006/2007 | 11 | 97 | 108 | 66 | 13 |
| **மொத்தம்** | **102** | **174** | **276** | **120** | **97** |

அட்டவணை VI–03:
இறுதிப் பரீட்சையில் பட்ட மாணவர்களின் செயலாற்றுகை-2008

| பட்டம் \ செயலாற்றுகை | 1ஆம் வகுப்பு | 2ஆம் வகுப்பு மேல் | 2ஆம் வகுப்பு கீழ் | சாதாரண சித்தி | பட்டம்பெற்ற மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பிஏ (வெகுசன ஊடகம்) | - | 04 | 15 | 07 | 26 |
| பிஏ (அரங்காட்டற் கலைகள்) | 01 | 12 | 07 | 03 | 23 |

2008ஆம் ஆண்டில் ஐந்தாவது தொகுதி மாணவர்கள் வளாகத்தின் பட்டதாரிகளாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீடிப்புக் கல்விநெறிகள

**மொழி அலகு** – வெகுசன ஊடகத்துறையின்கீழ் செயற்படுகின்ற இவ்வலகு வெகுசன ஊடகங்களில்/அரங்காட்டற் கலைகளில் நான்காண்டு சிறப்புப் பட்டத்துக்குப் படிக்கின்ற பட்ட மாணவர்களுக்கு அதன் சேவைகளை வழங்குகின்றது. இச்சேவைக் கல்விநெறிகள் ஆங்கிலம், தமிழ் மற்றும் இந்தி மொழிகளை உள்ளடக்குகின்றது. முதலாம், இரண்டாம் ஆண்டுப் பட்ட மாணவர்கள் அனைவருக்கும் ஆங்கிலம் கட்டாயமானது. அவர்களுக்கு ஆங்கிலத்தில் தெரிவுக் கல்விநெறியைப் பின்பற்றும் வாய்ப்பும் வழங்கப் படுகின்றது. இவ்வலகு ஏற்கெனவே வார இறுதி நாட்களில் வழங்கப்படும் இரண்டு நீடிப்புக் கல்விநெறிகளை ஆரம்பித்துள்ளது.

**கணினிக் கற்கைகள் அலகு** – 1999இல் தாபிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப அலகு வெகுசன ஊடகத்துறையின்கீழ் செயற்படுகின்றது. கணினிக் கல்விநெறி அலகு எல்லாப் பட்ட மாணவர்களுக்குமான ஒரு சேவைக் கல்விநெறியாகும்.

**அட்டவணை VI–04: நீடிப்புக் கல்விநெறிகளில் மாணவர் சேர்ப்பு - 2008**

| கல்விநெறி | மாணவர் |
|---|---|
| தொழிலுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் (CEFE) | 14 |
| உயர் கல்விக்கும் தொழிலுக்குமான ஆங்கிலத்தில் சான்றிதழ் (CEHEE) | 136 |
| அலுவலகப் பிரயோகங்களில் சான்றிதழ் - தகவல் தொழில்நுட்பம் | |
| (COA – IT-2008) (1ஆம் தொகுதி) | 06 |
| (2ஆம் தொகுதி) | 29 |
| **மொத்தம்** | **215** |

## வெகுசன ஊடகங்கள்

வெகுசன ஊடகப் பட்டத்துக்குப் படிக்கின்ற மாணவர்கள் விவரணச் சித்திரங்கள், ஊடக மற்றும் புகைப்படக்கருவிச் செயலமர்வுகள், வாராந்தக் கலந்துரையாடல் வட்டங்கள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

## அரங்காட்டற் கலைகள்

இத்துறை 43 கல்விநெறி அலகுகளை வழங்குகின்றது. அது 26 பிரதம துறைக் கல்விநெறிகளையும் (78 பயிற்சிக்கூறுகள்), 11 தெரிவுக் கல்விநெறிகளையும் (33 பயிற்சிக்கூறுகள்), 06 அடிப்படைக் கல்விநெறிகளையும் கொண்டுள்ளது. மாணவர்கள் அவர்களின் 4ஆம் ஆண்டுக் கல்விநெறியின்போது அரங்காட்டற் கலைகள் தொடர்பான பெருமளவு கோட்பாடு சார்ந்த மற்றும் செயல்முறை சார்ந்த வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

அரங்காட்டற் கலைகளில் பட்டத்துக்குப் படிக்கின்ற மாணவர்கள் நாடகத்திலும் அரங்கிலும் நடித்தலும் இயக்குதலும்; அரங்காட்டல்களைத் தயாரித்தல்; குறுந் திரைப்படங்களைத் தயாரித்தல், குறுந்திரைப்பட விழா மற்றும் நாடகக் காட்சிகள் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை VI–05: தேசிய நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடல்

| அரசாங்கத்துறை | தனியார்துறை |
| --- | --- |
| கலா. எல்.ரி. வீரசிங்க | திருமதி உபேக்கா கங்கொடவில |
| கலா. ரஞ்சன் சீ.கே. ஹெட்டியாரச்சி | திருமதி எம்.டி. குமுதினி |
| திரு. ஜே.எம்.ஆர்.சி. பண்டார | திருமதி உபேக்கா கங்கொடவில |
| திரு. எஸ்.எல்.பீ. பொன்சேகா | |
| திருமதி உபேக்கா கங்கொடவில் | |
| திருமதி எம். குமுதினி | |

### அட்டவணை VI–06: வெளியீடுகளும் சமர்ப்பிப்புகளும்

| துறை | கட்டுரைகள் | ஆராய்ச்சி |
| --- | --- | --- |
| வெகுசன ஊடகங்கள் | 09 | - |
| அரங்காட்டற் கலைகள் | - | 01 |

## உட்கட்டமைப்பு வளங்கள் மற்றும் நன்கொடைகள்

கோட்பாடுகளை நடைமுறையில் உள்ளடக்கியதான கற்றல் செயல்முறையின் முன்னேற்றத்துக்காக IRQUE கருத்திட்டத்தின்கீழ் வளாகத்துக்கு ரூ. 15 மில். கிடைத்தது. இதற்கு மேலதிகமாக இவ்வாண்டில் வளாகத்துக்கு நெற்வேர்க் தாபிப்பதற்காக மேலும் ரூ. 2 மில். கிடைத்தது.

## நூலகம்

சிறிபாளி வளாகத்திலுள்ள நூலகம் 16,000க்கும் கூடிய நூல்களையும் 387 DVDகளையும் VHS கசெட்டுகளையும் உள்ளடக்கிய ஒரு திரட்டைக் கொண்டுள்ளது. மீளாய்வாண்டில் ரூ. 1,153,648.17 பெறுமதியான நூல்களும் பருவ இதழ்களும் கொள்வனவு செய்யப்பட்டன, அல்லது சுவீகரிக்கப்பட்டன. இவற்றுடன் 16 நூல்கள் நன்கொடைகளாகக் கிடைக்கப்பெற்றன. 2008ஆம் ஆண்டில் நூலகம் 15 நாளாந்த மற்றும் வாராந்தச் செய்திப் பத்திரிகைகளுக்கும் இரு குறிப்பேடுகளுக்கும் சந்தா செலுத்தக்கூடுமாயிருந்தது. நூலகத்தில் 292 பட்ட மாணவர்கள், 19 கல்விசார் மற்றும் நிருவாகப் பணியாளர், 52 கல்விசாராப் பணியாளர் ஆகியோருட்பட மொத்தம் 363 வாசகர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி VII

# நிலையங்கள்

## 01. தொழில் வழிகாட்டல் அலகு (CGU)

தொழில் வழிகாட்டல் அலகு பல்கலைக்கழகப் பட்ட மாணவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் ஒரு தொடர்வரிசையான செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் குறுகிய கல்விநெறிகளையும் நடத்தியது.

### சந்தைப்படுத்தலில் மற்றும் மனிதவள முகாமைத்துவத்திலும் அபிவிருத்தியிலும் சான்றிதழ் கல்விநெறிகள்

மிகப் பிரபலமான நிகழ்ச்சித்திட்டங்களாயிருந்தவை இவ்வாண்டில் முடிவுற்ற சந்தைப்படுத்தலில் மற்றும் மனிதவள முகாமைத்துவத்திலும் அபிவிருத்தியிலும் சான்றிதழ் கல்விநெறிகளாகும். இவ்விரு நிகழ்ச்சித்திட்டங்களும் முகாமைத்துவ, நிதிப் பீடத்தின் கூட்டுழைப்புடன் ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக 2007இல் ஆரம்பிக்கப்பட்டன. வார இறுதி நாட்களில் நடத்தப்பட்ட இக்கல்விநெறிகளுக்கான பாடவிதானம் முகாமைத்துவ, நிதிப் பீடத்தையும் தனியார்துறையையும் சேர்ந்த வளப் பகிர்வாளர்களால் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. வகுப்பறைப் பாடங்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்பட்டதுடன், கல்விநெறியின் ஒரு பகுதியாக 3–6 மாதங்களுக்கான முழுநேர உள்ளுறைவுப் பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் மத்தியில் பெரும்பான்மையான மாணவர்கள் கலைப் பீடத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த அதேவேளையில், விஞ்ஞானம், கல்வி மற்றும் சட்ட பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் இருந்தனர். இரண்டாவது தொகுதி மாணவர்களுக்கான கல்விநெறியை ஒரு திருத்திய பாடவிதானத்துடன் ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### விசேட உள்ளுறைவுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

யூனிலீவர் (பிரை) லிமிரெட்டால் 2008 யூன் 23ஆந் தேதியன்று செயலமர்வொன்று பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் விசேட உள்ளுறைவுப் பயிற்சியாளர்களாக முகாமைத்துவ, நிதிப் பீட மாணவர்களைக் கவரும் நோக்கைக் கொண்டிருந்தது. இச்செயலமர்வில் மொத்தம் 110 மாணவர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து 5 உள்ளுறைவுப் பயிற்சியாளர்களை யூனிலீவர் (பிரை) லிமிரெட் தெரிவுசெய்தது. இவ்விசேட உள்ளுறைவுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதற்குக் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து இரு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறன்களைச் சுவீகரிக்கும் துரிதப்படுத்திய கருத்திட்டம் (ASAP)

திறன்களைச் சுவீகரிக்கும் துரிதப்படுத்திய கருத்திட்டம் (ASAP) என்ற தலைப்பிலான ஒரு நிகழ்ச்சித்திட்டம் USAID கூட்டுழைப்புடன் நடத்தப்பட்டது. 2008 யூலை 12 முதல் 20 வரை சனிக்கிழமைகளில் ஐந்து முழு நாட்கள் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்துக்குக் கலைப் பீடத்திலிருந்து முப்பத்தாறு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அச்சடித்த கைந்நூல்களையும் ஏனைய விடயவிதானங்களையும் USAID வழங்கியது. குழுவாகப் பணியாற்றுதல், நேர்முகப்பரீட்சைகளை எதிர் கொள்ளல் மற்றும் ஆளுமை அபிவிருத்தி என்பவை இந்நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அம்சங்களில் அடங்கும்.

## *"உங்கள் சொந்தக் காலில் நிற்றல்"* நிகழ்ச்சித்திட்டம்

"உங்கள் சொந்தக் காலில் நிற்றல்" என்ற தலைப்பிலான ஒரு நிகழ்ச்சித்திட்டம். 12.07.2008இல் தொடங்கி நான்கு சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டது. கலைப் பீடத்தைச் சேர்ந்த ஐம்பத்தொரு மாணவர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர். இந்நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அம்சங்களில் தொழில் முயற்சியாளர் திறன்கள் மற்றும் ஆளுமை அபிவிருத்தி என்பவை அடங்கும். உள்ளக மற்றும் வெளிப்புற நடவடிக்கைகளை உள்ளடக்கிய இந்நிகழ்ச்சித்திட்டம் BDS கன்சல்டன்ஸ் (பிரை) லிமிரெட்டால் நடத்தப்பட்டது.

## தேசிய பட்ட மாணவர் மாநாடு

கார்சன்ஸ் (பிரை) லிமிரெட்டால் ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய பட்ட மாணவர் மாநாட்டில் எழுபத்தைந்து பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். இம்முழுநாள் நிகழ்ச்சி 2008 செப்ரெம்பர் 5ஆந் தேதியன்று ப.ஞா.ச.மா.மண்டபத்தில் நடத்தப்பட்டது. எல்லாப் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த பட்ட மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றினர்.

## *"கதவுகளைத் திறத்தல் - வெற்றிக்கான பாதை"* இறுதியாண்டுக் கலைப் பீடப் பட்ட மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

கலைப் பீடத்தைச் சேர்ந்த இறுதியாண்டுப் பட்ட மாணவர்களுக்காகத் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் தொழில் வழிகாட்டல் அலகின் கூட்டுழைப்புடன் பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. டொயிச் பாங்க் பிரை. லிமிரெட் உதவியும் அனுசரணையும் வழங்கியது. பழைய மாணவர் சங்கம் ஆங்கிலம், தொழில் திறன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக ஓராண்டுக்கு நீடிக்கும் ஒரு தொடர்வரிசையான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதில் தொழில் வழிகாட்டல் அலகுக்கு உதவுவதற்கு மேலும் திட்டமிட்டுள்ளது. கைத்தொழிலைச் சேர்ந்த பல்வேறு வளப்பகிர்வாளர்கள் உங்களைத்தானே சந்தைப்படுத்துதல், தனியார்துறை பற்றிய மனப்பாங்கு, ஆளுமை அபிவிருத்தி என்பவை உட்பட்ட பரப்புகளில் உரைகளாற்றினர். UCSC கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 250க்கும் கூடிய இறுதியாண்டு மாணவர்கள் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *'ஒப அசிரிமத்'* நிகழ்ச்சித்திட்டம்

தொழில் வழிகாட்டல் அலகில் தொழில் திறன்களின் அபிவிருத்தி பற்றிய தொழில் வழிகாட்டல் செயலமர்வொன்று 2008 ஆகஸ்ட் 27ஆந் தேதியன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் தொழில் அமைச்சைச் சேர்ந்த வளப்பகிர்வாளர்களால் நடத்தப்பட்டது. நாற்பது மாணவர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர்.

## தொழில் அறிவுரைச் செயலமர்வுகள்

கலைப் பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்காக இரு அறிவுரைச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. 2008 செப்ரெம்பர் 13இல் நடத்தப்பட்ட செயலமர்வில் ஐம்பது மாணவர்களும் 2008 செப்ரெம்பர் 20இல் நடத்தப்பட்ட செயலமர்வில் நூறு மாணவர்களும் பங்குபற்றினர். டொயிச் பாங்க் பிரை. லிமிரெட்டையும் ஏனைய பல்வேறு நிறுவனங்களையுஞ் சேர்ந்த வளப்பகிர்வாளர்கள் தொழில் அறிவுரை அமர்வுகளை நடத்தினர்.

## கலைப் பீடத்தின் புதிய மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

கலைப்பீடத்தின் 600க்கும் கூடிய புதிய மாணவர்களுக்காக ஒரு முழுநாள் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு 2008 செப்ரெம்பர் 23ஆந் தேதியன்று நடத்தப்பட்டது. கலைப் பட்டதாரிகளுக்கான தனியார்துறை வாய்ப்புக்கள் பற்றிய ஒரு தெரிநிலையை ஏற்படுத்துதல் இக்கருத்தரங்கின் குறிக்கோளாயிருந்தது. பட்ட மாணவர் வளர்ச்சியின் போது மாணவர்கள் எவ்வாறு தனியார்துறை வாய்ப்புக்களுக்குத் தம்மை ஆயத்தப் படுத்தவேண்டும்; பல்கலைக்கழக வாழ்வின்போது என்னென்ன தொழில் திறன்கள் விருத்திசெய்யப்படவேண்டும் போன்ற அம்சங்களை இக்கருத்தரங்கு உள்ளடக்கியது. இந்நிகழ்ச்சித்திட்டம் இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் கூட்டுழைப்புடன் நடத்தப்பட்டது. ஈகிள் இன்சூரன்ஸ் (பிரை) லிமிரெட் இக்கருத்திட்டத்துக்கு அனுசரணை வழங்கியது.

## 'ஆங்கிலத்தின் முக்கியத்துவம்' பற்றிய கருத்தரங்கு

தொடர்பாடல் திறன்களை விருத்திசெய்யவேண்டிதன் முக்கியத்துவத்தை முனைப் படுத்திக் காட்டும் நோக்கத்தைக்கொண்ட இக்கருத்தரங்கில் முந்நூற்றைம்பதுக்கும் கூடிய மாணவகள் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. மனித உரிமைக் கற்கை நிலையம் (CSHR)

### அறிமுகம்

மனித உரிமைகள் கற்கைக்கான நிலையம் (ம.உ.க.நி.) கொழும்புப் பல்கலைக் கழகச் சட்டப் பீடத்தில் அமைந்துள்ள, பல்லைக்கழத்தை அடியொற்றிய ஒரு நிலையமாகும். ம.உ.க.நிலையத்துக்கு அளிக்கப்பட்டுள்ள ஆணை மனித உரிமைகளில் கல்வியும் ஆராய்ச்சியும். ம.உ.க.நி. பல்கலைக்கழகத்தை அடியொற்றிய ஒரு நிலையமானபோதிலும், பல்கலைக்கழகச் சட்டகத்தினுள் அதன் செயற்பாடுகளுக்குத் தேவையான குறிப்பிடத்தக்க சுயாதிக்க அந்தஸ்தை அனுபவிக்கின்றது. வெளிநாட்டு நன்கொடைகளால் நிதியிடப்படும் இந்நிலையம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரைத் தவிசாளராகக் கொண்ட முகாமைச் சபையொன்றினால் ஆளப்படுகின்றது.

### நோக்கு

ம.உ.க.நி.இன் ஒட்டுமொத்த நோக்கு 'எல்லா மக்களினதும் கௌரவத்தையும் உரிமைகளையும் மதிக்கின்ற உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுள்ள ஒரு தேசத்தை உருவாக்குதல்.'

### பணி

ம.உ.க.நி.இன் பணி 'பல்துறை சார்ந்த அணுகுமுறையினைப் பயன்படுத்தி மனித உரிமைக் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் உன்னதமான ஒரு நிலையமாகத் திகழ்தல்.'

### பணியாளர் பற்றிய தகவல்

இந்நிலையம் பணிப்பாளர், பேராசிரியர் ரவீந்திர பர்னாந்து, பிரதிப் பணிப்பாளர், பேராசிரியர் ஷர்யா ஸ்கானிவெல் மற்றும் பதினைந்து (15) பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

### பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

### மனித உரிமைகள் உள்ளுறைப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

#### பல்கலைக்கழக மாணவர்களுக்கு 2 நாள் சான்றிதழ் கல்விநெறி

இந்நடவடிக்கையின் குறிக்கோள் பட்ட மாணவர்கள் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வையும் மதிப்பையும் அதிகரித்தல். முதலாவது நிகழ்ச்சித்திட்டம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழிமூலம் 2008 மேயில் நடத்தப்பட்டது. இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் தமிழ் மொழிமூல மாணவர்களுக்காக 2008 நவம்பர் 22ஆம், 23ஆந் தேதிகளில் நடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டபீட மாணவர்களுக்கான மனித உரிமைத் திரைப்படக் குழு

இந்நடவடிக்கையின் குறிக்கோள் மனித உரிமைகளின் வேறுபட்ட கண்ணோட்டங்களை மாணவர்கள் தெரிந்திருக்கச்செய்தல்.

## நீடிப்புக் கல்விநெறிகள்/சமூகசேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

தொலைக்கல்விமுறையூடாக மனித உரிமைகளிலும் சமாதானக் கற்கைகளிலும் தொலைக் கல்வி டிப்ளோமா வழங்குவதற்கான ஒரு கல்விநெறி இவ்வாண்டில் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து முதலாவது தொகுதி மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## மனித உரிமைகளில் கணினிவழித் தொலைக்கல்வி டிப்ளோமா

இக்கல்விநெறிக்கான பாடவிதானம் விருத்திசெய்யப்படுகின்றது.

## சமூகத்திற்கு மனித உரிமைக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் (HREC)

மஉகநி நாடெங்கிலும் 48 சமூக நிலையங்களைத் தாபித்துள்ளது. இச்சமூகக் கருத் திட்டத்தின் ஒரு பிரதான குறிக்கோள் மனித உரிமைகள் பற்றிய நாடளாவிய விழிப்புணர்வையும் சமூகத்தினுள் மனப்பான்மை மாற்றமொன்றையும் உருவாக்குதலும் சமூக மட்டத்தில் மனித உரிமை மீறல்களை இனங்காண்பதற்கு உதவுதலுமாகும். அத்தகைய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சமூக நிலைய ஆளணியினர் சமூகத்துக்குத் தொடர்ந்து வழிகாட்டி உதவிவருகின்றனர்.

## பணியாளர் அபிவிருத்தி

பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் உள்நாட்டுக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

## தனியார்துறையுடனான வலையமைப்பின் ஊடாகத் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு

தேசிய கல்வி நிறுவகத்தினதும் (NIE) சட்ட மற்றும் கலைப்பீடங்களினதும் கூட்டுழைப்புடன் குடியியலும் ஆட்சிமுறையும் என்ற பாடத்துக்காக மனித உரிமைகளில் துணை வாசிப்பு நூலொன்று தயாரிக்கப்பட்டது.

மொரட்டுவை பல்கலைக்கழகத்துக்கான மனித உரிமைப் பாடவிதானம் சட்ட பீடத்தின் கூட்டுழைப்புடன் விருத்திசெய்யப்படுகின்றது.

ம.உ.க.நி. வேறுபட்ட ஆற்றலுள்ள முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பில் 'ADEP' உடன் கூட்டுழைத்தது.

ம.உ.க.நி. வீட்டு உரிமைகளும் வெளியேற்றல்களும் தொடர்பில் 'COHRE' உடன் கூட்டுழைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆராய்ச்சி மற்றும் பிற வெளியீடுகள்

இலங்கையின் குற்றவியல் சட்டங்களின் பால்நிலைக் கூருணர்வை விளங்கிக்கொள்ளும் பொருட்டு அவற்றில் ஆய்வொன்று நடத்தப்பட்டது.

இவ்வாண்டில் பின்வரும் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன:

*ம.உ.க.நி. ஈ-செய்திமடல்*
*ம.உ.க.நி. 'சம்பாஷணை', இதழ் 1, 2007*
*'Give Me Some Space for My Views'*
*War Vs Peace Discourse*
*வெத்தா (வேடுவர்) சமூகத்தின் அடிப்படைக் கல்விநிலை பற்றிய ஒரு மதிப்பீடு (தம்பணையிலும் ஹென்னகலையிலும்)*
*துணை வாசிப்பு நூல் - மனித உரிமைகளும் சர்வதேச உறவுகளும்*

### உட்கட்டமைப்பு, வளங்கள், கட்டடங்கள், நன்கொடைகள் ஆதியன

பல்கலைக்கழகம் ம.உ.க.நிலையத்துக்கு சட்டப் பீடக் கட்டடத்தின் தரைத்தளத்தில் அலுவலக இடவசதியை வழங்குகின்றது.

மஉகநி அதற்கு வருடாந்தம் கிடைக்கின்ற மானியங்களிலிருந்து பல்கலைக்கழக அபிவிருத்தி நிதிக்கும் பல்கலைக்கழக நிருவாக மற்றும் பயன்பாட்டுச் செலவுக்கும் 16%ஐப் பங்களிப்புச் செய்கின்றது.

2008க்கான நிதியுதவியாளர்களும் அந்நிதிகளைக்கொண்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும். டயகோனியா–மைய நிதியுதவியாளர், யுஎன்டிபீ, அவுஸ் எய்ட், ஏஆர்டி

## 03. கொழும்புப் பல்கலைக்கழக சமூக நீடிப்பு நிலையம் (CUCEC)

### அறிமுகம்

2005இல் தாபிக்கப்பட்ட கொழும்புப் பல்கலைக்கழக சமூக நீடிப்பு நிலையம் (கொபசநீநி) ஒரு பல்கலைக்கழகத்தில் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபாடுகொண்ட இலங்கையின் முதலாவது பல்துறை சார்ந்த நிலையமாகும். இந்நிலையம் அறைகூவலான, புத்தாக்க ஆராய்ச்சியை மேற்கொண்டு முக்கிய சமூக, பொருளாதார அபிவிருத்தி விடயங்களில் பொருத்தமான பயிற்சியை வழங்குவதுடன், தகவல் பரிமாற்றத்துக்கும் பரப்புதலுக்கும் விவாதத்துக்குமான ஒரு நிலையமாகவும் செயற்படுகின்றது. அது தேசிய மற்றும் பிராந்தியமட்டக் கொள்கை வகுக்கும் செயல்முறைக்கும் சமூகமட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் இடையிலான இணைப்புகளைத் தாபித்துள்ளது.

இந்நிலையம் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயிற்சியிலும் செயல் நோக்குடைய ஆராய்ச்சியிலும் தொழில்வல்லுநர்கள் கூட்டுழைப்பதற்கும் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுவதற்கும் ஏற்ற ஊக்கமளிக்கும் சூழலை உருவாக்கும்பொருட்டு நாட்டின் தலைநகரப் பல்கலைக்கழகத்தின் பல்வகையான அறிவுத்திறம்வாய்ந்த வளங்களைத் திரட்டுவதற்கான ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட சட்டகத்தை முதல் தடவையாக வழங்குகின்றது.

## பணியாளர்

பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க பணிப்பாளராக 19.09.2008 வரை கடமையாற்றினார். பேராசிரியர் கே.ஏ.பீ. சித்திசேன 10.10.2008 முதற்கொண்டு பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையம் பணிப்பாளர், ஒரு (01) இணைப்பாளர், ஒரு (01) தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர், ஒரு (01) தற்காலிக கணினி உதவியாளர் மற்றும் ஒரு (01) தற்காலிகச் சாரதி ஆகியோரைக் கொண்டுள்ளது.

## நீடிப்புக் கல்விநெறிகள்/சமூக சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

கொழும்புப் பல்கலைக்கழக சமூக நீடிப்பு நிலையத்தால் ஏப்பிரல் - யூன் 2008இல் "அபிவிருத்திப் பணிக்கான ஆராய்ச்சி" பற்றிய சான்றிதழ் கல்விநெறியொன்று நடத்தப்பட்டது.

இச்சான்றிதழ் கல்விநெறியின் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு "அபிவிருத்தித் திட்டமிடலுக்கும் முகாமைத்துவத்துக்குமான ஆராய்ச்சி முறைகள்" என மறுபெயரிடப்பட்டது.

## தனியார் துறையுடனான வலையமைப்பினூடாகத் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு

- இங்கிலாந்து லீட்ஸ் மெட்றோபொலிரன் பல்கலைக்கழகத்தின் கூட்டுழைப்புடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் நீடுறுதியான மீட்பும் இசைவாக்கத் திறனைக் கட்டியெழுப்புதலும் பற்றிய கருத்திட்டமொன்று நடத்தப்பட்டது. இந்த ஆய்வு கதிர்காமம், அனுராதபுரம், ஹிக்கடுவ ஆகிய பிரதேசங்களில் மக்களின் வாழ்வாதாரத்தில் சுனாமியின் தாக்கமும் சுற்றுலாக் கைத்தொழிலில் தங்கியுள்ளவர்களின் வாழ்வாதாரத்தில் யுத்தத்தின் தாக்கமும் பற்றி ஆராய்ந்தது.
- ஹிக்கடுவ சுற்றுலாத்துறையை முன்னிலைக்கு மீட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஹிக்கடுவையில் சமூகவியல் மதிப்பீடொன்றை நடத்துதல். இறுதி அறிக்கை செயற்படுத்தப்படுவதற்காக இலங்கைச் சுற்றுலாச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
- இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலை மேலும் ஊக்குவிக்கும்பொருட்டு சுற்றுலாத் தொடர்புடைய வியாபாரம் மற்றும் வியாபாரிகள் பற்றிய தரவுத் தளமொன்று விருத்திசெய்யப்பட்டது.
- வடமேல் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இம்மாகாணத்தில் கமத்தொழில் நடவடிக்கைகளுக்காகத் திசு வளர்ப்பு ஆய்வுகூடமொன்று விருத்திசெய்யப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது 2008 செப்ரெம்பரில் வடமேல் மாகாண சபையின் காணி, கமத்தொழில் நீர்ப்பாசன மற்றும் விலங்கு உற்பத்திச் சேவைகள் அமைச்சிடம் கையளிக்கப் படும்வரை பராமரிக்கப்பட்டது.

### ஆராய்ச்சி

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் **நீடுறுதியான மீட்பும் இசைவாக்கத் திறனைக் கட்டியெழுப்புதலும்** (லீட்ஸ் மெட்றோபொலிரன் பல்கலைக்கழகத்துடனான ஒரு கூட்டுழைப்புக் கருத்திட்டம்)

சுவீடனைச் சேர்ந்த ஸ்ரொக்ஹோம் சுற்றாடல் நிறுவகம் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள பல்தரப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுக்குப் பொருத்தமான இசைவாக்கத் திறனைக் கட்டியெழுப்பும் உபாயங்களை இனங்காண்பதற்கு வழிவகுக்கக்கூடியதாக வடுப்படுநிலை மதிப்பீடொன்றை மேற்கொள்ளும்படி கொழும்புப் பல்கலைக்கழக சமூக நீடிப்பு நிலையத்துக்கு (கொ.ப.ச.நீ.நி.) அழைப்புவிடுத்துள்ளது. (ஒக்ரோபர் 2007 - யூலை 2008)

**ஹிக்கடுவ சுற்றுலாத்துறையை முன்னிலைக்கு மீட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஹிக்கடுவையில் சமூகவியல் மதிப்பீடொன்றை நடத்துதல்**

இலங்கைச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை ஹிக்கடுவ சுற்றுலாத் துறையை முன்னிலைக்கு மீட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஹிக்கடுவையில் சமூகவியல் மதிப்பீடொன்றை நடத்துவதற்கான ஒப்படையொன்றை வழங்கியுள்ளது.

## 04. அம்பாந்தோட்டை, வெலிகத்தவில் கொழும்புப் பல்கலைக்கழக மாகம்புர கமத்தொழில்நுட்ப, சமூக சேவை நிலையம் (MATCSC)

நிலையத்தின் பதில் பணிப்பாளராக 02.01.2008இல் நியமிக்கப்பட்ட கலா. சீ.எம். நாணாயக்கார மீளாய்வாண்டில் அப்பதவியில் தொடர்ந்து கடமையாற்றினார்.

### நிலையத்தின் குறிக்கோள்கள்

இந்நிலையத்தின் பிரதான குறிக்கோள்கள் இருதரப்பட்டவை: (அ) நாட்டின் தேசிய அபிவிருத்தியுடன் தொடர்புபட்டுள்ள பிராந்திய அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கூட்டிணைப்பதில் ஒரு நேரடிப்பங்கு வகித்தல்; (ஆ) பல்கலைக்கழகத்தில் கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுகின்ற அதே வேளையில், கல்விமான்கள்-சமூகப் பங்கேற்பு அணுகுமுறைமூலம் கமத் தொழில்நுட்ப மற்றும் சமூக சேவைகள் ஊடாக அறிவையும் தொழில் நுட்பத்தையும் அறிந்துகொள்வது எவ்வாறு என்பதைப் பரவச்செய்ய ஏற்பாடு செய்தல்.

கடந்த ஆண்டுகளில் இந்நிலையத்தினூடாகக் கிராமச் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பயனுறுதிவாய்ந்த முறையில் தொழில்நுட்பம்/அறிவு மற்றும் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் முறைமையைக் கைமாற்றம் செய்வதற்குச் சமுதாயத்துடன் மிக நெருக்கமான கூட்டுழைப்பைக் கட்டியெழுப்புவதற்கும் பிராந்தியத்தில் உள்ள கமத்தொழில் மற்றும் கமத்தொழிலை அடியொற்றிய கைத்தொழில்களினது தேர்ச்சியை அதிகரிப்பதற்கும் பல்கலைக்கழகத்தாலும் ஆராய்ச்சியாளர்களாலும் இயலுமாயிருந்தது.

சமுதாய சேவைகளில் முன்னோடியாக 2000இல் ப.மா.ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இக்கருத்திட்டம்தான், பல்வேறு அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டுழைப்புடன் இலங்கைப் பல்கலைக்கழக முறைமையினால் விருத்திசெய்யப்பட்டதும் இலங்கையில் முன்னர் ஒருபோதும் இல்லாததுமான முதலாவது கருத்திட்டமாகும். 2008ஆம் ஆண்டு வரை இந்நிலையத்தின் சாதனைகள் கிராமத்துறைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கியமானவை.

இந்நிலையம் இப்போது அம்பாந்தோட்டை, பொலனறுவை, மாத்தறை, அம்பாறை, மொனறாகலை, பதுளை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குச் சேவையாற்றுகிறது.

## கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

டிப்ளோமா மற்றும் பட்டத்துக்கு இட்டுச்செல்கின்ற எட்டு (08) சான்றிதழ் கல்வி நெறிகள் 2008 ஒக்ரோபர் 30ஆந் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டன. இக்கல்விநெறிகள் உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழந்தவர்களாகக் கமத்தொழிலைத் தமது உயர் தொழிலாகக் கொண்டுள்ள இளம் கம உற்பத்தியாளர்களை/கம வியாபாரத் தொழில்முயற்சியாளர்களை அனுமதிக்கும் நோக்கைக் கொண்டுள்ளன. இவ்விளைஞர்கள் தமது சமூக-பொருளாதார அந்தஸ்தை உயர்த்தி, அதன்மூலம் தேசிய பொருளாதாரத்துக்குப் பங்களிக்கக்கூடியதாக அறிவு அடிப்படையிலான கமத்தொழிலில் ஈடுபடுத்தப்படுவர்.

இக்கல்விநெறிகளின் விசேட அம்சம் ஒரு பலமான தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப ஆக்கக்கூறைக் கொண்டதான திறந்த மற்றும் தொலைக்கற்றல் மாதிரியின் ஊடாக கணினிவழிக் கல்வி வழங்குதலாகும். இதன்மூலம் நவீன தொழில்நுட்பம் கிராமச் சமூகத்துக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது. கல்வி அமைச்சின் தொலைக் கல்வி நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் (DEMP) கணினிவழி வசதிகளை வழங்கும்.

## பணியாளர்

மீளாய்வு ஆண்டின்போது இரு (02) ஆராய்ச்சி உதவியாளர்கள், ஒரு (01) முகாமையாளர், இரு (02) மேற்பார்வையாளர்கள் (டிசு வளர்ப்பு ஆய்வுகூடம் மற்றும் உணவுத் தொழில் நுட்ப அலகு), ஒரு (01) வெளிக்கள உதவியாளர் மற்றும் பதினைந்து (15) தேர்ச்சியற்றோர் (தாவர உற்பத்தி மற்றும் நாற்றுப்பண்ணை) ஒப்பந்த/அமய அடிப்படையில் தொழில்புரிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் அனைவருக்கும் தாவரங்களின் விற்பனைமூலம் உழைத்து உருவாக்கப்பட்ட நிதிகளிலிருந்து ஊதியமளிக்கப்பட்டது.

## கருத்திட்டத்தைத் தொடக்கிவைத்தல்

1. லுணுகம்வெஹெர நீர்ப்பாசனக் கருத்திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்டதும் ருணுகம்வெஹெர கருத்திட்டத்தினால் திட்டமிடப்பட்டவாறு பயன்படுத்தப் படாததுமான மேற்படி கருத்திட்டம் அம்பாந்தோட்டையில் வெலிகத்த புதிய நகரில் 1999இன் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

2. இந்நிலையம் நீர்ப்பாசனத் திணைக்கள 'மௌ-ஆர' கருத்திட்டத்தின் கூட்டுழைப்புடன் விருத்தி செய்யப்பட்டது. இந்நிலையம் நவீன கமத்தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு 'மௌ-ஆர' நீர்ப்பாசனக் கருத்திட்டத்தின் கீழுள்ள கமக்காரர்களுடனும் பணியாற்றும்.

3. மாவட்டத்திலுள்ள மக்களின் பிரதான வருமான மூலம் கமத்தொழிலாதலால் நிலையத்தின் பிரதான நடவடிக்கை கமத்தொழில் தொடர்பானது. அதாவது, சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளின் கூட்டுழைப்புடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நவீன கமத்தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல். நடுகைத் தாவரங்களை உற்பத்தி செய்கின்ற டிசு வளர்ப்பு ஆய்வு கூடமொன்று ஆண்டுபூராவும் தொழிற்படுகின்றது. இது நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கைவிடப்பட்ட கட்டடங்களைப் பல்வேறு அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் புதுப்பிப்பதன்மூலம் தாபிக்கப்பட்டது.

## நிலையத்தின் நிதிகள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனிவேறான பேரேட்டுக் கணக்கொன்று அம்பாந்தோட்டை மக்கள் வங்கியில் தொடர்ந்து பேணப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்நிலையத்தைச் சுய-நிதியுடையதாக்கும் குறிக்கோளுடன் தாவரங்களின் விற்பனையிலிருந்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றிலிருந்தும் திரட்டப்படும் நிதிகள் இக்கணக்கில் வைப்பிலிடப்படுகின்றன.

## பங்கேற்பு ஆராய்ச்சியும் பயிற்சியும்

இவ்வாண்டில் நிலையம் கீழே தரப்பட்டுள்ளவாறு அதன் சேவைகளையும் பயிற்சியையும் தொடர்ந்தது.

### 1. டிசு வளர்ப்பு/தாவர உற்பத்தி ஆய்வுகூடத்தின் விரிவாக்கம்

தற்போது இரு டிசு வளர்ப்பு ஆய்வுகூடங்களிலுமுள்ள தாவர உற்பத்தி மாதமொன்றுக்குச் சுமார் 15,000 வாழைக்கன்றுகளைக் கொண்டுள்ளது. ஆய்வுகூடமானது இப்பிரதேசத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பெண் ஊழியர்களால் (ஒரு மேற்பார்வையாளர் மற்றும் 14 டிசு வளர்ப்பாளர்கள்) நிர்வகிக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஆய்வுகூடம் வெற்றிகரமாகச் செயற்பட்டுத் தாவர உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றது. தாவரங்களுக்கான தற்போதைய கேள்வி சுமார் 1.0 மில்லியன் தாவரங்களாகும். இக்கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காக ஆய்வுகூடம் விரிவாக்கப்பட்டு வருகின்றது.

சூரியவெவவிலுள்ள மகாவலி அதிகாரசபையின் டிசு வளர்ப்பு ஆய்வுகூடம், கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கும் மகாவலி அதிகாரசபைக்கும் இடையிலான ஓர் உடன்படிக்கைமூலம் மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு வெலிகத்த நிலையத்திடம் கையளிக்கப்பட்டுத் தாபிக்கப்பட்டது. தொடக்க உடன்படிக்கைக் காலம் முடிந்துவிட்டது. எனினும் மகாவலி அதிகாரசபையின் கோரிக்கையின்பேரில் மேற்பார்வை தொடர்கின்றது.

## 2. கம-உயிர்த்தொழில்நுட்பம் பற்றிய களப் பங்கேற்பு ஆராய்ச்சி

இந்நிலையம் கமக்காரர் தமது பயிர்ச்செய்கையிலிருந்து அதியுச்ச வருமானத்தைப் பெறுவதற்குத் தொடர்ந்து உதவியது. ஊடு பயிரிடல் முதலியவற்றில் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. நிலைய வெளிக்கள உதவியாளர்கள் வெளிக்களத்தை மேற்பார்வையிடுகின்றனர்.

தற்போது இந்நிலையம் மேலே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் 400 கமக்காரர்களுடன் பணியாற்றுகின்றது. இப்பங்கேற்பு அணுகுமுறை கமக்காரர்களுக்குச் செயலூக்கம் அளித்துள்ளதுடன் அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் உதவியுள்ளது. ஆகையால், இப்பங்கேற்பு அணுகுமுறை பதுளை, அம்பாறை, பொலனறுவை போன்ற பல்வேறு பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. பொலனறுவையில் மட்டும் பெருந்தொகையான கமக்காரர்கள் நிலையத்தின் சேவைகளைக் கோருகின்றனர்.

வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த கமக்காரரும் அம்மாவட்டங்களில் தமது செய்கையைத் தொடங்குவதற்காக இதே குடையின்கீழ்க் கொண்டுவரப்பட்டனர். இது சர்வோதய நிறுவனத்தின் கூட்டுழைப்புடன் செய்யப்படும்.

## 3. வாழைப்பழ ஏற்றுமதி

வாழைப்பழ ஏற்றமதிச் சந்தையை நோக்கியதாக ஒரு தொகையான தொடர்ச்சியான உற்பத்தியை இறுதிக் குறிக்கோளாகக்கொண்டு வாழைச் செய்கையின் விரிவாக்கம் தொடரப்படுகின்றது.

## 4. உணவுத் தொழில் நுட்பம்

உணவுத் தொழில்நுட்பப் பிரிவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் நடாத்தியது. இதன் நீண்டகாலக் குறிக்கோள் அம்பாந்தோட்டை, மொனறாகலை மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் கம அடிப்படையிலான கைத்தொழில் களை அபிவிருத்தி செய்தலாகும். வாழைப்பழ ஏற்றுமதியுடன் தொடங்கப்பட்ட வாழை வற்றல்செய்யும் ஒரு மினி கைத்தொழில் தொடரப்பட்டது. இந்நிலையம் வாழை வற்றலின் தரக்கட்டுப்பாட்டில் ஈடுபாடு காட்டுகின்றது.

## 5. காளான் செய்கைபண்ணல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும்

ஒரு தொழில்முயற்சியாக இத்தொழில் நுட்பத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் ஒத்தாசை வழங்குதல் என்பவை தொடரப்படுகின்றன. இக்கைத்தொழில் சமூகத்தில் பிரபலம் பெற்றுவருகின்றது.

### 6. பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு

இவ்வாண்டில் 20 பாடசாலைகளிலிருந்து பாடசாலைச் சிறுவர்கள் இந் நிலையத்திற்கு வருகைதந்துள்ளனர். விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் டிசு வளர்ப்புத் தொழில் நுட்பம், கமம் சார்ந்த உயிர்த்தொழில் நுட்பம் மற்றும் பதனிடப்பட்ட உணவின் இயல்புகள் பற்றிக் கல்வியூட்டுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டன. இந்நிலையம் சிறுவர்களுக்கான சின்னஞ்சிறிய விஞ்ஞானப் பூங்காவாகத் தொடர்ந்து செயற்பட்டது.

### 7. கமக்காரருக்கான சீவியகாலக் கற்றல்-பொதுநலவாயக் கற்றலின் L3 கருத்திட்டம்

கமக்காரருக்கான சீவியகாலக் கற்றல் பற்றி பொதுநலவாயக் கற்றலுக்கும் (COL) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்துக்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் கூட்டுழைப்புக் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. மாதிரிக் கிராமங்களாக திமுத்துகம மற்றும் திஸ்ஸ ஆகிய இரு கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டன. அங்குள்ள கமக்காரருக்கு, சுய கற்றலுக்காக தொழில்நுட்பத்துடன் தகவல் தொழில் நுட்பமும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இக்கிராமங்கள் இக்கருத்துப்படிவத்தைப் பின்பற்றித் தொழில் நுட்பத்தில் வெற்றிகரமாக முன்னேற்றம் காண்கின்றன. COL பிரதம நிறைவேற்று அலுவலர் சேர் ஜோன் டானியல்ஸ் அவர்களும் இரு உசாத்துணையாளர்களும் இக்கருத்திட்டத்தைப் பார்வையிட்டனர்.

## கமத்தொழில்நுட்பம் மற்றும் கிராம விஞ்ஞானங்களுக்கான நிறுவகம்

### கமத்தொழில்நுட்பம் மற்றும் கிராம விஞ்ஞானங்களுக்கான நிறுவகத்தைத் தாபித்தல்

மாகம்புர கமத்தொழில்நுட்ப, சமூகசேவை நிலையம் ஒரு நிறுவகமாகத் தரமுயர்த்தப்பட்டதுடன், நிறுவகத்தைத் தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டது. இக்கட்டளைச்சட்டம் 2008.10.16ஆந் தேதிய 1511/15ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இந்நிறுவகம் ஒரு டிப்ளோமாவுக்கு இட்டுச்செல்கின்ற சான்றிதழ் கல்விநெறிகளை வழங்குவதுடன், கமத்தொழில்நுட்பத்தில் ஒரு பட்ட மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்புவளத்தையும் கொண்டுள்ளது. இக்கல்விநெறிகள் திறந்த தொலைக்கற்றல்முறையினூடாக வழங்கப் படுகின்றன. இதற்கான நிதியுதவி உயர்கல்வி அமைச்சின் தொலைக்கற்றல் நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்திலிருந்து (DEMP) பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவகத்தின் குறிக்கோள்கள்

- கம-உயிர்த்தொழில்நுட்பத்திலும் கம வியாபாரத்திலும் சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டக் கல்விநெறிகள் ஊடாக, விசேடமாக நாட்டின் கிராமியத்துறையில் ஏற்கெனவே கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் அறிவை அடிப்படை யாகக்கொண்ட கமத்தொழில்முயற்சியாளர்களை அறிமுகப்படுத்துதலும் தாபித்தலும்.

- உள்நாட்டில் கிடைப்பதாயுள்ள இயற்கை வளங்களைக்கொண்டு தொழிலாண்மை முயற்சிகளைத் தொடங்குவதற்குச் சமூகத்துக்கு வியாபார அடைகாப்பகங்களை வழங்குதல்.

- விஞ்ஞான தொழில் நுட்பப் பின்னணியைக்கொண்ட உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்களுக்குச் சேவைகள் வழங்குதல்.

- நாட்டின் கிராமியத்துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒத்திசைவிப்பதில் பல்கலைக்கழகங்கள் நேரடிப் பங்கொன்றை வகித்தல்.

- கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ள அதேவேளையில், பல்கலைக் கழகங்களின் சமூக நீடிப்புச் சேவைகளுக்கான பொறுப்பை நிறைவேற்றுதல்.

- இதன் நீண்டகாலக் குறிக்கோள் கம அடிப்படைக் கைத்தொழிலினூடாக கிராமிய சமூக-பொருளாதார நிலையை முன்னேற்றுதல்.

## பணியாளர்

இவ்வாண்டில் நிலையப் பணியாளர்களுக்கு மேலதிகமாக கல்விநெறி இணைப்பாள ரொருவர் ஒப்பந்த அடிப்படையில் ஊழியத்துக்கமர்த்தப்பட்டார். நிலையத்தைச் சேர்ந்த பணியாளர் சுய நிதியுதவி அடிப்படையில் தொடர்ந்தனர்.

## கல்விசார் மற்றும் உயர்தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்நிறுவகம் கம-உயிர்த்தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம், கிராம அபிவிருத்தி ஆகியவற்றில் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கல்விநெறிகளை வழங்குகின்றது. இக்கல்விநெறிகள் கட்டணம் அறவிடும் அடிப்படையிலானவை.

நிறுவகத்தால் இரு பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்கின்றன.

சான்றிதழ் கல்விநெறி – காலநீட்சி 3 மாதங்கள்

டிப்ளோமா கல்விநெறி – காலநீட்சி 12 மாதங்கள்

கமத்தொகுதியில் முதலாவது கல்விநெறி ஓர் அனுமதிப் பரீட்சையூடாகத் தெரிவு செய்யப்பட்ட 50 விவசாயிகள் குழுவுடன் 2008 ஒக்ரோபரில் ஆரம்பிக்கப்பட்டது. சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களிடமிருந்து கல்விநெறிக்கான கட்டணம் அறவிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பங்கேற்பு ஆராய்ச்சியும் பயிற்சியும்

இந்நிறுவகம் அதன் கல்விநெறிகளுடன் MATCSC மேற்கொண்டிருந்த எல்லா நடவடிக்கைகளையும் தொடர்கின்றது. எனவே இந்நிறுவகம் ஒரு கல்விசார் நிறுவனம், கமத்தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், திசுமூலம் வளர்க்கப்படும் வாழைமர உற்பத்தி மற்றும் விநியோக நிலையம், வாழைமரச் செய்கைக்கான வெளிக்கள விஸ்தரிப்புச் சேவைகள் நிலையம், பல்கலைக்கழகக் கல்விமான்களை விவசாயச் சமூகத்துடனும் கம வியாபாரச் சமூகத்துடனும் இணைக்கின்ற ஒரு முக்கிய மையம் என்று பன்முகமான ஒரு பங்கை வகித்துவந்துள்ளது.

### மக்களுக்கான நன்மைகள்

கமத்தொழிலில் நவீன தொழில் நுட்பத்தைக் கைக்கொள்வதற்குப் பயிர்ச் செய்கையாளர்களிடையே, குறிப்பாக இள வயதினரிடையே காணப்படும் உற்சாகத்தை நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்ந்தும் காட்டின. எனவே அறிவை அடிப்படையாகக்கொண்ட கமத்தொழில்மூலம் கிராமத் துறையின் வருமானத்தை முன்னேற்றுவதற்கான வாய்ப்பு வளம் மேலும் தெளிவாகப் புலப்படுகின்றது. நிறுவனமானது கல்விநெறியைக் கணினிவழியாக வழங்குவதன் மூலம் நிலையத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மேம்படுத்தியது. கல்விநெறிகளின் இலக்குக்குழுவாக விவசாயிகள் இருந்ததனால் இன்று இன்றியமையாதவையாயுள்ள அறிவையும் ஆங்கிலத்தையும் தகவல் தொழில் நுட்பத்தையும் அடிப்படைத் திறன்களாகச் சுவீகரிப்பதற்கு அவர்கள் ஆயத்தப் படுத்தப்பட்டனர். கல்விநெறிகளுக்கு அனுமதிபெறுவதில் விவசாயச் சமூகம் காட்டிய ஆர்வம் மிக உயர்வாயிருந்தது. தொடக்கக் கல்விநெறிக்குக் கிடைக்கப்பெற்ற 300க்கும் கூடிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை இதற்குச் சான்றுபகர்கின்றது.

1. **இளஞ் சந்ததியினர் நவீன கமத்தொழிலில் கூடிய அக்கறை காட்டுகின்றனர்.** கமத்தொழில் வர்த்தக வாய்ப்புள்ள ஒரு வியாபாரமாக மாறிவருகின்றது. எனவே, அரசாங்கத்தின் உதவியுடன் ஆழப் பதியவைக்கப்படும் அறிவும் உருவாக்கப்படும் வாய்ப்புகளும் இம்மாவட்டங்களில் வர்த்தக அளவிலான கமத்தொழில் மற்றும் கம அடிப்படையிலான கைத்தொழில்கள் மேலும் விருத்தியடைவதற்கு வழிவகுக்கும்.

2. **மக்களின் பொருளாதார முன்னேற்றம்.** 'மௌ-ஆர' நீர்ப்பாசனக் கருத்திட்டத்தின் கீழுள்ள கமக்காரர்களின் முன்னேற்றம் இதற்குச் சான்றாகும். வர்த்தக அளவிலான பயிர்ச்செய்கையில் கமக்காரர்களுக்கு உதவக்கூடியதாக அவர்கள் திட்டமிட்ட கமத்தொழிலைக் கைக்கொண்டமை இதன் மறைமுக விளைவாகும். கமக்காரர்கள் தங்கள் வருமானத்தை உற்பத்தித்திறனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு அறிவூட்டப்படவேண்டும்.

3. **பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் பங்களிப்பு** மீளாய்வாண்டில் கிராமத்துறையின் அபிவிருத்திக்காக சம்பளமற்ற அடிப்படையிலும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கமக்காரரின் **சுய கற்றல்** இப்போது பட்ட மட்டம்வரை சாத்தியமாயுள்ளது. இது அவர்களுக்கு அங்கீகாரத்தையும் அவ்வாறே பொருளாதார நன்மைகளையும் வழங்கும்.

5. சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதன் ஊடாகக் கமக்காரச் சமூகத்துக்கு அங்கீகாரம். **நிறுவகத்தைத் தாபித்தல்** - கமக்காரச் சமூகம் தாமே கற்றுக் கொள்வதற்கும் சான்றிதழை, டிப்ளோமாவை மற்றும் பட்ட மட்டத் தகைமைகளை ஈட்டுவதற்குமான வாய்ப்பை இந்நாட்டில் வழங்குகின்ற முதன்முதலான நிறுவகம்.

## எதிர்காலத் திட்டங்கள்

அடிப்படையில் நிறுவகத்தின் கம வியாபார அலகானது பயிர்ச்செய்கையாளர்களும் தொழில்முயற்சியாளர்களும் அவர்களின் கம வியாபாரத்தில் எதிர்கொள்ளும் ஏதேனும் பிரச்சினையில் ஆலோசனை பெறும் ஒரு "வியாபார அடைகாப்பகமாக" (business incubator) மாற்றம் பெற்று வருகின்றது. நாட்டின் வேறு ஐந்து பகுதிகளில் (அதாவது பொலனறுவை, கந்தளாய், அம்பாறை மற்றும் திருகோணமலை) உப நிலையங்களை அபிவிருத்திசெய்து அப்பிராந்தியங்களிலும் கிராமியத்துறை அபிவிருத்திக்காகத் தொழில் நுட்பத்தைக் கைமாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. **கமத்தொழில் தொழில்நுட்பத்தில் சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டக் கல்விநெறிகள் ஊடாகக் கமக்காரருக்கு அங்கீகாரம் வழங்குதல்.** சுய கற்றல் செயல்முறையின் விளைவாகத் திறன்களிலும் திறமைத் தேர்ச்சியிலும் அபிவிருத்தியேற்படும்.

2. **நவீன கமத்தொழில் தொழில்நுட்பத்தில் பயிர்வளர்ப்போருக்காகப் பங்கேற்பு ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் நீடிப்பு.** நவீன தொழில் நுட்பம் மற்றும் வர்த்தக அளவு கமத்தொழில் நோக்கி மனப்பாங்குகளை மாற்றுதலைப் பயிற்சி உள்ளடக்குகின்றது. இதன் நடவடிக்கைகளை நாட்டின் வட மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு விஸ்தரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

3. **உணவுத் தொழில் நுட்பம் பற்றிய பயிற்சியும் அதன் விரிவாக்கமும்.** விசேடமாக இது வாழைக்காய்ச் சீவல்களைக் கொண்டு சிறு கம வியாபாரமொன்றை விருத்தி செய்யும் பொருட்டு வாழையில் மேற்கொள்ளப்படும்.

4. **மருத்துவ, சமூக மற்றும் சட்ட அம்சங்கள் பற்றிய சனசமூகச் சேவைகள்.** இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பல்கலைக்கழகக் கல்விமான்களால் நடத்தப் படவுள்ளன.

5. நிறுவகமானது ஓர் அடைகாப்பகமாக கமக்காரர்/தொழில்முயற்சியாளர்கள் ஏதேனும் பிரச்சினை பற்றி ஆலோசனை பெறக்கூடிய **"கமப் பிணி ஆய்வு மற்றும் வியாபார அலகு"** ஆகச் சேவையாற்றவுள்ளது. கமக்காரர்/பயிர்ச் செய்கையாளர் இந்நிறுவகத்தின் உறுப்பினர்களாக வேண்டும். ஏனைய நாடுகளில் அத்தகைய அலகுகள் அவற்றின் கமத்தொழிலுக்கு முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களித்துள்ளன. நாட்டில் அத்தகைய வசதி பயனுறுதியுள்ளவகையில் கிடைக்கும்வரை நிறுவகம் அக்குறிக்கோளைத் தொடர்ந்தும் நிறைவேற்று வதற்குச் சேவையாற்றும்.

## 05. தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் (NEREC)

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் (தேகஆமநி), கல்விப் பீடத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு நிலையம். அதன் நோக்கு ஆராய்ச்சி, மதிப்பீடு, அபிவிருத்தி, பரப்பல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலமும் தகவற் சேவைகளை வழங்குவதன்மூலமும் தேசிய மற்றும் பிராந்திய மட்டத்தில் கல்வியையும் பயிற்சியையும் முன்னேற்றுதல். தே.க.ஆ.ம.நிலையத்தின் பணி துடிப்பான, முற்போக்கான, புறநோக்குடைய கல்விசார் ஆராய்ச்சியையும் மதிப்பீட்டையும் சோதனையையும் பயிற்சியையும் தாபித்தல்.

தே.க.ஆ.ம. நிலையத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- கொள்கை வகுப்பவர்களுக்கும் செயற்படுத்துபவர்களுக்கும் செயல்முறைப் பெறுமதியும் பிரயோகமுமுள்ள பிரயோக ஆராய்ச்சியிலும் சோதனை அபிவிருத்தியிலும் கவனத் தைக் குவித்தல்.
- ஆராய்ச்சி, மதிப்பீடு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளில் உயர் தரத்துக்காகப் போராடுதல்.
- சான்றுப் பகுப்பாய்வை அடிப்படையாகக்கொண்ட நேர்மையானதும் நம்பகமானதுமான ஆராய்ச்சிப் பெறுபேறுகளை நாடுதல்.
- சமூக விஞ்ஞான ஆராய்ச்சியில் சிறந்த நடைமுறைகளைப் பிரதிபலிக்கின்ற ஒழுக்கக்கோவையையும் நெறிமுறைக் கோட்பாடுகளையும் பின்பற்றுதல்.
- வாடிக்கையாளரை மையப்படுத்தியதாக இருத்தலும் அனுசரணையாளரின் தேவைகளுக்கு இசைவாகப் பதிலளித்தலும்.
- "தேவைக்குப் பொருத்தம்" மற்றும் "பணத்துக்குப் பெறுமதி" என்பவற்றை வழிகாட்டும் கோட்பாடுகளாகப் பயன்படுத்துதல்.
- புதிய தொழில்நுட்பங்களின் முழுப் பயனைப் பெற்றுக்கொள்ளவும் கல்விசார் ஆராய்ச்சி, தகவல் வழங்கல், சோதனை அபிவிருத்தி மற்றும் பயிற்சி என்பவற்றில் முறையியல்ரீதியான வளர்ச்சிகளுக்குப் பங்களிக்கவும் முனைதல்.
- கட்டமைக்கப்பட்ட, கேள்வியால் தூண்டப்பட்ட, குறுகியகால மற்றும் நடுத்தரக்காலப் பயிற்சிநெறிகளை நடத்துவதன்மூலம் கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டில் சிறந்த நடைமுறைகளைப் பரப்புவதற்கு முயற்சி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ஆம் ஆண்டில் தே.க.ஆ.ம.நி. ஆரம்பிக்கப்பட்டது முதல் அது கல்வித்துறையில் 23 தேசியமட்ட ஆராய்ச்சி ஆய்வுகளைப் பூர்த்திசெய்துள்ளது. இவை இரு வகுதிகளைச் சேர்ந்தவை: முதலாவது தேசியமட்ட ஆராய்ச்சி ஆய்வு. இரண்டாவது பாடசாலைப் பிள்ளைகளுக்கான சோதனை அடுக்குகளை நிர்மாணித்தல். இவற்றில் 04ஆம், 08ஆம் மற்றும் 10ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்பான ஐந்து தேசிய சாதனை மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்கவை. இந்த ஆய்வுகள் இலங்கையில் கல்வித்துறையில் ஆராய்ச்சிக் கலாசாரமொன்று விருத்தியடைவதற்கு வழிவகுத் துள்ளன. கல்வியைத் திட்டமிடுபவர்களும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற் படுத்துபவர்களும் கல்வி முறைமையிலும் நடைமுறைகளிலும் தரம்சார்ந்த மாற்றமொன்றைக் கொண்டுவருவதற்கு ஆராய்ச்சிக் காண்புகளைப் பயன்படுத்துவதில் ஆழமான அக்கறை காட்டியுள்ள அதேவேளையில், அவை வெளியீடுகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. முறைசார்ந்த பாடசாலைகளில் தரம் 06 – தரம் 13 மாணவர்களுக்காக தே.க.ஆ.ம.நி. விருத்திசெய்த பொது ஆற்றல் சோதனை அடுக்கு இலங்கையில் கல்விச் சோதனைத் துறையில் வியக்கத்தக்க ஒரு முன்னேற்றமாகும். இந்த ஆற்றல் அளவுகோல் ஆசிரியர்களுக்கு மாணவர்களின் புலமை ஆற்றலை மதிப்பீடுசெய்கின்ற வாய்ப்புக்களை வழங்குகின்ற அதேசமயம் இச்சோதனைகள் வேறுபடுத்திக் காணும் நோக்கத்துக்காகவும் பயன்படுத்தப் படுகின்றன. இந்த அளவுகோல் பாடசாலை மட்டத்தில் பயன்படுத்தப்படும் ஏனைய சாதனைச் சோதனைகளுடன் ஒரு குறைநிரப்பும் கருவியாகப் பயன்படுகின்றது. இந்த அளவுகோல்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல மாணவர்களுக்காகத் தனிவேறாகக் கணிக்கப்பட்ட நாடளாவிய நியமங்களுடன் தே.க.ஆ.ம.நிலையத்தில் கிடைப்பதற்குள்ளன. ஆராய்ச்சிப் பணியாளரும் கல்வியைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களும் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். சோதனையின் நிருவாகத்திலும் சோதனையில் பெற்ற புள்ளிகளுக்குப் பொருள் விளக்கமளிப்பதிலும் தே.க.ஆ.ம.நி. அவர்களுக்கு உதவும்.

சமூக ஒட்டுறவு, பாடசாலை முகாமைத்துவம், இரண்டாவது தேசிய மொழியை அமுல்செய்தல், பரிகாரக் கல்வி, வெத்தா (வேடுவக்) குடும்பங்கள் என்பவை தொடர்பான ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

2008ஆம் ஆண்டில் தே.க.ஆ.ம.நி. கல்வி அமைச்சின் ஆதரவுடனும் உலக வங்கியின் அனுசரணையுடனும் இலங்கையில் தரம் 04 மாணவர்களின் தேசிய சாதனை மட்ட மதிப்பீட்டைப் பூர்த்திசெய்யக்கூடுமாயிருந்தது. இந்த ஆய்வு 2003இலும் 2007இலும் தரம் 04 மாணவர்களின் சாதனை மட்டங்களின் ஓர் ஒப்பீடாகும். சாதனை மட்டங்களில் ஒரு முன்னேற்றம் காணப்பட்டுள்ளதென்ற முடிவுக்கு வருவதற்குப் போதுமான சான்றை இவ்வாய்வு வழங்குகின்றது. தே.க.ஆ.ம.நி. தேசிய, மாகாண மற்றும் வலய மட்டங்களில் பல்வேறு பரப்பல் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. அவற்றினூடாகத் தேசிய, மாகாண மற்றும் வலய மட்டங்களில் கல்வியைத் திட்டமிடுபவர்களும் செயற்படுத்துபவர்களும் சாதகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகளை ஏற்படுத்தியுள்ள, தேவையான பரிகார நடவடிக்கையை எடுக்கக் கூடுமாயிருந்துள்ளது.

2008ஆம் ஆண்டில் மூன்று ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒன்று இலங்கையில் தரம் 08 மாணவர்களின் தேசிய சாதனை மதிப்பீடு. இந்த ஆய்வின் பிரதான குறிக்கோள் தற்போதுள்ள மாணவர்களின் சாதனையை 2005 ஆய்வுக்குட்பட்டவர்களின் சாதனையுடன் ஒப்பிடுதல். இரண்டாவது உட்படுத்திய கல்வி பற்றிய ஆய்வு. இது கல்வி அமைச்சின் ஆதரவுடனும் யுனிசெப் அனுசரணையுடனும் நடத்தப்படுகின்றது. இந்த ஆய்வு எல்லா நிகழ்ச்சித்திட்டங் களுக்குமான கல்வி நோக்கங்களையும் இலக்குகளையும் சாதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாக உட்படுத்திய கல்வியில் புலப்படும் பாங்குகளை வெளிப்படுத்தும். நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூன்றாவது ஆய்வு இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் மாதிரியொன்றில் நடத்தப்பட்ட பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவக் கருத்திட்டம் தொடர்பானது. பரீட்சார்த்த விசாரணை முறையை அடிப்படையாகக்கொண்ட இந்த ஆய்வு பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம் ஒரு முன்னோடியாக அறிமுகப் படுத்தப்பட்டவிடத்து நடைமுறைகளை இனங்காண்பதற்கு வழிவகுக்கின்றது.

## 06. பணியாளர் அபிவிருத்தி நிலையம் (SDC)

### அறிமுகம்

பணியாளர் அபிவிருத்தி நிலையம் (ப.அ.நி.) தொடக்கப்பட்டதிலிருந்து அதன் பதினோராவது ஆண்டைப் பூர்த்திசெய்தது. ப.அ.நி. கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு மட்டுமன்றி இலங்கையிலுள்ள ஏனைய எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும்/நிறுவகங்களுக்கும் நன்மைகளை அளிக்கின்றவகையில் உயர்கல்வி அபிவிருத்திக்கான அதன் உள்ளீட்டைத் தொடர்ந்து பல்வகைப்படுத்தியது. அதன் நடவடிக்கைகள் கல்விசார், நிருவாக, எழுதுநர் சார்ந்த மற்றும் தேர்ச்சித்திறனற்ற தரங்களைச் சேர்ந்த பணியாளர்களையும் மாணவர்களையும் இலக்காகக் கொண்டிருந்தன.

மீளாய்வாண்டில் ப.அ.நி. பின்வருவனவற்றை உள்ளடக்கிய பயிற்சி நடவடிக்கைகள் ஊடாக 404 பேருக்குப் பயிற்சியளித்தது:

- மாணவரை மையப்படுத்திய கற்பித்தல் மற்றும் கற்றல் முறையியல்களை அபிவிருத்திசெய்து அவற்றை உட்பதித்தல்
- பல்கலைக்கழக முறைமையிலுள்ள முகாமையாளர்களின் முகாமைத்துவத் திறன்களை அபிவிருத்திசெய்தல்.
- துணையாதரவுப் பணியாளர்களின் திறன்களை அபிவிருத்திசெய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்விசார், நிருவாக மற்றும் கல்விசாராப் பணியாளர்கள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுவதற்கான தயார்நிலையை மேம்படுத்துதல்.
- பணியாளர்களினதும் மாணவர்களினதும் மனப்பான்மைக் கண்ணோட்டங் களையும் படிப்புத் திறன்களையும் அபிவிருத்தி செய்தல்.

ப.அ.நி. அது தாபிக்கப்பட்டதன் அடிப்படைக் கடமையான கல்விசார் பணியாளருக்குக் கற்பித்தலை முன்னேற்றுகின்ற பயிற்சியளிக்கும் கடமைக்குத் தொடர்ந்து முக்கியத்துவமளித்தது. இதனை நோக்காகக்கொண்டு ப.அ.நி. CTHE (உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ்) கல்விநெறியை நடத்தியது. உபவேந்தரின் முன்முயற்சியின்பேரில் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட நிருவாக மற்றும் நிதிப் பணியாளருக்குப் புகுமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டது. இது பல்கலைக்கழக முறைமையையும் அதன் செயற்பாட்டையும் அவர்களுக்குப் பரிச்சயப்படுத்தும்பொருட்டு ப.அ.நி. மேற்கொண்ட ஒரு புதிய அடியெடுப்பாகும்.

ஏனைய பணியாளர் அபிவிருத்தி நிலையங்களுக்கு அவற்றின் வளப்பகிர்வாளர்களுக்குப் பயிற்சியளித்தல் அவற்றின் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை வகுப்பதில் ஆலோசனை வழங்குதல் என்பவற்றினூடாக அவற்றுக்கு உதவிபுரிதல் ப.அ.நி. ஈடுபட்ட வேறு நடவடிக்கைகளாகும்.

## பணியாளர் பற்றிய தகவல்

பணிப்பாளராகக் கடமையாற்றிய பேராசிரியர் எஸ்.யு.கே. ஏக்கரத்ன தமது ஏழாட்டை விடுப்பைப் பயன்படுத்துவதற்காக 15.02.2008 முதல் தமது பதவியை இராஜினாமாச் செய்தார். செல்வி வை.எம்.எஸ்.கே. வீரக்கோன் 2008 பெப்ருவரி 15 முதல் செப்ரெம்பர் 14 வரையான காலப்பகுதியில் பணிப்பாளராகப் பதிற்கடமையாற்றினார். பேராசிரியர் மாறி பெரேரா 15.09.2008 முதல் பணிப்பாளராகக் கடமையேற்றார்.

பணியாளர் தொகுதி சிரேஷ்ட விரிவுரையாளர், சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர், கணினிப் பிரயோக உதவியாளர் மற்றும் தொழிலாளி ஆகியோரைக் கொண்டிருந்தது.

மீளாய்வாண்டில் ப.அ.நிலையத்துக்கு இரு புதிய உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். செல்வி பீ.டி. தயானந்த 16.04.2008இல் விஞ்ஞான உதவியாளராகக் கடமையேற்றார். திரு. ஆர்.எம்.சி. ரணசிங்க 24.06.2008இல் பணியாளர் அபிவிருத்தியில் தகுதிகாண்நிலை விரிவுரையாளராகக் கடமையேற்றார். செல்வி வை.எம்.எஸ்.கே. வீரக்கோன் 15.09.2008 முதல் ஓராண்டுக்கு ஏழாட்டை விடுப்பில் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

ப.அ.நி.க்கு பட்ட மாணவர் கல்விநெறி எதனையும் நடத்துவதற்கான ஆணை வழங்கப்படவில்லை. மாறாக அது பல்கலைக்கழகப் பணியாளருக்குப் பயிற்சியளிக் கின்றது. எனினும் பிரதானமாகப் பல்கலைக்கழகத்தில் மேலும் சிறந்ததொரு கற்றல் கலாசாரத்தைத் தாபிப்பதற்கும் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தைப் பயனுறுதியுள்ளதாக ஆக்குவதற்குமான ஓர் இடையீடாக 'படிப்பு உத்திகள்' பற்றிய விரிவுரைகள் (புதிய) புகுமுகப் பட்ட மாணவர்களுக்கு நடத்தப்பட்டன.

## நீடிப்புக் கல்விநெறிகள்/சமூக சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

ப.அ.நி. குறிப்பாக வெளியிலுள்ள சமூகத்தை இலக்குவைத்த நீடிப்பு நிகழ்ச்சித் திட்டம் எதனையும் நடத்துவதில்லை. ஆனால் ஏனைய பல்கலைக்கழகங்களை/ நிறுவகங்களைச் சேர்ந்த பணியாளர்கள் அதன் கல்விநெறிகளிலும் செயலமர்வு களிலும் பங்குபற்றுகின்றனர்.

## பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

11ஆவது உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE) கல்விநெறி பல்கலைக்கழகப் பணியாளருக்காக ப.அ.நிலையத்தால் நடத்தப்பட்டது. இதனைப் பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 80 கல்விமான்கள் பின்பற்றினர். இவர்களில் ஒருசிலர், பிரதானமாகப் பட்டப்பின்படிப்புகளுக்காகக் கடல்கடந்து சென்றதன் விளைவாக, வரவு போதாமையின் நிமித்தம் தொடர்வதற்குத் தகுதிபெறவில்லை. முந்திய தொகுதிகளைச் சேர்ந்த பணியாளர்களுடன் சேர்த்து எஞ்சியவர்களில் 80 பேர் சித்தியடைந்ததனால் 93.5% சித்தி வீதம் எய்தப்பட்டது. சர்வதேச மட்டச் சான்றளிப்புக்கான SEDA, UK சான்றிதழுக்கு 36 பேர் சித்தியடைந்து 45% சித்தி வீதம் காணப்பட்டது. இக்கல்விநெறி திருமதி எஸ். வீரக்கோன், பேராசிரியர் சுகி ஏக்கரத்ன ஆகியோரால் கூட்டாக நடத்தப்பட்டது. 12ஆவது CTHE கல்விநெறி இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த 62 விரிவுரையாளர்களுக்காக 2008 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயலமர்வுகள் பேராசிரியர் மாறி பெரேராவால் நடத்தப்பட்டன.

## பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

ஒருநாள் செயலமர்வுகளும் வதிவுச் செயலமர்வுகளும் நடத்தப்பட்டன. கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக அவற்றில் உள்ளடக்கப்பட்ட தலைப்புக்களின் வீச்சில், கவனக்குவிப்பான எழுத்துத் திறன்கள், சிந்தித்தாய்கிற வழக்கம், 5Sஉம் உற்பத்தித்திறனும், கற்பித்தலைப் பயனுறுதியுடையதாக்கல், ஒரு கற்பித்தல் கல்விநெறிக்கு அப்பால் மாணவர் கற்றல் பற்றிய பிரச்சினைகளில்/ விடயங்களில் கவனஞ்செலுத்துதல், பாடவிதான வடிவத்தை ஒருங்கிணைத்தல், கற்றலை முன்னேற்றுவதற்கான கற்பித்தலும் மதிப்பீடும், எமது பல்கலைக்கழகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியில் திட்டமிடலும் மாற்றங்களைத் தூண்டுதலும், பல்கலைக்கழகங்களில் மாற்றத்தைத் திட்டமிடுவதற்கான மாதிரியமைப்பு நடைமுறைகள், இலங்கையில் பயன்முனைப்பான உயர்கல்வியை மேம்படுத்துவதற்கு பல்கலைக்கழகப் பாடவிதானங்களை மீளவடிவமைத்தல், மாணவர் கற்றல் செயல்நிறைவேற்றத்துக்கு/ விளைபலன்களுக்கு நிருவாக/முகாமைத்துவச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், ஊ.சே.நி. நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட கோப்பு முறைமை, பல்கலைக்கழக நிருவாக நடைமுறைகளை முன்னேற்றுவதற்கு மாற்ற மாதிரிகள் என்பவை அடங்கும்.

கல்விசார், நிருவாக மற்றும் துணையாதரவுப் பணியாளர் தமது கடமைகளையும் பொறுப்புகளையும் பயனுறுதியுள்ளமுறையில் நிறைவேற்றுவதற்கான அவர்களின் தன்னாயத்தநிலையை மேம்படுத்தும்பொருட்டு கணினித் திறன்கள், ஆங்கிலத் தேர்ச்சி, பல்கலைக்கழகத்தில் பயனுறுதியுள்ள நிதி நடைமுறைகள் போன்றவற்றில் செயலமர்வுகளையும் பயிற்சிநெறிகளையும் நடத்தியது.

செயலமர்வுகளை நடத்துவதற்கு உதவிய கடல்கடந்த உசாத்துணையாளர்களில் பேராசிரியர் ரனால்ட் மக்டொனல்ட், பேராசிரியர் மத்தியு அவுலெற் ஆகியோர் அடங்குவர். பேராசிரியர் அவுலெற் அவர்களால் 'கற்றல் சமூகங்களாக சோக்கிரட்டிக் குழுக்களை ஊக்குவித்தல், கனிஷ்ட பீடத்துக்கு அறிவுரை வழங்கல்' பற்றியும் 'நெறிமுறை வழக்கங்களும் எமது கற்பித்தலில் சம வாய்ப்புக்களை வழங்கலும் பற்றியும் மூன்று அரைநாள் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. பேராசிரியர் ரனால்ட் மக்டொனால்ட் அவர்களால் 'கற்றலை ஊக்குவிப்பதற்கு மதிப்பீட்டு உபாயங்கள்' பற்றி ஒரு முழுநாள் செயலமர்வு நடத்தப்பட்டது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிருவாக மற்றும் நிதிப் பிரிவுகளைச் சேர்ந்த புதிய பணியாளருக்கு புகுமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று வாரமொரு அரைநாள் செயலமர்வாக 15 வார காலத்தில் நடத்தப்பட்டது. சிரேஷ்ட நிருவாக மற்றும் நிதி அலுவலர்களும் பீடங்களின் பீடாதிபதிகளும் இச்செயலமர்வுகளுக்கு வளப்பகிர்வாளர் களாகப் பங்களிப்புச் செய்தனர். பதினாறு அலுவலர்கள் இக்கல்விநெறியைப் பூர்த்தி செய்தனர்.

உயர்கல்விப் பயனுறுதித்தன்மையை முன்னேற்றுவதற்கான இலங்கைச் சங்கத்துடன் (SLAIHEE) கூட்டாக "மாணவர்களிலும் பணியாளர்களிலும் திறன் அபிவிருத்தி வீச்சை விரிவுபடுத்துவதற்குக் கற்பித்தலைப் பயன்படுத்துதல்" என்ற தொனிப் பொருளில் கல்வி அபிவிருத்தி பற்றிய மாநாடொன்று நடத்தப்பட்டது. இதில் தேசிய பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிலுமிருந்து 90 கல்விமான்கள் பங்குபற்றினர். பதிவாளர் உட்பட கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இருபத்தைந்து பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் கடல்கடந்த பயிற்சியைப் பெற்றனர். பதிவாளர் இலண்டன் RIPA சர்வதேச நிறுவகத்தில் "உபாயகர மாற்றத்துக்குத் தலைமை வகித்தல்" பற்றிய பயிற்சி நெறியைப் பின்பற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார்துறையுடனான வலையமைப்பின் ஊடாகத் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு

ப.அ.நி. பணியாளர் மற்றும் கல்வி அபிவிருத்திச் சங்கம் (SEDA, UK), கல்வி அபிவிருத்திக்கான சர்வதேசக் கூட்டிணைப்பு (ICED), யுஎஸ்ஏ தொழில் வல்லமை மற்றும் நிறுவனம்சார் அபிவிருத்தி (POD) வலையமைப்பு போன்ற, ஏனைய நாடுகளிலுள்ள பணியாளர் மற்றும் கல்வி அபிவிருத்தி நிறுவனங்களில் உறுப்புரிமையைக் கொண்டுள்ளதாக அவற்றுடன் தொடர்ந்து பணியாற்றியது. ப.அ.நிலையத்தால் வழங்கப்படும் இரு கல்விநெறிகளை (CTHE மற்றும் ASTHE) SEDA, UK அங்கீகரித்துள்ளது. ஹல்லம் ஷெபீல்ட் பல்கலைக்கழகத்தில் கல்விசார் அபிவிருத்திப் பேராசிரியரான ரனல்ட் மக்டொனால்ட் CTHE மற்றும் ASTHE கல்விநெறிகளை ஆராய்ந்து மீளாய்வு செய்தார். மீளாய்வாண்டில் SEDA, UK இக்கல்விநெறிச் செயல்நிறைவேற்றத்தை மதிப்பீடுசெய்ததைத் தொடர்ந்து இவ்விரு கல்விநெறிகளும் மேலும் மூன்றாண்டு காலப்பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்டன.

பேராசிரியர் ஏக்கரத்ன ICED கவுன்சில் உறுப்பினராகத் தொடர்ந்ததுடன் இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் மனித வளங்கள் மற்றும் கல்விக்கான உப குழுவின் ஓர் உறுப்பினராகவும் தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) கவுன்சில் உறுப்பினராகவும் கடமையாற்றினார். ப.அ.நி. பணிப்பாளர், பணியாளர் அபிவிருத்தி பற்றிய ப.மா.ஆ. நிலைக்குழுவின் ஓர் உறுப்பினராயுள்ளார்.

ப.அ.நி. கலைப் பீடத்தின் 2008 வருடாந்தப் பாடவிதான மீளாய்வுச் செயலமர்வுக்கு அனுசரணை வழங்கக்கூடுமாயிருந்தது.

பேராசிரியர் ஏக்கரத்ன, திருமதி வீரக்கோன் ஆகியோர் இரண்டாவது ஆண்டாக உயர்கல்விப் பயனுறுதித்தன்மையை முன்னேற்றுவதற்கான இலங்கைச் சங்கத்தின் (SLAIHEE) தலைவராகவும் செயலாளராகவும் சேவையாற்றினர். பேராசிரியர் ஏக்கரத்ன SLAIHEE செய்திமடலின் பதிப்பாசிரியராகவும் கல்விசார் அபிவிருத்திக் கான சர்வதேச குறிப்பேட்டுக்கான நடுவராகவும் சேவையாற்றினார்.

## ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

ஏக்கரத்ன, சுகி மற்றும் வீரக்கோன் ஷிரினிக்கா; புதிய விரிவுரையாளர்களுக்குப் பயிற்சியளிப்பதில் கற்பித்தல் மற்றும் கற்றல் புலமைக்காட்சியெல்லைகளை அகல்விரிவாக்குவதற்குப் புதிய உறவுகளின் பயன்பாடு, இலண்டன் கற்பித்தல் மற்றும் கற்றல் புலமைச் சர்வதேச மாநாடு, ப. 32

வீரக்கோன் வை.எம்.எஸ்.கே.; முதலாம் ஆண்டு மாணவனைப் பாதிக்கின்ற விடயங்கள், எதிர்கால நீடுறுதியான அபிவிருத்தியின்மீது பல்கலைக்கழக அனுபவமும் தாக்கமும், ப. 79-85, வியாபார முகாமைத்துவம் பற்றிய ஐந்தாவது சர்வதேச மாநாடு, முகாமைத்துவக் கற்கை மற்றும் வணிக பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

வீரக்கோன் ஷிரினிக்கா மற்றும் ஏக்கரத்ன, சுகி; கற்றல் உடன்பாட்டுக் கருவியொன்றினூடாக மாணவர்களில் ஒரு தொடர்வரிசையான திறன் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்குச் சிறிய குழுக் கற்பித்தலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துமாறு விரிவுரையாளர்களுக்குப் பயிற்சியளித்தல். ப.2, நான்காவது மாநாடு, இலங்கை உயர்கல்வி முன்னேற்றச் சங்கம், கொழும்பு, இலங்கை

## உட்கட்டமைப்பும் வளங்களும்

அதன் வெளிவாரி SIDA-SAREC மானியத்தின் நிதிகளைப் பயன்படுத்தி ப.அ.நி. அலுவலகக் கட்டடத்தில் காற்றுச் சீராக்கிகள் பொருத்தப்பட்டன. எனினும் அவை கருத்தரங்கு அறையில் இதுவரை பொருத்தப்படவில்லை.

ப.அ.நி. சுவீடனிலிருந்து SIDA-SAREC பணியாளர் அபிவிருத்தி மானியத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட நடவடிக்கைகளுக்காகப் பெற்றுக்கொண்ட நிதியை 08 பணியாளரின் கடல்கடந்த பயிற்சிக்காகப் பயன்படுத்தியது. அது கலைப் பீடத்தின் வருடாந்தப் பாடவிதான மீளாய்வுக்கான இருநாள் வதிவுச் செயலமர்வுக்கும் அனுசரணையளிக்கக்கூடுமாயிருந்தது.

ப.அ.நி. நூலகத்துக்கு ஒரு புதிய தொகுதிப் பாடநூல்களும் ப.அ.நி.க்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய பணியாளருக்கு கணினித் திறன்களிலும் ஆங்கிலமொழித் திறன்களிலும் பயிற்சியளித்தலும் இம்மானியத்தினூடாகச் சாத்தியமாயிற்று.

இம்மானியம் ப.அ.நி. அதன் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மேலும் இயலச் செய்துள்ளதனால் நாம் இந்நிதியுதவிக்கு மிகவும் நன்றியுடையவர்களாவோம். 2006-2008 காலப்பகுதிக்கான ப.அ.நி. செயல் நிறைவேற்றம் பேராசிரியர் மத்தியு அவுலெற்றால் மீளாய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழக மூதவைக்கும் பேரவைக்கும் அவர் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் 'ப.அ.நி. பணியாளர் கிடைப்பதற்குள்ள வளங்களை ஆகச்சிறந்தமுறையில் பயன்படுத்துகின்றனர்'. அது ப.அ.நி.இன் ஒட்டுமொத்தச் செயல்நிறைவேற்றத்தையும் பாராட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி VIII

# நூலகம்

## அறிமுகம்

2008ஆம் ஆண்டு நூலக வளங்களிலும் சேவைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. கடந்த சில ஆண்டுகளாக வெற்றிடமாயிருந்த பல்வேறு பணியாளர் பதவிநிலைகள் நிரப்பப்பட்டதைத் தொடர்ந்து பிரிவுத் தலைவர்கள் அனேக நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடுமாயிருந்தது.

பிரதான நூலகத்தில் மார்ச்சில் ரூ. 2.5 மி. செலவில் பாதுகாப்பு வாயில்கள் பொருத்தப்பட்டன. அவை 2009 முதல் முழுமையாக இயங்கத் தொடங்கும்.

## வளங்கள்

2008க்கான நூல்களுக்கும் பருவ இதழ்களுக்குமான ஒதுக்கீடு ரூ. 22 மில்லியன். இதிலிருந்து நூலகம், 2007ஆம் ஆண்டிலிருந்து 24 தலைப்புகள் குறைந்ததாக, 138 தலைப்புகளுக்குச் சந்தா செலுத்தக்கூடுமாயிருந்தது. பருவ இதழ்களுக்கான சந்தாக்கள் உயர்ந்தமையும் யுகே பவுண், யூரோ மற்றும் யுஎஸ் டொலர் என்பவற்றுக்கெதிராக இலங்கை ரூபாயின் தேய்மானமும் இவ்வாண்டில் சந்தா செலுத்தப்பட்ட குறிப்பேட்டுத் தலைப்புகளின் எண்ணிக்கையைப் பாதித்தன.

இலத்திரனியல் தரவுத்தளங்களுக்கான அணுகல் தொடர்பில் 2008ஆம் ஆண்டு இருளார்ந்த ஆண்டாகவும் இருந்தது. பல்வேறு இலத்திரனியல் தரவுத் தளங்களுக்கான அணுகல் வழங்கப்பட்ட SIDA/SAREC நூலக ஆதரவுக் கருத்திட்டம் 2007இல் ஒரு முடிவுக்கு வந்தது. கருத்திட்ட நிதிகளில் எஞ்சியிருந்த 11,476.00 யுஎஸ் டொலரைக்கொண்டு நூலகம் பாம்கிறேவ்–மாக்மிலன் குறிப்பேடுகள், ரெய்லர் அன்ட் பிரான்சிஸ் ஈ-நூல்கள், வால்டர் டி குறூய்ரர் கணினிவழிக் குறிப்பேடுகள் ஆகியவற்றுக்குச் சந்தா செலுத்தக்கூடுமாயிருந்தது. இவற்றுடன் யுகே, ஒக்ஸ்போர்ட் INASP ஊடாக, கலிபோர்னியா பல்கலைக்கழகப் பிரஸ் மற்றும் சிக்காகோ பல்கலைக்கழகப் பிரஸ் ஆகியவற்றின் கணினிவழி வளங்களுக்கான அணுகலும் வழங்கப்பட்டது. நிதிகளின் பற்றாக்குறையின் நிமித்தம் EBSCO மற்றும் பிளாக்வெல் பப்ளிஷிங் போன்ற மிகப் பிரபலமான தரவுத்தளங்களை இரத்துச்செய்ய வேண்டியிருந்தது.

போர்ட் பவுண்டேஷன் ஆதரவின்கீழ் JSTOR மற்றும் IMF வெளியீடுகளுக்கான அணுகல் நூலகத்துக்குத் தொடர்ந்து கிடைத்தது.

## வாசகர் சேவைகள்

நூலகம் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பதனால் பிரதான நூலகம் திறந்துவைக்கப்பட்டிருக்கும் நேரம் இரண்டு மணித்தியாலங்களால் குறைக்கப்பட்டது. இப்போது பிரதான நூலகம் மாலை 6.00 மணிக்கு மூடப்படுகின்றது. எனினும் மருத்துவ நூலகம் மாலை 8.00 மணிவரை திறந்துவைக்கப்பட்டிருந்தது. விஞ்ஞான நூலகம் அரையாண்டுப் பரீட்சைகளின்போது இரவு 8.00 மணிவரை திறந்து வைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டில் பிரதான, மருத்துவ மற்றும் விஞ்ஞான நூலகங்களில் 5,691 பட்ட மாணவர்கள், பட்டப்பின்படிப்பு மாணவர்கள் மற்றும் 1,570 கல்விசார் பணியாளர்கள் அடங்கலாக மொத்தம் 7,261 வாசகர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். எட்டு வெளிநாட்டு மாணவர்கள் உட்பட 33 மாணவர்களுக்குக் குறுகியகால வாசிப்புரிமை வழங்கப்பட்டது. நூலகத்தைப் பயன்படுத்திய வாசகர்களின் சராசரி 1,245 ஆகும்.

## நூலகத் தன்னியக்க முறைமை

பிரதான நூலகத்திலுள்ள திரட்டுக்கு பார் குறியிடுதல் 2007 நவம்பரில் தொடங்கப் பட்டு, மீளாய்வாண்டு பூராவும் தொடர்ந்தது. பார் கோடிங் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் அனைவரின் முயற்சிக்கும் நூலகர் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றார்.

## வள நிலையமும் பிற சேவைகளும்

நூலகத்தின் ஈ–வளநிலையத்தில் கணினிகளின் தொழிற்பாட்டு மேடை பாதுகாப்பை மேம்படுத்தும்பொருட்டு லீனக்சுக்கு மாற்றப்பட்டது. மாணவர்களுக்கு ஈ-வளங்களைப் பயன்படுத்துவதில் பயிற்சி சிரேஷ்ட பணியாளரால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. மேலதிகமாகப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவர்களுக்காக இரண்டு இலத்திரனியல் தகவல் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. பிரதான மருத்துவ மற்றும் விஞ்ஞான நூலகங்களிலுள்ள ஈ-வள நிலையங்கள் மாணவர்களால் பாரிய அளவில் பயன்படுத்தப்படுவதனால் மேலும் கணினிகளைக்கொண்டு இவ்வசதி மேம்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாண்டில் பிரதான மருத்துவ மற்றும் விஞ்ஞான நூலகங்களால் ஈட்டப்பட்ட வருமானம் பின்வருமாறு:

### அட்டவணை VIII-01: நூலகத்தால் ஈட்டப்பட்ட வருமானம்

| கட்டணங்கள்/தண்டங்கள் | மொத்தம் (ரூ.) |
|---|---:|
| ஒளிப்பிரதியிடல் கட்டணம் | 4,202.00 |
| தொலைத்த புத்தக அறவீடுகள் | 148,062.62 |
| புத்தகம் கட்டல் கட்டணம் | 52,115.00 |
| தண்டங்கள் | 456,501.20 |
| கருத்தரங்க அறை வாடகை | 148,000.00 |
| தற்காலிக வாசகர் கட்டணம் | 9,600.00 |
| தொலைத்த சீட்டுக்களின் பதிலீடு | 7,903.75 |
| **மொத்தம்** | **826,384.57** |

## பணியாளர் பற்றிய தகவல்

திருமதி எஸ். ஜயசூரிய தமது ஏழாட்டை விடுப்பின் பின்னர் மீண்டும் கடமையேற்கும்வரை சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி டி.சி. குருப்பு 31.10.2008 வரை பதில் நூலகராகக் கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பீ. விஜேதுங்க தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளராக ஆறாண்டுப் பதவிக் காலத்தைப் பூர்த்திசெய்தபின்னர் சிரேஷ்ட உதவி நூலகர்/கையேற்புகளாக 24.02.2008இல் மீண்டும் கடமையேற்றார்.

நூலகத்தின் அபிவிருத்தி வேலைக்குப் பெரிதும் இடையூறாயிருந்த பணியாளர் பற்றாக்குறைகளைத் தணிக்கின்றவகையில் ஆண்டின் பிந்திய அரைப்பகுதியில் பல்வேறு வெற்றுப் பதவிகள் நிரப்பப்பட்டன.

## பட்ட மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

நூலகத்தில் ஈ-வள நிலையத்தைப் பயன்படுத்துகின்ற பட்ட மாணவர்களுக்காக இலத்திரனியல் தரவுத்தளங்களின் பயன்பாடு பற்றிய பல்வேறு ஒப்புவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## நீடிப்புக் கல்விநெறிகள்/சமூக சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை நூலகச் சங்கத்தினதும் (SLLA) தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிறுவகத்தினதும் (NILIS) மாணவர்களுக்காக நூலகம் இருவாரப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியது. இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் அரச புலனாய்வுச் சேவைப் பணிப்பாளரின் கோரிக்கையின்பேரில் பன்னிரண்டு பயிலுனர்களுக்குப் புத்தகக் கட்டகத்தில் ஒருவாரப் பயிற்சி வழங்கப்பட்டது.

## பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள்

நூலகம் தகவல் முறைமைகள் முகாமைத்துவத்தில் முதுமாணிக்கு இட்டுச்செல்கின்ற தகவல் முறைமைகள் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமாவை பட்டக் கற்கைகள் பீடத்தில் 11.07.2008இல் தொடக்கிவைத்தது. சிரேஷ்ட உதவி நூலகர் திரு. சி.சி. ஜயசுந்தர இந்நிகழ்ச்சித்திட்டத்தை ஒத்திசைவிக்கின்றார். இக்கல்வி நெறிக்கு எழுபத்தாறு மாணவர்கள் பதிவுசெய்துள்ளனர்.

## பணியாளர் அபிவிருத்தி

திருமதி பீ விஜேதுங்கவுக்கு 2008 செப்ரெம்பரில் யுகே, நூலக மற்றும் தகவல் தொழில்வல்லுனர்களின் பட்டய நிறுவகத்தின் உறுப்புரிமை வழங்கப்பட்டது.

பட்டக் கற்கைகள் பீடத்தில் மூன்று சிரேஷ்ட உதவி நூலகர்கள் தமது பீஎச்.டி. பட்டங்களுக்காகப் படித்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், ஐந்து உதவி நூலகர்கள் முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பதிவுசெய்துள்ளனர். சிரேஷ்ட பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தினாலும் இலங்கை நூலகச் சங்கத்தினாலும் நடத்தப்பட்ட செயலமர்வுகளில் பங்குபற்றக் கூடுமாயிருந்தனர். மூன்று நூலக உதவியாளர்கள் குறுகியகாலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை VIII-02: ஆராய்ச்சி, வெளியீடுகள் மற்றும் சமர்ப்பிப்புகள்

| ஆராய்ச்சி | மொத்தம் |
| --- | --- |
| சமர்ப்பிப்பு/குறிப்பேடு | 07 |
| மீளாய்வு/ஆராய்ச்சிக் கட்டுரைகள், பேருரைகள் | 03 |

## தனியார்துறையுடனான வலையமைப்பினூடாகத் தேசிய அபிவிருத்திக்குப் பங்களித்தல்

SIDA/SAREC நிதியுதவியிலிருந்து PERI ஊடாக மூன்று இலத்திரனியல் தரவுத்தளங்களுக்கான அணுகல் வழங்கப்பட்டது. இவ்வசதி பல்கலைக்கழகங்கள், கல்விசார், ஆராய்ச்சி, அரசாங்க, வர்த்தக நோக்கற்ற நிறுவனங்கள் ஆகிய எல்லாவற்றுக்கும் வழங்கப்பட்டது. நூலகர் நாட்டு இணைப்பாளராகவும் அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு நூலக ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டத் தலைவராகவும் செயற்பட்டார்.

HELLIS வலையமைப்பின் குவிமையமாகச் செயற்படும் மருத்துவ நூலகம் சுகாதாரத் தகவல்கள் பற்றிய பயன்படுத்துவோர் தெரிநிலை நிகழ்ச்சித்திட்டங் களையும் நூலகப் பணியாளருக்கு IT பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியதுடன், இவ்வலையமைப்பில் உள்ள 22 உறுப்பு நூலகங்களுக்கும் இலங்கையிலும் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்திலும் சுகாதாரம் மற்றும் சுகாதாரம் தொடர்பான விஞ்ஞானத் துறைகளிலுள்ள தொழில்வல்லுனர்களுக்கும் துணைத் தொழில்வல்லுனர்களுக்கும் இலத்திரனியல் ஆவண வழங்கல் சேவையையும் SDCP சேவையையும் வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி IX

# கட்டடக் கருத்திட்டங்கள்

## அறிமுகம்

நடைபெறுகின்ற ஆறு (06) கட்டடக் கருத்திட்டங்களின் மொத்தக் கிரய மதிப்பீடு ரூ. 1,569.27 மில்லியனாகும். இரண்டு புதிய கட்டடக் கருத்திட்டங்கள் ரூ. 220 மி. செலவில் 2008ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. மருத்துவ பீடத்துக்காகப் பல்கலைக் கழக முறைமையில் ஆகப்பெரிய கட்டடக் கருத்திட்டத்துக்கான பதிகாலிடும் வேலைகள் இவ்வாண்டில் ஆரம்பமாகின. இக்கட்டடக் கருத்திட்டங்களுக்காக இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதன மானியம் ரூ. 160.5 மி.

## கட்டடக் கருத்திட்டங்களின் நடப்புநிலை

இக்கருத்திட்டங்களின் நடப்புநிலைகள் அட்டவணை IX-01இல் தரப்பட்டுள்ளன. இந்நிர்மாணக் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வும் கண்காணிப்பும் பல்கலைக் கழகத்தின் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் கட்டடக் குழுக்களால் ஒழுங்காக மேற்கொள்ளப்படுகின்றன. மேலதிகமாக ஒழுங்கான அமைவிடக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இவ்வாண்டில் புள்ளிவிவரவியல், கணிதத் துறைக்குக் கணினி ஆய்வுகூடத்துக்கான கட்டடத்தின் நிர்மாண வேலை 07.05.2008இல் தொடங்கியது. மேலும் பல்கலைக்கழக முறைமையில் ஆகப்பெரிய கட்டடக் கருத்திட்டத்துக்குப் பதிகாலிடும் வேலைகள் 11.11.2008இல் ஆரம்பமாகின.

பல்கலைக்கழகம் பிணி ஆய்வு மருத்துவத்துக்கும் கேட்போர்கூடக் கருத்திட்டத் துக்குமான கட்டடத்தின் பூர்த்திசெய்யப்பட்ட இரண்டு தளங்களை ஒப்பந்தகாரரிட மிருந்து பொறுப்பேற்றது.

## திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள்

நடப்புக் கருத்திட்டங்களுக்கு மேலதிகமாகக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் புதிய கட்டடக் கருத்திட்டங்களைப் ப.மா.ஆ. அங்கீகரித்துள்ளது.

i. ஒரு விடுதியின் நிருமாணம் (முத்தையா விடுதியில் 400 மாணவர்களுக்கான புதிய சிறகம்) தேர்வுமுறையான TCE–ரூ. 173.0 மி.

ii. விஞ்ஞான பீடத்தில் சிற்றுண்டிச்சாலை மற்றும் மாணவர் வசதிகளுக்கான கட்டடம் - தேர்வுமுறையான TCE–ரூ. 95.0 மி.

iii. முகாமைத்துவ, நிதிப் பீடத்துக்கு சிற்றுண்டிச்சாலை, விரிவுரை மண்டபம், தனிமுறைப் போதனை அறைகள், விரிவாக்க மண்டபங்கள், கணினி ஆய்வுகூடம் மற்றும் அலுவலக வசதிகளுக்கான கட்டடத்தொகுதியின் நிர்மாணம்- தேர்வுமுறையான TCE–ரூ. 113.0 மி.

iv. விஞ்ஞான பீடத்துக்குப் புதிய நூலகக் கட்டடத்தின் நிர்மாணம் - தேர்வுமுறையான TCE–ரூ. 53.0 மி.

v. பல்கலைக்கழகத்துக்குப் பரீட்சை மண்டப நிர்மாணம் - தேர்வுமுறையான TCE–ரூ. 22.0 மி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை IX – 01: கட்டடக் கருத்திட்டங்களின் நடப்புநிலை – 2008

| கட்டடக் கருத்திட்டம் | மொத்தக் கிரய மதிப்பீடு (ரூ.) | ஒப்பந்தகாரர் | உசாத்துணை யாளர் | மொத்தச் செலவினம் (ரூ.) | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| பிணி ஆய்வு மருத்துவக் கட்டடம் மற்றும் கேட்போர்கூடம் | மூலமதிப்பீடு 70 மில். திருத்தியது 133.77 மில். | எம்/எஸ்.எஸ்.டி.ஸ்ரீபன் அன்ட் கம். லிமிட். | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 59.86 மில். | கட்டடத்தின் தரைத்தளமும் 1ஆம் தளமும் பல்கலைக்கழகத்தால் பொறுப்பேற்கப்பட்டன. 2009 மார்ச் 31க்கு முன்னர் முழுக் கருத்திட்டத்தையும் பூர்த்திசெய்து கையளிப்பதற்கு ஒப்பந்தகாரர் உடன்பட்டுள்ளார். கருத்திட்டம் தாமதமாகியுள்ள போதிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. |
| டி சேரம் மாணவர் விடுதி, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10இல் | 163.00 மில். | எம்/எஸ்.ஸ்ரீபன்ஸ் கன்ஸ்றக்ஷன் அன்ட் கம். லிமிட். | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 102.95 மில். | ஒப்பந்தகாரரால் நிருமாண வேலையின் 85% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| முத்தையா பெண்கள் விடுதி, 48, ஜினரத்தன மாவத்தை, கொழும்பு 02இல் | | இதுவரை தெரிவு செய்யப்படவில்லை | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 0.27 மில். | - |
| விஞ்ஞானபீடத்துக்கான நீடிப்பு - உயிரியல் கட்டம் II, படிநிலை II (விலங்கியல்) | 85.மில். (படிநிலை I மற்றும் II) | இதுவரை தெரிவு செய்யப்படவில்லை (படிநிலை III) | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் | 54.00 மில். (படிநிலை I & II) | இக்கருத்திட்டத்தின் படிநிலை I (தாவரவியல்) பூர்த்தியானது. படிநிலை II (விலங்கியல்) இன் TEC ரூ. 296.48 மி. TECஐத் திருத்தும்படி கோரப்பட்டுள்ளது. |
| மருத்துவ பீடம், மருதானை வீதியில் கட்டடத்தொகுதி | தொடக்கத்தில் 290.0 மில். திருத்தியது 1139.0 மில். | பதிகாலிடும் வேலை (எம்/எஸ். நவலோக பைலிங் (பிரை) லிமிட்) | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 64.50 மில். | ரூ. 192 மில்லியனுக்கு பதிகாலிடும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. ஒப்பந்தம் வழங்கப்பட்டு வேலையின் 10% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| கணித மற்றும் புள்ளிவிபரவியல் துறைகளுக்கான கட்டடம் | 48.50 மில். | சாம்சன் என்ஜினியரிங் (பிரை) லிமிட் | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் | 08.09 மி. | ஒப்பந்தகாரர் ஏற்கெனவே வேலை தொடங்கிவிட்டதுடன் 75% வேலையும் ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி X

# காணிகளினதும் கட்டடங்களினதும் பராமரிப்பு

இவ்வாண்டில் பராமரிப்புப் பிரிவு 54 பணியாளர் தொகுதி உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. ஒரு கட்டுமான வேலை மேற்பார்வையாள் கட்டுமான வேலை அத்தியட்சகர் பதவிக்குப் பதவியுயர்த்தப்பட்டதுடன், நான்கு சிவில் மேற்பார்வையாளர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஒரு மின்சார அத்தியட்சகர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்.

மருத்துவ பீடத்தில் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டதும் தேவைப்பட்டதுமான பராமரிப்பு அலகு மீளத் தாபிக்கப்பட்டது. இத்துணைத் துறை முழுநேர சிவில் மேற்பார்வையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், ஒரு மின்னியலாளர், இரண்டு பயிலுனர் மின்னியலாளர்கள், ஒரு ஈயக்கம்மியர், இரண்டு பயிலுனர் ஈயக்கம்மியர்கள், ஒரு தச்சுத் தொழிலாளி, ஒரு மேசன், இரண்டு தொழிலாளிகள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

பீடங்களையும் துறைகளையும் பிரச்சினையின்றி செயற்பாட்டு மட்டத்தில் வைத்திருக்கும் பொருட்டுத் துறைகளிலும் "புளொம்பொன்ரீன்" மற்றும் "டி சேரம்" விடுதிகளிலும் பொரளையிலுள்ள இணைந்த சுகாதார-இயன்மருத்துவ அலகிலும் நியாயமான அளவு பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளைப் புதிதாகத் தாபிக்கப்பட்ட இத்துறை நிறைவேற்றியது.

இத்துறையின் பணியாளர் தொகை இரண்டு (02) நிருவாக, எட்டு (08) மேற்பார்வை, ஆறு (06) எழுதுநர் மற்றும் தொழில்நுட்பத் தர மற்றும் இருபத்தேழு (27) தேர்ச்சித்திறன் மட்டங்களைச் சேர்ந்த நாற்பத்து மூன்று (43) பேராக இருந்தது.

பராமரிப்புத்துறை 'சார்க்' உச்சிமாநாட்டுக்கு முன்னர் பல்கலைக்கழக வேலிக்கும் ஹவலொக் விடுதி எல்லைச் சுவர்களுக்கும் வர்ணம்பூசும் வேலை, சட்ட பீடத்தின் 60ஆவது ஆண்டுவிழாவுக்கு முன்னர் அதற்கு வர்ணம்பூசும் வேலை, சட்ட, விஞ்ஞான பீடங்களிலும் பணியாளர் அபிவிருத்தி நிலையத்திலும் மின்கம்பி பொருத்தும் மற்றும் மின்சார வேலைகள், 'பொரலஸ்கமுவ', 'ரத்தனன்பிட்டிய' பெண்கள் விடுதிகளிலும் பொரளையில் துணை மருத்துவ மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் அமைந்துள்ள இரு மாடிக் கட்டிடத்திலும், அவற்றை அவற்றின் உரிமையாளர்களுக்குக் கையளிப்பதற்கு முன்னர், முழுமையான திருத்த மற்றும் பராமரிப்பு வேலைகள் போன்றவற்றுக்குத் துறையைச் சேர்ந்த நேரடித் தொழிலாளரைப் பயன்படுத்தியதன்மூலம் இவ்வாண்டில் பல்கலைக்கழகம் ஏறக்குறைய 1.3 மில்லியனைச் சேகரிக்கக்கூடியதாகப் போதியளவு பராமரிப்பு, திருத்த மற்றும் முன்னேற்ற வேலைகளை மேற்கொண்டது.

2008ஆம் ஆண்டில் சில திருத்தங்களுக்கும் முன்னேற்றங்களுக்கும் புனரமைப்பு மற்றும் நிருமாண வேலைகளுக்கும் வெளிவளம் பெறப்பட்டது. ஆண்டின் முடிவிலிருந்தவாறான நிலைமை அட்டவணை X-01இல் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை X – 01:

## பூர்த்தியான வேலை - திருத்தங்கள், முன்னேற்றங்கள் மற்றும் புனரமைப்பு வேலை

*(பீடங்கள் மற்றும் பயனாளிகள்ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| விவரம் | ஒப்பந்தகாரர் | கேள்விக்கிரயம் (வாற் நீங்கலாக) |
|---|---|---|
| **பொது** | | |
| ஹவலொக் பெண்கள் விடுதியில் காஸ் விநியோக முறைமைக்குத் திருத்தம் | காஸ் வேர்க் சென்டர் | 23,725.00 |
| முத்தையா பெண்கள் விடுதியில் காஸ் விநியோக முறைமைக்குத் திருத்தம் | காஸ் வேர்க் சென்டர் | 17,350.00 |
| பீடைக் கட்டுப்பாடு, கறையான் ஒழிப்புச் செயற்பாடு, முத்தையா விடுதி | யுனைரட் புறொபெஷனல் ஏஜன்சீஸ் | 60,000.00 |
| கித்தியாகார விடுதியில் காஸ் முறைமைக்குத் திருத்தம் | காஸ் வேர்க் சென்டர் | 35,835.00 |
| **உப மொத்தம்** | | **136,910.00** |
| **கலைப் பீடம்** | | |
| தற்போதுள்ள மலசலகூடங்களைப் புதுப்பித்தலும் வீதித் திருப்பத்துக்கு முன்னேற்றங்களும் | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 185,200.00 |
| கார் நிறுத்துமிடங்கள் இரண்டின் நிருமாணம் | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 925,945.00 |
| சிற்றுண்டிச்சாலையில் காஸ் முறைமைக்குத் திருத்தம் | காஸ் வேர்க் சென்டர் | 15,880.00 |
| மேலதிக நீர் இணைப்பு | தே.நீ.வ.வ.சபை | 144,834.50 |
| **உப மொத்தம்** | | **1,298,859.50** |
| **கல்விப் பீடம்** | | |
| கல்விசார் பணியாளருக்கு அலுமினியத் தனியறைகளின் நிருமாணம், மானுடவியல் கல்வித்துறை | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 229,940.00 |
| **உப மொத்தம்** | | **229,940.00** |
| **சட்ட பீடம்** | | |
| விரிவுரை அறை I & II புதுப்பித்தல், புதிய விரிவுரை அரங்கம் | கல்ஹுர பில்டேர்ஸ் | 3,927,380.50 |
| உள்ளக பிரிதடுப்புச் சுவர்கள் | உதார லங்கா டெவலப்மன்ற் அன்ட் கன்ஸ்றக்ஷன் கம்பனி | 522,490.00 |
| **உப மொத்தம்** | | **4,449,870.50** |
| **மருத்துவ பீடம்** | | |
| மனித மரபணுவியல் ஆய்வுகூடத்தில் அலுமினியப் பிரிதடுப்புகள் | டிலங்கா அசோசியேட்ஸ் | 128,600.00 |
| **உப மொத்தம்** | | **128,600.00** |
| **விஞ்ஞான பீடம்** | | |
| அணுகல் வீதியின் நிருமாணம், பௌதிகவியல் துறை | சியானே கன்டிறாக்டர்ஸ் | 148,775.00 |
| அணுக்கரு விஞ்ஞானத்துறைக்கு அலுமினியம் கதவுகளும் கண்ணாடிப் பொட்டிப்புகளும் வழங்கலும் பொருத்தலும் | உதார லங்கா டெவலப்மன்ற் அன்ட் கன்ஸ்றக்ஷன் கம்பனி | 74,300.00 |
| நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்துக்கு எல்பீஜி குழாய் அமைப்பு வழங்கலும் பொருத்துதலும், தாவர விஞ்ஞானங்கள் துறை | லாஃப்ஸ் என்ஜினியரிங் (பிரை) லிமிட் | 328,600.00 |
| **உப மொத்தம்** | | **551,675.00** |
| **மொத்தம்** | | **6,795,855.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை X – 02:

## நடைபெறும் வேலை - திருத்தங்கள், முன்னேற்றங்கள் மற்றும் புனரமைப்பு வேலை

*(பீடங்கள் மற்றும் பயனாளிகள்ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| விவரம் | ஒப்பந்தகாரர் | கேள்விக்கிரயம் (வாற் நீங்கலாக) |
|---|---|---|
| **பொது** | | |
| அரச கணக்காய்வுக் கிளையில் 5 மிமி தடிப்பான பொலிமர் கீழடுக்குக்கொண்ட லூப் பைல் கார்பெட் வழங்கலும் விரித்தலும் | ஹவுஸ் ஒப் ஜிகான் ரெக்ஸ் | 55,607.15 |
| இடி, மின்னல் பாதுகாப்பு முறைமை வழங்கல், பொருத்துதல், பேணல் - சிறி பாளி வளாகம் | சோ என்ஜினியரிங் லிமிரெட் | 1,498,000.00 |
| கித்தியாகார ஆண்கள் விடுதியில் இரு மலசலகூடங்களைப் புதுப்பித்தல் | உதார லங்கா டெவலப்மன்ற் அன்ட் கன்ஸ்றக்ஷன் கம்பனி | 872,425.00 |
| முகாமை, நிதிப் பீடத்துக்கும் கல்விப் பீடத்துக்கும் அணுகல் பாதையின் நிர்மாணம் | சியாநே கன்டிறாக்டர்ஸ் | 823,610.00 |
| பிரதான நூலகத்துக்கு உருக்கு கிறில்களும் வாயில்களும் வழங்கலும் பொருத்துதலும் | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 116,197.50 |
| பேரா. ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை நுழைவாயிலில் பாதுகாப்பு அறையினதும் உருக்குக் குழாய்த் தடை வேலியினதும் நிர்மாணம் | உதார லங்கா டெவலப்மன்ற் அன்ட் கன்ஸ்றக்ஷன் கம்பனி | 520,205.00 |
| சிரேஷ்ட மாணவர் உளவளத்துணையாளருக்கு அலம்பல் அறையின் நிருமாணம் | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 329,450.00 |
| பிரதான நூலகத்தின் வெளிப்புற மேற்பரப்புக்கு வர்ணம் பூசும் வேலையும் கூரைக்குத் திருத்தமும் | கேள்வி மதிப்பீட்டுக் கட்டம் | - |
| HEMIS அலுவலகத்துக்குப் பிரிதடுப்பிடல் | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 352,005.00 |
| பராமரிப்புத் துறையில் அலுமினியம் பிரிதடுப்பு யன்னல்களும் சீலிங் வேலையும் | டுலங்கா அசோசியேட்ஸ் | 256,587.60 |
| தெலவல விடுதியில் எரிந்துபோன மின்சார ஆளிப் பலகையைப் பதிலீடுசெய்தல் | ஓ/எஸ் புறொஜெக்ற்ஸ் (பிரை) லிமிட் | 518,360.00 |
| மார்ஷல் அலுவலகத் திருத்தமும் புனரமைப்பும் | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 130,735.48 |
| **உப மொத்தம்** | | **136,910.00** |
| **முகாமைத்துவ, நிதிப் பீடம்** | | |
| பிரதான கட்டடக் கிழக்குச் சிறகைப் புதுப்பிக்கும் வேலை | சாம்சன் என்ஜினியர்ஸ் | 3,600,086.75 |
| வாசிப்பு அறையின் புனர் நிர்மாணம் | வேர்க் இன்ஜினியரிங் கம்பனி | 1,048,229.60 |
| டென்னிஸ் கோர்ட்டைச் சீரமைத்தல் | கே. சுப்பிரமணியம் | 29,850.00 |
| **உப மொத்தம்** | | **4,678,166.35** |
| **மருத்துவ பீடம்** | | |
| சட்ட மருத்துவத்தில் அலுமினிய பிரிதடுப்பின் நிருமாணம் | லோச்சனா என்ரபிறைசஸ் | 736,796.40 |
| கேட்போர்கூடத்தினதும் அலுவலகத்தினதும் உட்புற வேலைத் திருத்தங்களும் புதுப்பித்தலும் | லோச்சனா என்ரபிறைசஸ் | 583,840.00 |
| **உப மொத்தம்** | | **1,320,636.40** |
| **விஞ்ஞான பீடம்** | | |
| உத்தேச மூலக்கூற்று உயிரியல் ஆய்வுகூடத்துக்குத் திருத்தங்களும் முன்னேற்றங்களும் | சம்பத் கன்ஸ்றக்ஷன்ஸ் | 1,541,713.50 |
| தாவர விஞ்ஞானங்கள் துறைக்கும் தேர்ஸ்ரன் கல்லூரிக்கு மிடையில் சங்கிலி இணைப்பு வேலியின் நிருமாணம் | உதார லங்கா டெவலப்மன்ற் அன்ட் கன்ஸ்றக்ஷன் கம்பனி | 325,300.00 |
| பௌதிகவியல் துறை, கணினி ஆய்வுகூடம், 1ஆம், 2ஆம் தளங்களுக்கு அலுமினியப் பிரிதடுப்புகள் | லீனஸ் எலெக்றிக்கல்ஸ் | 360,898.36 |
| **உப மொத்தம்** | | **2,227,911.86** |
| **மொத்தம்** | | **13,699,897.34** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி XI

# போக்குவரத்துச் சேவைகள

பல்கலைக்கழகப் போக்குவரத்துச் சேவைகள் பொது நிருவாகத்தால் ஒத்திசைவிக்கப்பட்டன. மீளாய்வாண்டில் போக்குவரத்துச் சேவைகள் பிரிவில் ஒரு சிரேஷ்ட நிருவாக உதவியாளர் மற்றும் பத்தொன்பது (19) சாரதிகள் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் மேற்பார்வையின்கீழ் ஊழியத்துக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

2008 திசெம்பர் முடிவில் கொழும்புப் பல்கலைக்கழகம் முப்பத்தாறு (36) வாகனங்களைக் கொண்டிருந்தது. இவ்வாகனங்கள் வெவ்வேறு பீடங்களுக்கும் துறைகளுக்கும் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

### அட்டவணை XI–01: வாகனங்களின் பகிர்வு - 2008

*(பயன்படுத்துவோர் மற்றும் வாகன இன வாரியாக வகைப்படுத்தப்பட்டது)*

| வாகன இனம் | கொலிஜ் ஹவுஸ் | விஞ்ஞான பீடம் | மருத்துவ பீடம் | பராமரிப்புத் துறை | இயற்கைக் காட்சியமைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| குறூ கப் | 01 | - | - | - | - | 01 |
| கார் | 08 | - | - | - | - | 08 |
| வான் | 04 | - | 05 | - | - | 09 |
| காப் | 02 | - | - | - | - | 02 |
| ஜீப் | 03 | - | - | - | - | 03 |
| பஸ் | 03 | - | - | - | - | 03 |
| முச்சக்கர வண்டி | 02 | - | - | - | - | 02 |
| கை உழவுயந்திரம் | - | - | - | 02 | 01 | 03 |
| மோட்டார் சைக்கிள்[1] | 04 | 01 | - | - | - | 05 |
| **மொத்தம்** | **27** | **01** | **05** | **02** | **01** | **36** |

*1 ஐந்து சைக்கிள்களில் ஒன்று ஸ்ரீ பாளி வளாகத்துக்கு வழங்கப்பட்டது.*

பராமரிப்புச்செலவு (திருத்தங்கள், சேவைப்படுத்தல்கள், அனுமதிப்பத்திரக் கட்டணம், காப்புறுதிக் கொடுப்பனவுகள்) ரூபா 1,577,833.52 மற்றும் எரிபொருட்செலவு ரூபா 1,785,826.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி XII

# உள்ளகக் கணக்காய்வு, நிதி மற்றும் கணக்குகள்

## உள்ளகக் கணக்காய்வு

2008ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு இரண்டு சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள், ஐந்து எழுதுநர்கள் மற்றும் ஓர் அலுவலகத் தொழிலாளி ஆகியோரை உள்ளடக்கிய எட்டு (08) பணியாள் தொகுதி உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுக் குழு மீளாய்வாண்டில் ஏழு தடவைகள் கூடியது. பல்கலைக்கழகத்தின் ஏனைய நிறுவகங்களில் நடத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் பின்வருமாறு (அட்டவணை XII-01):

**அட்டவணை XII-01: கூட்டங்கள்**

| நிறுவகங்களில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் | கூட்டங்கள் |
|---|---|
| மனிதவள முன்னேற்ற நிறுவகம் | 02 |
| சுதேச மருத்துவ நிறுவகம் | 05 |
| மூலக்கூற்று உயிரியல், உயிர் இரசாயனவியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் நிறுவகம் | 03 |
| தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவகம் | 03 |
| மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 04 |

பல்கலைக்கழக சேமலாப நிதி மீளளிப்பு, இளைப்பாற்றுப் பணிக்கொடைக் கொடுப்பனவுகள், சம்பள உயர்வுச் சலுகைகள் வழங்கல், ஓய்வூதியக் கொடுப்பனவு விண்ணப்பங்கள், சம்பள நிலுவைகளின் கொடுப்பனவு என்பவை தொடர்பில் முன்கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## கணக்காய்வு விசாரிப்புகளும் அறிக்கைகளும்

மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு பல்வேறு விசாரிப்புகளை எழுப்பியதுடன் 19 அறிக்கைகளையும் 3 கணக்காய்வு அறிக்கைகளையும் தயாரித்தது. அவை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளருக்கும் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட்டன.

## விசேட பொறுப்புகள்

உள்ளகக் கணக்காய்வு ஸ்ரற் சேர்க்கிள், தாவரவியல் சங்கம், மருத்துவ மாணவர்களின் இந்து சங்கம், கலைப்பீட மாணவர் யூனியன், கல்விப்பீட மாணவர் யூனியன், கிறிஸ்தவ பெலோஷிப் சங்கம், இரசாயனவியல் சங்கம், கவெஷக்காயோ மாணவர் சங்கம், எப்சிலன் டெல்ரா சங்கம், விஞ்ஞானபீட மாணவர் யூனியன் போன்ற கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் மீதான நிதிக் கணக்காய்வுகளை நடத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள்மீதான அறிக்கை

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 31.12.2008இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருடாந்தக் கணக்குக் கூற்று 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 106(1)(2) மற்றும் 107(ஆ) பிரிவுகளின் பிரகாரம் இத்துடன் அனுப்பப்படுகின்றது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 31.12.2008இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானமும் செலவினமும் முறையே ரூ. 1,496,527,934/- மற்றும் ரூ. 1,496,514,752/- ஆகும். 2007ஆம் ஆண்டுக்கான வருமானத்தைவிடக் கூடிய செலவினமான ரூ. 150,434,746/- உடன் ஒப்பிடுகையில், செலவினத்தைவிடக் கூடிய வருமானம் ரூ. 13,182/- ஆகும். இக்கணக்குகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டுக்கும் முந்திய ஆண்டுக்குமான வருமான, செலவினம் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:

| | 2007 (ரூ.) | 2008 (ரூ.) |
|---|---|---|
| அரசாங்க மானியம் | 859,600 | 956,500.00 |
| பிற வருமானம் | 450,700.271 | 540,027,934 |
| மொத்த வருமானம் | **1,310,300,271** | **1,496,527,934** |
| கழிக்க: மொத்தச் செலவினம் | (1,460,735,016) | (1,496,514,752) |
| செலவினத்தின் மீதான வருமான மிகை | **150,434,746** | **13,182** |

2008ஆம் ஆண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், கணக்குகள்மீதான அறிக்கையும் பல்கலைக்கழகச் சட்டத்தின் 109ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ளது.

Kshanika Hirimburegama

**(பேராசிரியர் கிஷானிக்கா ஹிரிம்புறேகம)**
உபவேந்தர்
கொழும்புப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி சார்ந்த விளக்கவுரை – 2008

## 1. அறிக்கையிடும் அமைப்பு

கொழும்புப் பல்கலைக்கழகம் 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. பிரதான நிருவாகம் கொலிஜ் ஹவுஸ், இல. 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 3இல் உள்ளது.

## 2. ஆண்டுக்கான பெறுபேறுகள்

| **வருவாய்** | **2008 (ரூ. மி.)** | | **2007 (ரூ. மி.)** | |
|---|---|---|---|---|
| அரசாங்க மானியம் | 956.50 | | 859.6 | |
| மகாபொலவிலிருந்து மானியம் | 107.16 | | 91.0 | |
| ப.மா.ஆ மானியம் | 34.20 | | 44.8 | |
| உள்ளே உருவாக்கப்பட்ட நிதிகள் | 79.32 | 1,777.18 | 76.0 | 1,071.4 |
| **செலவினம்** | | | | |
| பட்ட மாணவர் கல்வி | 1,007.60 | | 958.7 | |
| மகாபொல மானியம் | 107.16 | | 83.9 | |
| உதவுதொகை ப.மா.ஆ.மானியம் | 31.71 | 1,146.47 | 29.4 | 1,072.0 |
| ஏற்பாடுகளுக்கு முன்னர் மிகை/பற்றாக்குறை | | 30,71 | | (0.60) |

| **மூலதன மானியம்** | **2008** | | **. 2007** | |
|---|---|---|---|---|
| | **ஒதுக்கீடுரூ.மி.** | **கிடைத்தது ரூ.மி.** | **ஒதுக்கீடு ரூ.மி.** | **கிடைத்தது ரூ.மி.** |
| சாதனங்கள் | 79.05 | 51.50 | 90.00 | 62.90 |
| புனரமைப்பு | 41.85 | 37.00 | 64.00 | 46.40 |
| நிருமாணம் | 232.50 | 113.00 | 125.00 | 52.70 |
| | 353.4 | 201.5 | 279.00 | 162.00 |

தொடக்கத்தில் ஒதுக்கப்பட்ட அரசாங்க மானியத்தில் ஒரு குறைப்பு இருந்துள்ள போதிலும், ஆண்டுக்கான நிதிச் செயல்நிறைவேற்றம் திருப்திகரமாயுள்ளது. எவ்வாறாயினும் பல்கலைக்கழகம் 2009ஆம் ஆண்டில் உறுதிச்சீட்டுகள் தீர்க்கப் படுமென்ற எதிர்பார்ப்புடன் அத்தியாவசிய கற்பித்தல் சாதனங்கள், நூல்கள் ஆகியவற்றின் வழங்கலைத் தொடர்ந்ததுடன் திருத்தங்களையும் பராமரிப்பு வேலையையும் கட்டடங்களுக்கான நீடிப்புகளையும் தொடர்ந்தது.

மூலதன மானியப் பெறுகை 2007ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 58% இலிருந்து 57%ஆக வீழ்ச்சியடைந்த அதேவேளையில் மொத்தச் சொத்துக்களில் ஓர் அதிகரிப்பை அது பிரதிபலிக்கின்றது. திறைசேரி நிதிகள் விடுவிக்கப் படுதலை எதிர்பார்த்து உசாத்துணைக்கும் கருத்திட்டங்களுக்கும் கிடைத்த நிதிகள் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகம் 2008ஆம் ஆண்டின்போது உறுதிச்சீட்டு களைத் தீர்க்கக்கூடியதாகக் கடன் வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. காசும் முதலீடுகளும்

பல்கலைக்கழகம் காசு மற்றும் முதலீடுகளின் பட்டியலொன்றைப் பேணுகின்றது. அறக்கொடைகள், புலமைப்பரிசுகள் போன்ற நீண்டகாலப் பெறுகைகள் நிலையான வைப்புகளிலும் தற்காலிக மிகைகள் அழைப்புவைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளன. உசாத்துணைக் கருத்திட்டங்கள் தொடர்பில் அவசர நடவடிக்கைகளின் நிமித்தம் சில கணக்குகளில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கான காசு மீதியைப் பேணுவதற்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

## 4. முடிவுரை

2008ஆம் ஆண்டில் பிரதானமாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாட்டுச் செயல் நிறைவேற்றத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் மருத்துவ பீடத்துக்கு ரூ. 192 மில்லியன் செலவில் 14 மாடிக் கட்டடமொன்றுக்கும் புள்ளிவிவரவியல், கணிதத் துறைக்கு ரூ. 28 மில்லியன் செலவில் கணினி ஆய்வுகூடத்துக்கும் பதிகாலிடும் வேலையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பல்கலைக்கழகம் அரசாங்க மானியத்தின்கீழ் போதிய நிதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தபோதிலும், இயன்மருத்துவம், மூலக்கூற்று உயிரியல், உயிர் இரசாயனவியல் மற்றும் கைத்தொழில் கணிதம் ஆகியவற்றில் 2008ஆம் ஆண்டில் புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தது.

நிதிக் கட்டுப்பாடுகளின் மத்தியிலும் பல்கலைக்கழகம் பிரதானமாக ஆராய்ச்சி மற்றும் உசாத்துணைக் கருத்திட்டங்களிலிருந்து பெற்ற உதவுதொகைகள் உயர்வாக இருந்ததனால் 2008ஆம் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்தக்கூடுமாயிருந்தது. பல்கலைக்கழகம் சம்பளங்கள், வழங்கல்கள் மற்றும் பயன்பாடுகள் தவிர, தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் திறைசேரி நிதிகளில் தங்கியிருத்தலைத் தொடர்ந்தும் குறைத்துள்ளது. இது உசாத்துணைச் சேவைகளை ஊக்குவித்தல் மற்றும் பட்டப்பின் கல்விநெறிகளிலிருந்து உழைக்கும் ஆற்றலை அதிகரித்தல் ஆகியவற்றின்மூலம் வெளிவாரி வருமானத்தை உருவாக்குவதன்மூலம் செய்யப்பட்டது.

கே.எஸ்.ரி. சுவர்ணலதா ஜயசூரிய
நிதியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

கொழும்புப் பல்கலைக்கழகம்

## 1.1 அறிக்கையிடும் அமைப்பு

கொழும்புப் பல்கலைக்கழகம் 1978இன் 16ஆம் இலக்கப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான நிருவாகம் கொலிஜ் ஹவுஸ், இல. 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பில் உள்ளது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் 2008 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 1.2 தயாரிப்புக்கான அடிப்படை

### 1.2.1 இணக்கக்கூற்று

நிதிக் கூற்றுகள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLAS), 1978இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தினதும் 2002இன் பொது நிதிச் சுற்றறிக்கை PF/PE 21இனதும் தேவைப்பாடு களுக்கும் இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.2.2 அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுகள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளன.

### 1.2.3 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பீட்டு அடிப்படையும் காணியும் கட்டடங்களும் ஏனைய சொத்துக்களும்

நிலையான சொத்துக்கள் திரண்ட தேய்மானம் கழித்த கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன. சொத்துக்களின் கிரயத்தை அவற்றின் மதிப்பிடப் பட்ட பயனுள்ள ஆயுள்காலத்தில் பதிவழிக்கக்கூடியதாகத் தேய்மானம் பின்வரும் ஆண்டொன்றுக்கான வீதங்களில் கழித் தெழுதிய பெறுமதியில் வருமானக்கூற்றில் அறவிடப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 5% |
| தளபாடம், உபகரணம் | 10% |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணம் | 20% |
| பொருத்திகளும் இணைப்புகளும் | 10% |
| நூலகப் புத்தகங்களும் பருவ இதழ்களும் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| மேலங்கிகள் | 20% |
| ஏனைய சொத்துக்கள் | 10% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.3.1 தேய்மானம்

தேய்மானம் இறையிலிக் காணிகள் தவிர ஏனையவற்றுக்கு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்காலத்தில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஒரு சொத்தின் தேய்மானம் சொத்து பயன்பாட்டுக்குக் கிடைக்கின்றபோது ஆரம்பமாகின்றது.

### 1.3.2 கடன்தீர்த்தல்

கடன்தீர்த்தல் சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் காலத்தின் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

### 1.3.3 அரசாங்க மானியம்

இவ்வாண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த மூலதன மானியம் ரூ. 201.5 மில்லியன். இது பின்வருமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது:

| | ரூ. (மி.) |
|---|---|
| கட்டடங்களின் நிர்மாணம் | 113.0 |
| புத்தகங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், தளபாடம், பொருத்திகளின் கொள்வனவு | 51.5 |
| கட்டடங்களின் புனரமைப்பு | 37.0 |

தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மானியங்கள், தொடர்புடைய சொத்தின் பயனுள்ள ஆயுள்காலத்தின்மீது ஒழுங்கு முறையான ஓர் அடிப்படையில் வருமானக்கூற்றில் வருவாயாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.3.4 வருவாயை அங்கீகரித்தல்

அரசாங்க மீண்டுவரும் மானியங்கள் அவை கிடைக்கப்பெறும் காலப் பகுதியில் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. மாணவர் பதிவுக் கட்டணங்கள் அவை கிடைப்பதன்பேரில் மட்டும் வருவாயாக ஒப்புக்கொள்ளப் படுகின்றன. வட்டி வருமானத்துக்கு அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுகின்றது.

கொழும்புப் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதி தொடர்பான முதலீடு களிலிருந்து வட்டியாக ரூ. 5,487,591/- கிடைக்கப்பெற்றது. அது நிதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி மானியங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் வழங்கப்பட்ட வேறு சேவைகளிலிருந்து வருமானம் இ.க.நி. 29ஐப் பின்பற்றி சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது சேவை பூர்த்தியான அளவுக்கு உள்ளடக்கப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.3.5 செலவுகளை அங்கீகரித்தல்

மீளாய்வாண்டுக்கான ரூ. 13,182/- மிகைக்கு வருவதில் பட்ட மாணவர் கல்வி தொடர்பில் உறப்பட்ட செலவுகள் எல்லாம் அரசாங்க மீண்டுவரும் மானியத்தில் அறவிடப்பட்டுள்ளன.

### 1.3.6 வருமதிகள்

31.12.2008இல் இருந்தவாறு ஒப்பந்தங்களின் மீறல் தொடர்பில் ஊழியர்களிடமிருந்து ரூ. 36,756,991.31 வருமதியாயுள்ளது.

### 1.3.7 ஊழியர்களுக்கு இளைப்பாற்று நன்மைகள்

எல்லா ஊழியர்களுக்கும் பணிக்கொடைக்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இப்பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியிடப்படவில்லை.

### 1.3.8 பட்டோலைகள்

களஞ்சிய முற்பணக் கணக்கு பட்டோலைகளின் கிரயத்தைக் குறிக்கின்றது. அவை முதலில் வந்தது முதலில் போகும் முறையின் அடிப்படையில் விலைமதிக்கப்பட்டுள்ளன.

### 1.3.9 எதிர்பாராப் பொறுப்புகள்

வழக்காடலிலிருந்தெழுகின்ற பொறுப்புகள் தொடர்பில் கணக்குகளில் ஏற்பாடெதுவும் செய்யப்படவில்லை. 2008 திசெம்பர் 31இல் இருந்தவாறு பொறுப்புகளின் மொத்த மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 3.5 மில்லியனாகும்.

### 1.3.10 வரிவிதிப்பு

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் ஈட்டல்கள் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. எனினும் உள்ளகரீதியாக உருவாக்கப்பட்ட வருமானத்துக்கு பொருளாதாரச் சேவை வரி செலுத்தப்படுகின்றது. இது பிற மீண்டுவருஞ் செலவினத்தின்கீழ் உள்ளடக்கப்படுகின்றது.

### 1.3.11 திரவ நிதிநிலை

| | |
|---|---|
| காசு மீதியும் வங்கி மீதியும் | 40,773,603.00 |
| **தேறிய திரவ நிதி** | **40,773,603.00** |
| இருப்புகள் | 6,728,898.00 |
| கடன்பெற்றோர் | 51,151,407.00 |
| கடன்தந்தோர் | 50,764,987.00 |
| **தொழிற்படு மூலதனம்** | **47,888,921.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.3.12 நடப்புச் சொத்துக்கள்

ஐந்தொகையில் நடப்புச் சொத்துக்கள் என்று வகைப்படுத்தப்பட்டவை ஐந்தொகைத் தேதியின் பின்னர் ஓராண்டினுள் மீட்கப்படக்கூடியவை.

### 1.3.13 நடப்புப் பொறுப்புகள்

ஐந்தொகையில் நடப்புப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டவை ஐந்தொகைத் தேதியிலிருந்து ஓராண்டினுள் செலுத்தப்பட வேண்டியவை. நிதிக்கூற்றைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லாப் பொறுப்புகளும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

### 1.3.14 ஆதனம், பொறித்தொகுதி, சாதனம்

ஆதனம், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் என்பவை அரசாங்க மானியம், ஆராய்ச்சி மானியங்கள், உள்ளகரீதியாக உருவாக்கப்பட்ட நிதிகள் ஆகியவற்றிலிருந்து கொள்வனவு செய்யப் பட்ட இனங்களை உள்ளடக்குகின்றன. அவை திரண்ட தேய்மானம் கழித்த கிரயத்தில் அளக்கப்படுகின்றன.

### 1.3.15 அந்நிய நாணயங்கள்

அந்நிய நாணயங்களில் பெயரிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அக் கொடுக்கல் வாங்கல் தேதியில் நிலவும் செலாவணி வீதத்தில் பதியப்படுகின்றன. அந்நிய நாணயங்களிலுள்ள வங்கி மீதிகள் ஐந்தொகைத் தேதியன்று நிலவும் செலாவணி வீதத்தில் பெயர்க்கப் படுகின்றன. எல்லா வேறுபாடுகளும் வரவு செலவுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### 1.3.16 காசுப்பாய்வுக் கூற்று

காசுப்பாய்வுக் கூற்று நேரில் முறையைப் பயன்படுத்தித் தயாரிக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பல்கலைக்கழகம்

## 2008 திசெம்பர் 31இல் இருந்தவாறு ஐந்தொகை

| | குறிப்பு | 2008 (ரூ.) | | 2007 (ரூ.) | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடப்பிலற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் | 02 | | 1,081,307,711 | | 1,163,502,365 |
| நடைபெறும் வேலை | 03 | | 273,630,468 | | 114,163,730 |
| முதலீடுகள் | 04 | | 508,743,504 | | 445,384,180 |
| **ஏனைய நடப்பிலற்ற சொத்துக்கள்** | | | | | |
| சில்லறைக் கடன்பெற்றோர் | 05 | 4,237,273 | | 4,016,657 | |
| பணியாளருக்குக் கடன்களும் முற்பணமும் | 06 | 116,054,485 | | 74,713,310 | |
| வழங்கல்கள், சேவைகளுக்கு முற்பணம் | 07 | 76,315 | | 17,315 | |
| பிற பல்.கழகங்களிலிருந்து வருமதி | 09 | 369,649 | 120,737,723 | 579,101 | 79,326,383 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | | | |
| பட்டோலைகளும் இருப்புகளும் | | 6,728,898 | | 5,429,911 | |
| சில்லறைக் கடன்பெற்றோர் | 05 | 25,618,090 | | 26,304,780 | |
| வழங்கல்கள், சேவைகளுக்கு முற்பணம் | 07 | 17,943,678 | | 176,158,308 | |
| நானாவித முற்பணங்கள் | 08 | 4,279,926 | | 3,207,827 | |
| பிற பல்.கழகங்களிலிருந்து வருமதி | 09 | 2,989,493 | | 1,018,198 | |
| முற்கொடுப்பனவுகள் | | 320,220 | | 1,027,731 | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 10 | 40,773,603 | 98,653,908 | 31,883,587 | 85,030,342 |
| | | | **2,083,073,314** | | **1,887,407,000** |
| **உரிமைப்பங்கும் பொறுப்புகளும் - மூலதனம்** | | | | | |
| செலவிட்ட மூலதன மானியம் | 11 | 1,530,874,786 | | 1,457,872,969 | |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 12 | 24,118,444 | | 48,368,603 | |
| கொடைகளும் நன்கொடைகளும் | 13 | 51,075,521 | 1,606,068,751 | 49,562,943 | 1,555,804,514 |
| **திரண்ட நிதி** | | | | | |
| பொது ஒதுக்கம் | | 18,958,102 | | 18,958,102 | |
| வரவு செலவுக் கணக்கு | | (656,817,160) | (637,859,058) | (647,800,112) | (655,842,010) |
| **ஒதுக்கங்களும் வரையறுக்கப்பட்ட நிதிகளும்** | | | | | |
| குறிப்பான ஒதுக்கங்கள் | 14 | 283,587,900 | | 239,675,191 | |
| அறக்கொடை நிதி | | 51,649,778 | | 45,004,824 | |
| ஆராய்ச்சி மானியங்கள் | | 132,524,859 | | 120,013,394 | |
| நிரப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 261,492,428 | | 209,585,092 | |
| கொடைகளும் நன்கொடைகளும் | | 30,214 | | 30,214 | |
| ஏனையவை | 15 | 13,957,121 | 743,242,300 | 3,426,679 | 617,735,394 |
| **நடப்பிலற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| பணிக்கொடைக்கு ஏற்பாடு | | 307,350,755 | 307,350,755 | 305,956,485 | 305,956,485 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நடப்பிலற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| சென்மதிக் கணக்குகள் | 16 | 8,161,302 | | 1,028,870 | |
| மீளளிப்பு வைப்புக்கள் | 17 | 2,018,118 | 10,179,419 | 8,250,726 | 9,279,596 |
| **நடப்புப் பொறுப்புக்கள்** | | | | | |
| சென்மதிக் கணக்குகள் | 16 | 17,173,648 | | 20,437,275 | |
| அட்டுறு செலவுகள் | | 25,821,061 | | 29,436,980 | |
| மீளளிப்பு வைப்புக்கள் | 17 | 11,096,437 | 54,091,146 | 4,598,766 | 54,473,021 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | | **2,083,073,314** | | **1,887,407,000** |

நிதியாளரால் தயாரிக்கப்பட்டுச் சான்றுப்படுத்தப்பட்டது.

..........................................................................
கே.எஸ்.ரி. சுவர்ணலதா ஜயசூரிய

**பேரவைக்காகவும் அதன் சார்பாகவும்**

..........................................................
பேராசிரியர் கிஷானிக்கா ஹிரிம்புரேகம
உபவேந்தர்

..........................................................
டி.பீ.எல்.ஜே. நாணாயக்கார
பதில் பதிவாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பல்கலைக்கழகம்

## 2008 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று

(தொகைகள் கிட்டிய ரூபாவுக்குச் சீராக்கப்பட்டவை)

| | | குறிப்பு | 2008 (ரூ.) | | 2007 (ரூ.) | |
|---|---|---|---|---|---|---|
| | **வருவாய்** | | | | | |
| 01 | அரசாங்க மானியம் | | | | | |
| | அ) மீண்டுவரும் செலவினத்துக்கு அரச மானியம் | | 956,500.00 | | 859,600,000 | |
| | ஆ) மூலதனச் சொத்துக்களின் புனரமைப்புக்கும் பராமரிப்புக்கும் அரசாங்க மானியம் | | 12,841,848 | | 24,020,162 | |
| | இ) மூலதன மானியக் கடன்தீர்ப்பு | | 164,803,138 | | 16,873,087 | |
| | ஈ) ஐ.ரி. மானியக் கடன்தீர்ப்பு | | 2,642 | | 1,195,276 | |
| | உ) உதவுதொகைக்கான மானியம் | | 15,858,800 | | 14,289,000 | |
| | ஊ) மகாபொலவுக்கான மானியம் (i) ப.மா.ஆ. | | 18,355,350 | | 15,919,720 | |
| | ii) மகாபொல நம்பிக்கைநிதிய ஆக்கக்கூறு (வருமானம்) | | 107,167,100 | | 91,056,750 | |
| | எ) சம்பள நிலுவைகளுக்கு ப.மா.ஆ. மானியம் | | - | 1,275,528,877 | 14,574,000 | 1,037,527,996 |
| 02 | பதிவுக் கட்டணம் (பட்ட மாணவர்) | | 2,217,440 | | 2,086,606 | |
| 03 | பதிவுக் கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்) | | 481,000 | | 1,197,171 | |
| 04 | போதனைக் கட்டணம் (பட்ட மாணவர்) | | 9,285,576 | | 7,688,971 | |
| 05 | போதனைக் கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்) | | 372,000 | | 5,209,050 | |
| 06 | பரீட்சைக் கட்டணம் (பட்ட மாணவர்) | | 115,970 | | 120,470 | |
| 07 | பரீட்சைக் கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்) | | 110,475 | | 891,700 | |
| 08 | வெளிவாரிப் பரீட்சைகள் | | - | | 172,860 | |
| 09 | கடன்கள், முற்பணங்களிலிருந்து வட்டி | | 3,221,054 | | 2,962,239 | |
| 10 | முதலீடுகளிலிருந்து வட்டி | | 48,863,690 | | 34,005,470 | |
| 11 | வெளியீடுகளின் விற்பனை | | 36,600 | | 5,960 | |
| 12 | பழைய இருப்புகளின் / கழித்தவற்றின் விற்பனை | | - | | 44,032 | |
| 13 | ஆதனங்களிலிருந்து வாடகை | | 804,022 | | 1,365,207 | |
| 14 | மருத்துவக் கட்டணம் | | 329,100 | | 242,020 | |
| 15 | நூலகத் தண்டங்கள் | | 629,667 | | 602,433 | |
| 16 | துணை நடவடிக்கைகள் | | 2,905,300 | | 2,195,315 | |
| 17 | நானாவித பெறுகைகள் | | 5,674,987 | | 8,501,537 | |
| 18 | செலாவணி ஆதாயம் | | 306,438 | | 87,235 | |
| 19 | வெளியாருக்கு வழங்கிய சேவைகள் | | 403,548 | | 2,348,961 | |
| 20 | ஒப்பந்த மீறலிலிருந்து வருமானம் | | 3,426,351 | | 5,533,690 | |
| 21 | கொடைகள், நன்கொடைகளிலிருந்து வருமானம் | | 140,299 | | 817,782 | |
| 22 | நீடிப்புக் கல்விநெறிகளிலிருந்து வருமானம் | | 90,688,621 | | 82,511,282 | |
| 23 | ஆராய்ச்சி மானியங்களிலிருந்து வருமானம் | | 49,754,752 | | 113,276,388 | |
| 24 | அறக்கொடைகளிலிருந்து பெறுகைகள் | | 1,232,166 | 220,999,056 | 905,897 | 272,772,275 |
| | | | | 1,496,527,934 | | 1,310,300,271 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | 2007 (ரூ.) | | 2006 (ரூ.) | |
|---|---|---|---|---|---|
| **செலவினம்** | | | | | |
| **ஆளணி ஊதியங்கள்** | | | | | |
| சம்பளங்கள், கூலிகள் | | 503,163,769 | | 499,025,383 | |
| ப.சே.நி. / ஊ.ந.நி. / ஓய்வூதியம் | | 99,477,459 | | 98,741,291 | |
| படிகள் | | 116,720,292 | | 116,956,495 | |
| மேலதிகநேர/விடுமுறைக் கொடுப்பனவுகள் | | 24,249,886 | | 19,581,800 | |
| பிரயாணம் | | 4,725,176 | | 2,926,091 | |
| வழங்கல்கள் | | 48,457,757 | | 39,922,040 | |
| சொத்துக்களின் பராமரிப்பு | | 15,158,491 | | 12,088,800 | |
| ஒப்பந்தச் சேவைகள் | | 160,201,792 | | 135,477,779 | |
| ஏனையவை | | 35,444,896 | | 33,899,760 | |
| (i) மகாபொல புலமைப்பரிசு-ப.மா.ஆ. | | 17,528,500 | | 16,442,050 | |
| (ii) மகாபொல நம்பிக்கை நிதி ஆக்கக்கூறு (செலவு) | | 107,167,100 | | 83,905,450 | |
| கல்வி உதவுதொகை | | 14,189,022 | | 12,978,791 | |
| தேய்மானம் | | 166,239,874 | | 157,107,280 | |
| பணிக்கொடைக்கு ஏற்பாடு | | 29,114,862 | | 10,968,278 | |
| நிரப்புக் கல்விநெறிகள்மீதான செலவினம் | | 90,688,621 | | 82,511,282 | |
| ஆராய்ச்சி மானியங்கள்மீதான செலவினம் | | 49,754,752 | | 113,276,388 | |
| அறக்கொடைகளும் புலமைப்பரிசுகளும் | | 1,232,166 | | 905,897 | |
| கழித்தவற்றின் விற்பனை இலாப/நட்டக் கணக்கு | | 158,490 | | - | |
| கட்டடம் (மீண்டுவரும்) (புனரமைப்பு) | | 12,841,848 | | 24,020,162 | **1,460,735,016** |
| **வருமானத்திலும் கூடிய செலவின மிகை** | | | **13,182** | | **(150,434,746)** |
| **வரவு செலவு ஒதுக்கீட்டுக் கணக்கு** | | | | | |
| வரவு செலவுக் கணக்கு மீதி | | | 13,182 | | (150,434,746) |
| கடந்த ஆண்டுகள் தொடர்பில் சீராக்கங்கள் | | | 17,969,771 | | (20,319,909) |
| வரவு செலவுக் கணக்கிலிருந்து மு/கொ மீதி | | | (674,800,113) | | (504,045,458) |
| இந்தொகைக்கு எ/செ மீதி | | | **(656,817,160)** | | **(674,800,113)** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வுகள்** | | |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மிகை | | 13,182 |
| **காசல்லாத அசைவுகள்** | | |
| சாதனங்களின் விற்பனைமீது நட்டம் | 158,490 | |
| தேய்மானம் | 166,239,874 | |
| பணிக்கொடைக்கு ஏற்பாடு | 29,114,862 | |
| வட்டி வருமானம் | (52,084,744) | |
| முன்னைய ஆண்டுச் சீராக்கல்கள் | 20,566,502 | 163,994,984 |
| தொழிற்படுமூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்பாட்டு மிகை | | 164,008,166 |
| களஞ்சியங்கள், பட்டோலைகளில் அதிகரிப்பு | (1,298,987) | |
| ஏனைய வருமதிகளில் அதிகரிப்பு | (44,845,903) | |
| சென்மதிகளில் அதிகரிப்பு | 517,948 | (45,626,942) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | 118,381,224 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வுகள்** | | |
| விற்பனையிலிருந்து வருவாய் | 224,978 | |
| நிலையான சொத்துக்களின் கையேற்பு | (87,025,419) | |
| நடைபெறும் வேலை | (159,466,738) | |
| முதலீடுகளில் அதிகரிப்பு | (63,359,324) | |
| முதலீடுகளிலிருந்து வட்டி | 52,084,744 | (257,541,759) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வுகள்** | | (139,160,535) |
| மூலதனச் செலவினத்துக்கு அரசாங்க மானியம் | 50,264,237 | |
| தேறிய உள்ளக நிதிப் பெறுகைகள் | 125,506,906 | |
| பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | (27,720,592) | 148,050,551 |
| **காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு** | | 8,890,016 |
| காலத்தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | | 31,883,587 |
| காலமுடிவில் காசும் காசுக்குச் சமமானவையும் | | 40,773,603 |
| காசிலும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு | | 8,890,016 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புப் பல்கலைக்கழகம்

## 2008.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிகளில் மாற்றங்கள் பற்றிய கூற்று

| | திரண்ட நிதி | ஒதுக்கங்களும், வரையறுத்த நிதியும் | செலவிட்ட மூலதன மானியம் | செலவிடப்படாத மூலதன மானியம் | கொடைகள், நன்கொடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **2007 திசெம்பர் 31இல் மீதி** | **(655,842,010)** | **617,735,394** | **1,457,872,969** | **48,368,603** | **49,562,943** | **1,517,697,898** |
| ஆண்டில் செலவிட்ட, செலவிடாத மூலதன மானியம் | - | - | 73,001,818 | (24,250,159) | - | 48,751,659 |
| குறிப்பான உள்ளக நிதிகளில் அதிகரிப்பு | - | 125,506,906 | - | - | - | 125,506,906 |
| நன்கொடைகளின் கடன்தீர்த்தல் | - | - | - | - | 1,512,578 | 1,512,578 |
| காலத்துக்கான மிகை/(பற்றாக்குறை) | 17,982,952 | - | - | - | - | 17,982,952 |
| **2008 திசெம்பர் 31இல் மீதி** | **(637,859,058)** | **743,242,300** | **1,530,874,786** | **24,118,444** | **51,075,521** | **1,711,451,994** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. நடப்பிலற்ற சொத்துக்கள்மீது தேய்மானம்

| தேய்மானம் | காணிகள் | கட்டடம் | தளபாடம், அலுவலக சாதனம் | நூலகம், நூல்கள் பருவ இதழ்கள் | மோட்டார் வாகனங்கள் | மேலங்கிகள் | ஆய்வுகூட கற்பித்தல் சாதனங்கள் | தளபாடம், சாதனங்கள் (விடுதிகள், புதிய கட்டடம்) | ஏனைய சொத்துகள் | பொருத்திகள், துணைக் கருவிகள் | புதிய தொலைபேசி முறைமைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 11A | 11B | 11C | 11D | 11E | 11F | 11G | 11H | 11 I | 11J | 11K | |
| 01.01.2008இல் மீதி | 3,155,049 | 1,318,709,543 | 614,855,661 | 219,895,262 | 43,720,849 | 1,786,400 | 264,752,878 | 1,354,924 | 181,296 | 5,905,540 | 8,585,563 | 2,482,902,964 |
| தொடக்க மீதிக்குச் சீராக்கல் | - | (510) | (850) | (2,444,663) | - | - | (26,813) | - | - | - | - | (2,472,836) |
| | | | | | | | | | | | | 2,480,430,128 |
| ஆண்டில் சேர்த்தவையும் முன்னேற்றியவையும் | - | 12,568,353 | 40,677,836 | 18,995,239 | - | - | 14,687,867 | - | - | 96,125 | - | 87,025,419 |
| ஆண்டில் விற்றுத்தீர்த்தவை | - | - | (1,166,962) | - | - | - | - | - | - | - | - | (1,166,962) |
| மொத்தம் | 3,155,049 | 1,331,277,386 | 654,365,685 | 236,445,838 | 43,720,849 | 1,786,400 | 279,413,932 | 1,354,924 | 181,296 | 6,001,664 | 8,585,563 | 2,566,288,585 |
| **தேய்மானத்துக்கு ஏற்பாடு** | | | | | | | | | | | | |
| தேய்மான வீதம் | - | 5% | 10% | 20% | 20% | 20% | 20% | 10% | 10% | 10% | 10% | - |
| 01.01.2008 இல் மீதி | - | 633,351,059 | 319,546,772 | 170,642,040 | 29,380,789 | 1,786,400 | 151,231,998 | 1,354,924 | 128,916 | 3,443,008 | 8,534,694 | 1,319,400,601 |
| தொடக்க மீதிக்குச் சீராக்கல் | - | - | - | (32,974) | - | - | - | - | - | - | - | (32,974) |
| | | | | 156,869 | | | | | | | | 156,869 |
| 01.01.2008இல் சீராக்கப்பட்ட மீதி | | 633,351,059 | 319,546,772 | 170,765,935 | 29,380,789 | 1,786,400 | 151,231,998 | 1,354,924 | 128,916 | 3,443,008 | 8,534,694 | 1,319,524,495 |
| தேய்மானம் | - | 64,120,616 | 48,987,546 | 16,911,727 | 2,886,200 | - | 32,811,422 | - | 6,432 | 498,279 | 17,653 | 166,239,874 |
| கழி: விற்ற சொத்துக்கள்மீது தேய்மானம் | - | - | (783,494) | - | - | - | - | - | - | - | - | (783,494) |
| 31.12.2008 இல் மீதி | - | 697,471,675 | 367,750,824 | 187,677,662 | 32,266,989 | 1,786,400 | 184,043,420 | 1,354,924 | 135,349 | 3,941,287 | 8,552,347 | 1,484,980,874 |
| 31.12.2008இல் தேறிய மீதி | 3,155,049 | 633,805,711 | 286,614,862 | 48,768,176 | 11,453,860 | - | 95,370,512 | - | 45,948 | 2,060,377 | 33,216 | 1,081,307,711 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 03. நடைபெறும் வேலை | 2008 (ரூ.) | 2007 (ரூ.) |
|---|---|---|
| விஞ்ஞான பீடக் கட்டடம் | 8,997,439 | 8,811,439 |
| மருத்துவ பீடப் பிணிஆய்வு விரிவுரை அரங்கம் | 64,788,842 | 26,923,375 |
| முன்பிணி ஆய்வுக் கட்டடம் | 65,423,862 | 29,330,953 |
| டி சேரம் பெண்கள் விடுதி | 108,232,069 | 39,557,166 |
| கணித, புள்ளிவிவரவியல் கட்டடம் | 25,963,704 | 9,316,245 |
| முத்தையா விடுதி | 224,552 | 224,552 |
| | 273,630,468 | 114,163,730 |

| 04. முதலீடு | 2008 (ரூ.) | 2007 (ரூ.) |
|---|---|---|
| காப்பு வைப்புக்கள் | 97,104 | 102,104 |
| விசேட மானியங்கள், அறக்கொடை | 82,241,528 | 55,672,510 |
| அறக்கொடை நிதி | 43,833,267 | 40,526,331 |
| ஒப்பந்த மீறல் | 264,000 | 264,000 |
| மருத்துவ பீடம் | 33,031 | 33,031 |
| சர்வதேச சட்டம் பற்றிய இலங்கைக் குறிப்பேடு | 1,720,209 | 90,000 |
| ஆராய்ச்சியும் வெளியீடுகளும் | 45,436 | 45,436 |
| அறுவை மருத்துவத் துறை | 1,000,000 | 800,000 |
| மாணவர் இடர் நிவாரண நிதி | 200,000 | 200,000 |
| பத்திரிகை எழுத்தாண்மை அலகு | 100,000 | 100,000 |
| டபிள்யு.பீ.டபிள்யு. பெரேரா | 35,605 | 31,564 |
| உசாத்துணைக் கருத்திட்டங்கள் | 1,506,524 | 31,506,524 |
| விளையாட்டு ஊக்குவிப்பு நிதி | 981,984 | 858,631 |
| ஆராய்ச்சி மானியங்கள் | 376,158,542 | 315,064,756 |
| புளொட் பாதுகாப்புச் சேவை | 526,273 | 89,293 |
| | 508,743,504 | 445,384,180 |

| 05. சில்லறைக் கடன்பெற்றோர் | நடப்பு | நடப்பிலற்ற | 2008 (ரூ.) | 2007 (ரூ.) |
|---|---|---|---|---|
| தேசிய பாதுகாப்பு நிதி | - | 6,000 | 6,000 | 6,000 |
| சில்லறைக் கடன்பெற்றோர் | - | 60,033 | 60,033 | 60,033 |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 2,132,087 | 4,171,240 | 6,303,327 | 4,171,240 |
| வருமதியான வட்டி | 14,874,997 | - | 14,874,997 | 16,698,364 |
| பமாஆ'விலிருந்து மகாபொல, உதவுதொகைக்கு வருமதி | 6,654,800 | - | - | - |
| FM இலிருந்து வருமதியான பணம் | 246,852 | - | - | - |
| IRQUE இலிருந்து வருமதியான பணம் | 23,662 | - | - | - |
| வெளிநாட்டு வழங்கல்கள் தொங்கல் கணக்கு | 1,685,692 | - | 1,685,692 | - |
| | 25,618,090 | 4,237,273 | 29,855,363 | 30,321,437 |

| 06. பணியாளருக்குக் கடன்களும் முற்பணங்களும் | 2008 (ரூ.) | 2007 (ரூ.) |
|---|---|---|
| சம்பள முற்பணம் | 1,446,124 | 1,935,768 |
| பெருநாள் முற்பணம் | 712,860 | 750,922 |
| விசேட கடன் | 600 | 600 |
| பணியாளர் கடன் | 1,948,767 | 1,905,512 |
| இடருதவிக் கடன் | 99,455,421 | 66,074,339 |
| போக்குவரவுக் கடன் | 5,945,913 | 5,214,889 |
| விசேட முற்பணம் | 586,494 | 1,086,197 |
| கணினிக் கடன் | 5,212,753 | 5,147,382 |
| வெள்ள நிவாரண முற்பணம் | - | 500 |
| சுனாமி விசேட கடன் | 104,946 | 168,462 |
| கழி: சேமலாபநிதிக் கடன் (பமாஆ'இடமிருந்து பெறுகை) | 640,608 | (7,560,691) |
| | 116,054,485 | 74,723,880 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 07. வழங்கல்களுக்கு முற்பணம்

| | நடப்பு | நடப்பிலற்ற | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|---|---|
| மூலதன வழங்கல்களுக்கு முற்பணம் | 619,653 | - | 619,653 | 126,998 |
| நூலகப் புத்தகங்களுக்கு முற்பணம் | 17,324,025 | - | 17,324,025 | 15,968,391 |
| புத்தக முற்பணக் கணக்கு | - | 17,315 | 17,315 | 17,315 |
| நுகர்வு வழங்கல்களுக்கு முற்பணம் | - | 59,000 | 59,000 | 62,919 |
| | 17,943,678 | 76,315 | 18,019,993 | 16,175,623 |

### 08. நானாவித முற்பணம்

| | நடப்பு | நடப்பிலற்ற | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|---|---|
| ஆராய்ச்சி முற்பணக் கணக்கு | 436,495 | - | 436,495 | 422,763 |
| சில்லறை முற்பணக் கணக்கு | 3,843,431 | - | 3,843,431 | 2,785,064 |
| | 4,279,926 | - | 4,279,926 | 3,207,827 |

### 09. பிற பல்கலைக்கழகங்களிலிருந்து வருமதியான பணம்

| | நடப்பு | நடப்பிலற்ற | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|---|---|
| பேராதனைப் பல்கலைக்கழகம் | - | 275,494 | 275,494 | 275,494 |
| ப.மா.ஆ. கணக்கு | 993,571 | - | 993,571 | 1,077,800 |
| சு.ம.நி. (I.I.M.) | - | 91,654 | 91,654 | 91,654 |
| ப.க.பீ. (F.G.S.) | 68,154 | - | 68,154 | - |
| என்.ஏ.யு. (N.A.U.) | 1,925,742 | - | 1,925,742 | - |
| கவின்கலைக் கற்றை நிறுவகம் | - | 2,501 | 2,501 | 2,501 |
| என்.ஐ.எல்.ஐ.எஸ்.N.I.L.I.S. | - | - | - | 546 |
| IRQUE கருத்திட்டம் / LTS | - | - | - | 21,821 |
| வங்கி வழு | 2,025 | - | 2,025 | - |
| சுனாமி அனர்த்த நிதிக்கு வருமதி | - | - | - | 127,483 |
| | 2,989,493 | 369,649 | 3,359,142 | 1,597,300 |

### 10. காசும் காசுக்குச் சமமானவையும்

| | 2008 (ரு.) | | 2007 (ரு.) | |
|---|---|---|---|---|
| இடைப்போக்கிலுள்ள காசு | - | | 10,000,150 | |
| சில்லறைக் காசுக் கட்டுநிதி | 68,998 | | 123,387 | |
| **திறைசேரி நிதிகள்** | | | | |
| காசுப்புத்தக மீதி - 1004-100-1802-10864 | 1,313,844 | | 554,055 | |
| காசுப்புத்தக மீதி - 086-100-1711-89650 | 1,065,254 | | (10,437,549) | |
| காசுப்புத்தக மீதி - 086-100-1911-89654 | 12,480,673 | | (1,192,766) | |
| காசுப்புத்தக மீதி - 167-1001-9317-0314 | 97,477 | | 2,851,428 | |
| காசுப்புத்தக மீதி - 071997-2 | 171,666 | | 51,184 | |
| காசுப்புத்தக மீதி - 071997-3 | 729,562 | 15,927,473 | 259,366 | 2,209,255 |
| **திறைசேரி சாராத நிதிகள்** | | | | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1811-89659 | 1,581,354 | | 463,723 | |
| காசுப் புத்தக மீதி - 167-1001-13170313 | 472,814 | | 2,616,529 | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1611-89660 | 4,145,269 | | 5,300,699 | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1411-89661 | 3,104,534 | | 1,194,857 | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1311-89666 | 68,544 | | 990,194 | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1311-91768 | 49,569 | | 3,681,069 | |
| காசுப் புத்தக மீதி - 1-65-003312-1 | 1,443,412 | | 1,450,624 | |
| காசுப் புத்தக மீதி - RFC/SA/USS/90/100 | 9,782,095 | | 8,660,589 | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1711-89688 | 290,861 | | 3,359,206 | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1111-89691 | 1,154,821 | | 1,405,116 | |
| காசுப் புத்தக மீதி - 086-100-1211-89662 | 158,000 | | - | |
| காசுப் புத்தக மீதி -0008049142 | 2,008,330 | | - | |
| சேகரிப்புக் கணக்கு – ஸ்ரீ பாளி | 34,800 | | - | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| காசுப் புத்தக மீதி - 086-100-1919-88434 | 549,227 | | 549,227 | |
| காசுப் புத்தக மீதி - 0000719939 | 2,500 | 24,846,130 | 2,500 | 29,674,333 |
| | | **40,773,603** | | **31,883,587** |

**11. செலவிட்ட மூலதன மானியம்**

| | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|
| மூலதனக் கணக்கு | 1,287,211,363 | 1,214,431,705 |
| IT மானியம் | 56,306,648 | 56,084,487 |
| SIDA- மென் கடன் | 187,356,776 | 187,356,776 |
| | **1,530,874,786** | **1,457,872,969** |

**12. செலவிடாத மூலதன மானியம்**

| | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|
| அரச மானியம் - கருத்திட்டம் (101) | 2,224,598 | (9,365,711) |
| அரச மானியம் -மூலதன கருத்திட்டம் 103 (கட்டடங்கள்) | 109,076,344 | 36,472,605 |
| அரச மானியம் -மூலதன கருத்திட்டம் 102 (சாதனங்கள்) | (94,546,749) | 21,647,678 |
| செலவிடாத ஜரி மானியம் | 7,364,252 | (385,969) |
| | **24,118,444** | **48,368,603** |

**13. கொடைகளும் நன்கொடைகளும்**

| | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|
| வெளிநாட்டு | 39,357,361 | 38,716,353 |
| உள்நாட்டு | 11,718,160 | 10,846,589 |
| | **51,075,521** | **49,562,943** |

**14. குறிப்பான ஒதுக்கம்**

| | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|
| | **283,587,900** | **237,416,688** |

**15 . ஏனைய நிதிகள்**

| | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|
| ஒப்பந்த மீறல் நிதி | 712,943 | 673,176 |
| குறிப்பான நடவடிக்கைகளுக்குக் கிடைத்த நிதி | 13,244,178 | 2,753,503 |
| | **13,957,121** | **3,426,679** |

**16. சென்மதிக் கணக்குகள்**

| | நடப்பு | நடப்பிலற்ற | 2008 (ரு.) | 2007 (ரு.) |
|---|---|---|---|---|
| கோரப்படாதவை (சம்பளம் சாராத கொடுப்பனவுகள்) | 2,055 | - | 2,055 | - |
| ஒப்பந்தங்கள்மீது நிறுத்திவைத்தவை | 7,524,750 | 6,802,120 | 14,326,870 | 9,797,698 |
| பிறருக்குக் கொடுப்பனவுகளுக்காகக் கிடைத்த பணம் | 7,809,822 | - | 7,809,822 | 7,176,055 |
| சம்பளக் கணக்கு (முழு எண் தொகை) | 281,315 | - | 281,315 | 218,846 |
| செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும் | 392,810 | 250,290 | 643,100 | 299,555 |
| இரத்துச்செய்த காசோலைக் கணக்கு | - | 413,537 | 413,537 | 424,965 |
| முத்திரைத் தீர்வை | 56,833 | - | 56,833 | 105,675 |
| சில்லறைக் கடன்தந்தோர் ம.பீ. | - | 332,764 | 332,764 | 327,091 |
| சில்லறைக் கடன்தந்தோர் | 13,831 | - | 13,831 | - |
| பிற நடப்புப் பொறுப்புகள் | - | 91,458 | 91,458 | 91,458 |
| பட்டமளிப்புச் செலவுகள் | 435,037 | 158,182 | 593,219 | 158,182 |
| முன்வருமானம்பெறும் கணக்கு | 104,975 | - | 104,975 | 135,000 |
| சுகா. காப்புறுதிக் க/கு (காப். கம்பனிக்குச் செலுத்துவது) | 20,093 | - | 20,093 | - |
| ப.மா.ஆ.இடமிருந்து நிதியாளர்களுக்கு முற்பணம் | - | - | - | 250,000 |
| ஊ.ந.நி. சென்மதிக் க/கு | 5,000 | - | 5,000 | 4,873 |
| ப.சே.நி. சென்மதிக் க/கு | 42,455 | - | 42,455 | 20,355 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| ஓய்வூதிய சென்மதிக் க/கு | (59,132) | - | (59,132) | 9,579 |
| கொழும்பு பல். அபி.நிதிக்குச் செலுத்துவது | - | - | - | 26,000 |
| N.C.A.S.க/கு | - | - | - | 417,000 |
| CSHR வரி | - | 1,136 | 1,136 | 1,328 |
| வேறு பல்.கழகத்துக்குச் சென்மதியான பணம் | 374,761 | - | 374,761 | 1,603,291 |
| பயன்பாடுகளுக்குச் செலுத்துவது | - | - | - | 275,000 |
| திரு.வி.சிவலிங்கத்துக்குச் செலுத்தும் க/கு | - | - | - | 22,950 |
| ஊடக ஆய்வுகள் பற்றிய குறிப்பேடு | 25,895 | 10,570 | 36,465 | 10,570 |
| சேமலாபநிதி விடுவிப்புக்குச் செலுத்துவது ம.பீ. | - | 101,244 | 101,244 | 101,244 |
| கோரப்படாத நிதிகள் | 143,147 | - | 143,147 | - |
| | **17,173,648** | **8,161,302** | **25,334,950** | **21,476,714** |

| 17. சென்மதி வைப்புக்கள் | நடப்பு | நடப்பிலற்ற | 2008 (ரூ.) | 2007 (ரூ.) |
|---|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | - | 174,395 | 174,395 | 247,655 |
| சில்லறை வைப்புக்கள் | - | 22,625 | 22,625 | 20,125 |
| மாணவர் ஆய்வுகூட வைப்பு | 1,540,096 | - | 1,540,096 | 1,443,046 |
| நூலக வைப்புக்கள் | 9,531,291 | - | 9,531,291 | 9,056,601 |
| காப்பு வைப்புக்கள் | - | 1,554,055 | 1,554,055 | 1,773,872 |
| காப்பு வைப்புக்கள் (விடுதிகள்) | - | 267,043 | 267,043 | 267,043 |
| ஏல முறிக் கணக்கு | 15,000 | - | 15,000 | - |
| மீளளிக்கப்படும் மகாபொல (ஸ்ரீ பாளி வளாகம்) | 10,050 | - | 10,050 | 41,150 |
| | **11,096,437** | **2,018,118** | **13,114,555** | **12,849,492** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. செலவினச் சுருக்கம்

| விடயக் குறியீடு | விடயத் தலைப்பு | 2008 | | 2007 | |
|---|---|---|---|---|---|
| | | உபமொத்தம் | மொத்தம் | உபமொத்தம் | மொத்தம் |
| | **ஆளணி ஊதியங்கள்** | | | | |
| | **கல்விசார்** | | | | |
| | **சம்பளங்களும் கூலிகளும்** | | | | |
| | சம்பளங்களும் கூலிகளும் | 276,420,360 | | 270,890,344 | |
| | **ப.நே.நி./ஊ.ந.நி./ஓய்வூதியம்** | | | | |
| | ப.சே.நி. | 41,096,509 | | 41,355,484 | |
| | ஓய்வூதியம் | 7,711,316 | | 7,514,617 | |
| | ஊ.ந.நி. | 9,785,301 | | 9,782,843 | |
| | **படிகள்** | | | | |
| | இடைக்காலப் படி | 26,664 | | 239,047 | |
| | எம்.சீ.ஏ. | 39,000 | | 1,199,509 | |
| | கல்விசார் படி | 58,098,530 | | 58,865,479 | |
| | சமப்படுத்தும் படி | 3,929,222 | | 3,917,916 | |
| | வேறு படி | 952,645 | | 2,660,119 | |
| | பதிற்கடமைப் படி | 73,965 | | 237,528 | |
| | வாழ்க்கைச் செலவுப் படி | 20,261,875 | | 13,911,316 | |
| | **கல்விசாராத சம்பளங்களும் கூலிகளும்** | | | | |
| | சம்பளங்களும் கூலிகளும் | 226,743,40<br>9 | | 228,135,040 | |
| | **ப.நே.நி./ஊ.ந.நி./ஓய்வூதியம்** | | | | |
| | ப.சே.நி. | 27,480,341 | | 27,138,886 | |
| | ஓய்வூதியம் | 6,584,803 | | 6,264,431 | |
| | ஊ.ந.நி. | 6,819,189 | | 6,685,029 | |
| | **படிகள்** | | | | |
| | இடைக்காலப் படி | 5,618 | | 22,323 | |
| | எம்.சீ.ஏ. | - | | 486,866 | |
| | வேறு படி | 383,336 | | 1,373,720 | |
| | மொழிப் படி | 1,688,465 | | 1,730,347 | |
| | இடைக்காலப் படி 1200/- | 42,585 | | - | |
| | இடைக்காலப் படி -3 | - | | 4,008,547 | |
| | படி 150/- | - | | 6,048,833 | |
| | இடைக்கால -4 | 60,550 | | 1,798,164 | |
| | பதிற்கடமைப் படி | 115,666 | | 275,470 | |
| | வாழ்க்கைச் செலவுப் படி | 31,042,171 | | 20,181,312 | |
| | **மேலதிக நேர/விடுமுறைக் கொடுப்பனவு** | | | | |
| | மேலதிக நேரம் | 23,859,681 | | 19,451,476 | |
| | விடுமுறைச் சம்பளம் | 390,204 | 743,611,405 | 130,324 | 734,304,9<br>69 |
| | **பிரயாணச் செலவுகள்** | | | | |
| 1101 | பிரயாணமும் உணவுப் படியும் -உள்நாடு | 927,457 | | 903,263 | |
| 1102 | பிரயாணமும் உணவுப் படியும்-வெளிநாடு | 3,797,719 | 4,725,176 | 2,022,828 | 2,926,091 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விடயக் குறியீடு | விடயத் தலைப்பு | 2008 | | 2007 | |
|---|---|---|---|---|---|
| | | உபமொத்தம் | மொத்தம் | உபமொத்தம் | மொத்தம் |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | எழுதுகருவிகள், அலுவலக சாதனங்கள் | 20,000,209 | | 16,066,791 | |
| 1202 | எரிபொருள், உராய்வுநீக்கி | 8,548,468 | | 6,494,220 | |
| 1203 | சீருடைகள்/தையல் கட்டணம் | 1,561,748 | | 1,224,851 | |
| 1205 | மருத்துவ வழங்கல்கள் | 563,660 | | 325,410 | |
| 1206 | பொறிமுறை, மின்சாரப் பொருட்கள் | 663,242 | | 823,594 | |
| 1207 | ஏனைய வழங்கல்கள் | 5,874,595 | | 4,611,741 | |
| 1207-i | இரசாயனங்களும் நுகர்வுகளும் | 11,245,834 | 48,457,757 | 10,375,432 | 39,922,040 |
| | **பராமரிப்புச் செலவினம்** | | | | |
| 1301 | வாகனங்கள் | 6,319,811 | | 4,936,628 | |
| 1302 | பொறித்தொகுதி, இயந்திரம், சாதனம் | 8,028,238 | | 6,549,445 | |
| 1303 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 133,766 | | 25,541 | |
| 1304 | வேறு பராமரிப்புச் செலவினம் | 676,676 | 15,158,491 | 577,186 | 12,088,800 |
| | **ஒப்பந்தச் சேவை** | | | | |
| 1401 | போக்குவரத்து | 403,709 | | 607,747 | |
| 1402 | தொலைத்தொடர்பு | 11,537,162 | | 9,368,055 | |
| 1403 | அஞ்சல் கட்டணம் | 1,373,993 | | 1,232,090 | |
| 1404 | மின்சாரம், நீர் | 89,061,168 | | 75,636,606 | |
| 1405 | வாடகை, கூலிக் கட்டணங்கள் | 11,288,809 | | 7,802,064 | |
| 1406 | உள்ளூர் அதிகாரசபைக்கு வரிவீதங்கள் | 3,432,261 | | 4,852,394 | |
| 1407 | வேறு ஒப்பந்தச் சேவைகள் | 419,289 | | 784,275 | |
| 1407-i | பாதுகாப்புச் சேவைகள் | 25,338,837 | | 19,499,794 | |
| 1407-ii | சுத்திகரிப்புச் சேவைகள் | 17,346,564 | 160,201,792 | 15,694,752 | 135,477,779 |
| | **வேறு மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| 1901 | அளிப்புகள், முன்காப்பீடுகள் | 280,600 | | 784,673 | |
| 1903 | விடுமுறை வாரண்டுகள், பருவகால சீட்டுகள் | 2,049,501 | | 1,008,187 | |
| 1905 | வேறு மீண்டுவருஞ் செலவுகள் | 8,571,694 | | 5,912,939 | |
| 1905-i | விசேட சேவை - பேரவை | 206,030 | | 176,760 | |
| 1905-ii | விசேட சேவை – தொழிலாண்மை | 1,217,533 | | 920,264 | |
| 1905-iii | செயலமர்வுகள், கருத்தரங்குகள் | 654,947 | | 236,695 | |
| 1905-iv | கல்விசார் ஆராய்ச்சி | 240,134 | | 32,900 | |
| 1905-v | விருந்துபசாரச் செலவுகள் | 1,858,767 | | 1,948,892 | |
| 1905-vi | வங்கிக் கட்டணங்கள் | 51,009 | | 17,971 | |
| 1905-vii | பங்களிப்பு, உறுப்புரிமைக் கட்டணம் | 996,403 | | 1,693,364 | |
| 1905-viii | பட்டமளிப்பு | 354,628 | | 347,235 | |
| 1905-ix | பரீட்சைச் செலவுகள் | 6,744,993 | | 7,282,448 | |
| 1905-x | வருகைதரும் விரிவுரைக் கட்டணம் | 6,954,309 | | 7,728,777 | |
| 1905-xi | இணையச் சேவைக்குச் சந்தா | 1,200,000 | | 500 | |
| 1905-xii | அச்சிடலும் விளம்பரப்படுத்தலும் | 3,237,705 | | 4,402,813 | |
| 1907 | பணியாளர் அபிவிருத்தி | 826,642 | 35,444,896 | 1,405,344 | 33,899,760 |
| 1905-xiv | மகாபொல புலமைப்பரிசுகள் | 17,528,500 | | 16,442,050 | |
| 1905-xiii | கல்வி உதவுதொகை | 14,189,022 | 31,717,522 | 12,978,791 | 29,420,841 |
| | ***மொத்தம்*** | **1,039,317,039** | **1,039,317,039** | **988,040,280** | **988,040,280** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீஈ/சீ/யூ(சீ)/08/எப்/ஏ 2009 யூலை 16

உப வேந்தர்,

கொழும்புப் பல்கலைக்கழகம்

**கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரமும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரமுமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் 111 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவப் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் வழமையாக சமாப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், உரித்துடைய கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

### 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்டு இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது ஆகக் கூடிய அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெறப்பட்டன. இதன் பிரகாரம் எனது அபிப்பிராயத்திற்காக போதிய அடிப்படை ஒன்று கணக்காய்வின் மூலம் வழங்கப்படுவது எனது நம்பிக்கையாகும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1. நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பணம்

சமர்ப்பிக்கப்பட்ட, 2008 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட ரூபா 212,654,627 கூட்டுத்தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இக் கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2009 ஏப்ரல் 23 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், விழா முற்பணக் கணக்கு மீதி ரூபா 396,210 ஆகவும் விசேட முற்பணக் கணக்கு மீதி ரூபா 109,779 தொகையானதுடன் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம், அம் மீதிகள் முறையே ரூபா 564,400 ஆகவும் ரூபா 64,500 ஆகவும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.3 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 66,033 பெறுமதியான நானாவித கடன்பட்டோர் மீதியில் இருந்து எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேறு 03 பல்கலைக்கழகங்களில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 369,649 கூட்டுத்தொகையான பெறுமதியில் எத்தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 37,000 தொகையான வாகனக் கடன் மீதியில் எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிராததுடன் அறவிடப்படாமைக்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சேவையை விட்டு விலகிச் சென்றதாகக் கருதப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 186,276 கூட்டுமொத்தத் தொகையான இடர் கடன் மீதிகளும் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றலாகிச் சென்றிருந்த மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 15,719 கூட்டுமொத்தத் தொகையான பதவியணியினர் கடன் மீதியும் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **உடன்படிக்கை மீறலுக்காக பெறப்பட வேண்டிய தொகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 10 ஆம் அத்தியாயத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம், உடன்படிக்கை மீறப்பட்ட 47 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 36,756,991 தொகை 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டதுடன் இவர்களுள் மூன்று விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,022,262 தொகை சட்ட அறிவுறுத்தல்களில் பதிவழிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) நான்கு விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,382,276 தொகை மாத்திரம் அறவிடப்படுவது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(iii) பதினொரு விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,956,082 தொகைக்காக வழக்குத் தொடரப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த போதிலும் அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 25 விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,366,738 அவர்களது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடைத் தொகையில் இருந்து கழிக்கப்படும் தீர்மானத்தில் 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் அத் தொகை அறவிடப்படாதிருந்தது. உரிய தொகையின் அறவீடு காலாவதியாகியதை அடுத்து காலக்கழிவுச் சட்டத்திற்கு உட்பட்டதை அடுத்து பெறவேண்டிய அத்தொகை அறவிடப்படாமைக்கான எச்சரிக்கை நிலவியது.

(v) ஊடன்படிக்கை மீறியமையால் விரிவுரையாளர்களிடம் இருந்து 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்ட தொகை ரூபா 1,810,401 ஆனதுடன் 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம் மீதி ரூபா 2,216,399 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட பணத்தொகை ரூபா 405,998 ஆக இருக்க வேண்டிய போதிலும் பேரேட்டின் பிரகாரம், அம் மீதி ரூபா 493,559 ஆகக் காணப்பட்டது.

(vi)

### 2.2.4 விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாட்டுடனான சொத்துக்கள்

பல்கலைக்கழகத்தின் வாகனக் குழாமில் 28 வாகனங்கள் இருந்த போதிலும் சாரதிகளின் எண்ணிக்கை 20 மாத்திரமேயாகும். ஆகையான 08 வாகனங்கள் விளைவற்ற நிலையில் காணப்பட்டன.

### 2.2.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) பல்கலைக்கழகத்திடம் 10 குழாம் வாகனங்கள் இருந்த பொதிலும் வெளிக் கடமைகளுக்குச் செல்வதற்காக முச்சக்கர வண்டி வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தில் தொழிற்சங்கக் கூட்டங்களுக்காக கலந்து கொள்வதற்கு ஊழியர்களைக் கொண்டு செல்வதற்கு 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 204,000 கூட்டுத்தொகைப் பெறுமதியான தொகை தனியார் போக்குவரத்து நிறுவகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2001 செப்தெம்பர் 24 ஆம் திகதிய யூஜீசீ 789 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், மேற்குறித்த நடவடிக்கைகளுக்காக பொக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குப் பதிலாக விலை கோரல்களை மேற்கொள்கையில் பொது மக்கட் போக்குவரத்துப் பிரிவினூடாகவும் விலைகள் கோரப்பட வேண்டிய போதிலும் அத்தகைய விலைக்கோரல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், பல்கலைக்கழகத்திடம் இருந்த 03 பஸ்வண்டிகள் இருக்கையில் வெளி நிறுவகங்களிடம் இருந்து போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டு வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.6 சம்பளமற்ற லீவைப் பெற்றிருந்த உத்தியோகத்தர்களுக்கு (கல்வி) சம்பளம் செலுத்தப்படல்

2006 ஆம் 2007 ஆம் ஆண்டுகளின் போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து சம்பளமற்ற லீவைப் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு அக்காலப்பகுதியின் போது சம்பளங்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புத் தொகையாக ரூபா 255,664 செலுத்தப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 12 ஆம் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 7.3 (ല) பிரிவு | நிலையான சொத்து அறிக்கையிடுவதற்காக முறையான படிவத்திலான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் கூட்டுத்திட்டம் வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு நிர்வாக சபை அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து அதன் பிரதி நாளது வரையாக்கப்பட்டு உரிய கணக்காண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களின் முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய கூட்டுத்திட்டம் 2009 ஏப்ரல் 27 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2003 ஏப்ரல் 02 ஆம் திகதிய 393(4) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | தமது எல்லைக்குள் உள்ளபடியாக பயன்படுத்தப்பட்ட அழைப்புக் கட்டணம் மாத்திரம் பல்கலைக்கழகத்தினால் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக உத்தியோகத்தர்களுக்கு உரித்தான மாதாந்த தொலைபேசி எல்லைக்கு உரிய தொகை கொடுப்பனவாகப் பெறப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1999 பெப்ரவரி 26 ஆம் திகதிய 02/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி 17 பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்காக ரூபா 244,100 செலவிடப்பட்டு கையடக்கத் தொலைபேசி வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | இலங்கை அரசின் நிதிப் பிரமாணம் | |
| | (i) நி.பி. 104(1) மற்றும் (2) | பௌதீக விஞ்ஞான கல்விப் பிரிவினதும் பிரயோகப் பிரிவின் பொருள் இழப்பு தொடர்பாக ஆய்வுகள் நடாத்தப்பட்டிராததுடன் ஒழுக்கப் பாதுகாப்பு காரியாலயத்திற்கும் சுகாதார மத்தியநிலையத்திற்கு மாணவர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டிருந்த நட்டங்கள் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி. 135 — 1999 ஆம் ஆண்டின் போது அமுலாக்கப்பட்ட பணக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரப் பகிர்வு எவ்வித திருத்தத்திற்கும் உட்படுத்தப்படாது செயற்படுத்தப்பட்டிருந்தது.

(iii) நி.பி. 156 — வாகன வருடாந்த வருமான அனுமதிப்பத்திரப் பெறுவதற்குத் தாமதமானமையால் அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் ரூபா 4,140 கூட்டுத்தொகையும் மின்சாரப் பட்டியற் கொடுப்பனவு தாமதமானமையால் ரூபா 33,584 கூட்டுத்தொகையுமான தண்டப்பணத்தைச் செலுத்தியிருந்ததுடன் இதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(iv) நி.பி. 371(2) — வித்தியாலய வளாகம், ஸ்ரீபாளி வளாகம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவப் பிரிவினால் நானாவித செயற்பாடுகளுக்காக பெறப்பட்ட கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 7,956,467 தொகையான முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்கு 01 வருடம் முதல் 30 வருட காலம் கடந்திருந்தது.

(v) நி.பி. 387 — மீளாய்வாண்டின் இறுதியில் ஸ்ரீபாளி வளாகத்தின் மீண்டெழும் காசேடு ரூபா 328,334 தொகையான மேலதிகப்பற்று மீதி காணப்பட்டது.

(vi) நி.பி. 395 — 02 ஆண்டுகள் முதல் 12 ஆண்டு காலமாக தேறியிராத ரூபா 117,695 கூட்டுத்தொகைப் பெறுமதியான காசோலைகளும் காசுக் கட்டளைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) நி.பி. 757 — பௌதீக பொருள் மெய்யையாய்வு அறிக்கையின் பிரகாரமான பல்கலைக்கழக வளாகத்தின் ரூபா 97,583 பெறுமதியான இருப்பு மிகையும் ரூபா 107,590 பெறுமதியான இருப்பு பற்றாக்குறையும் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| (ஊ) | தாபனவிதிக் கோவையின் xiv ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | வெளி விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரைகள் நடாத்துவதற்காக வருகை தருவதற்காக வாழ்க்கைப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவகத்திற்கான தாபனவிதிக் கோவை | |
| | (i) iii ஆம் அத்தியாயத்தின் 30.2 ஆம் பிரிவு | தனியார் கோவையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கல்வி பதவியணியின் கோவைகள் இதற்கு இணங்கும் வகையில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) v ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பிரிவு மற்றும் 2007 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 09/2007 (1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி 05 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (ஏ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபனச் சுற்றறிக்கைக் கடிதம் 3/2007 | பயிற்சியாளர்கள் ஆட்சேர்க்கப்படுகையில் அரசாங்கத்தின் பயிற்றுவிப்பு நிறுவகங்களில் மாணவர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இவ் ஆட்சேர்ப்பிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. நிதிசார் மீளாய்வு

#### 3.1.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நடவடிக்கைகளின் தொழிற்பாடு, மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதன் முன்னர் ரூபா 969,328,666 பற்றாக்குறையை விளைவித்தது. இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,034,054,908 ஆகும். மீளாய்வாண்டிற்கான ரூபா 969,341,848 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 13,182 ஆனதுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிற்காக் பெறப்பட்ட ரூபா 883,620,162 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 150,434,746 ஆகக் குறைவடைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 கல்வி சார் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழகத்திற்குச் சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 2,019 ஆன அதேவேளை இப் பட்டத்தைப் பெற உள்ள எண்ணிக்கை கலைப் பிரிவின் 632 ஆன அதாவது 31% உம், சட்டப் பிரிவில் 202 ஆன 10% உம், முகாமைத்துவப் பிரிவின் 402 ஆன 20% உம், விஞ்ஞானப் பிரிவில் 465 ஆன 23% உம், மருத்துவ பிரிவில் 210 ஆன 10 % உமாக காணப்பட்டது. ஸ்ரீ பாலி பிரிவிற்கு 2007/2008 கல்வி ஆண்டிற்காக 108 மாணவர்கள் 2008 ஜனவரி மாதம் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டின் போது இறுதியாண்டு மாணவர்களில் பட்டத்தைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1,757 ஆன அதேவேளை இப் பட்டத்தை எதிர்பார்த்தவர்களைக் கொண்ட சட்டப் பிரிவில் 185 பேரும், விஞ்ஞானப் பிரிவில் 310 பேரும், மருத்துவப் பிரிவில் 353 பேரும், ஊடக மற்றும் தொடர்பாடல் துறையில் 50 பேரும் கலை துறையில் 421 பேரும் முகாமைத்துவ மற்றும் நிதிப் பிரிவில் 371 பேரும் கல்விப் பிரிவில் 67 பேரும் அடங்குகின்றனர்.

(இ) பல்கலைக்கழகத்தில் 2007 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 8,988 ஆகவும் 2008 ஆம் ஆண்டின் போது 8,756 ஆகவும் இருந்ததுடன் இது 232 இனால் குறைவைக் காண்பித்தது. இம் மாணவர் எண்ணிக்கை கல்வி பிரிவில் 449 பேரும், சட்டப் பிரிவில் 810 பேரும், விஞ்ஞானப் பிரிவில் 1,563 பேரும், கலைப் பிரிவில் 2,613 பேரும், வணிக மற்றும் முகாமைத்துவ பிரிவில் 1,586 பேரும், மருத்துவப் பிரிவில் 1,460 பேரும், ஸ்ரீ பாலி பிரிவில் 275 பேருமாக பீடத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தனர்.

### 3.2.2 பட்டப் பின்படிப்புப் பாடநெறிகள் நடாத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்விப் பட்டப்படிப்பின் 25 பட்டப் பின்படிப்பு பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 877 ஆகும். ஆண்டின் போது பீடத்தில் மேற்குறித்த பாடநெறிகளுக்காக 3,103 விரிவுரை மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது பட்டப் பின்படிப்பு, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 129 ஆகும்.

### 3.2.3 வளப் பகிர்வாளர்கள்

2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் 488 ஆகும். இவர்களில் 123 பேர் நுண்கலைப் பீடத்திற்காகவும், 28 பேர் கல்விப் பீடத்திற்காகவும், 30 பேர் சட்ட பீடத்திற்காகவும், 52 பேர் வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்காகவும், 126 பேர் மருத்துவ பீடத்திற்காகவும், 100 பேர் விஞ்ஞான பீடத்திற்காகவும், 13 பேர் ஸ்ரீ பாலிப் பீடத்திற்காகவும் பணியாற்றினர். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி, ஒவ்வொரு பீடத்திற்காகவும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீட விரிவுரையாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்படுகையில் ஒரு விரிவுரையாளருக்கு நுண்கலைப் பீடத்தில் 21 மாணவர்களும், கல்விப் பீடத்தில் 16 மாணவர்களும், சட்ட பீடத்தில் 27 மாணவர்களும், வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்தில் 31 மாணவர்களும், மருத்துவ பீடத்தில் 12 மாணவர்களும், விஞ்ஞானப் பீடத்தில் 16 மாணவர்களும், ஸ்ரீ பாலிப் பீடத்தில் 21 மாணவர்களும் ஆக இருந்தது.

3.2.4 விரிவுரை மணித்தியாலம்

கணக்காய்விற்குப் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆரம்பப் பட்டதாரிகளுக்காக 2007/ 2008 ஆம் கல்வி ஆண்டிற்காக உள்ளக விரிவுரைகள் 59,331 மணித்தியாலங்களும், வெளிவாரி விரிவுரைகள் 13,091 மணித்தியாலங்களும் நடாத்தப்பட்டன. உள்ளக விரிவுரை மணித்தியாலங்கள் விஞ்ஞான பீடத்திற்கு 12,683 உம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 5,346 உம், கல்வி பீடத்திற்கு 2,718 உம், சட்ட பீடத்திற்கு 3,170 உம், மருத்துவ பீடத்திற்கு 10,221 உம் நுண்கலைப் பீடத்திற்கு 22,713 உம் ஸ்ரீ பாலிப் பீடத்திற்கு 2,481 உமாகக் காணப்பட்டது. மேலும் வெளிவாரி விரிவுரைகள் விஞ்ஞான பீடத்திற்கு 802 உம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 825 உம், கல்வி பீடத்திற்கு 300 உம், சட்ட பீடத்திற்கு 828 உம், மருத்துவ பீடத்திற்கு 711 உம் நுண்கலைப் பீடத்திற்கு 4,769 உம், ஸ்ரீ பாலிப் பீடத்திற்கு 4,856 உமாகக் காணப்பட்டது. மேலும் பட்டப்பின்படிப்பு பாடநெறிக்காக 7,511 உள்ளக விரிவுரை மணித்தியாலங்களும் 389 வெளியக விரிவுரை மணித்தியாலங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

3.2.5 பரீட்சைகள் நடாத்தப்படல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் பரீட்சைப் பிரிவினால் மருத்துவ பீடம் தவிர்ந்த 07 பீடங்களில் 54 முதலாம் பட்டப் பரீட்சைகளும், 16 பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பரீட்சைகளும், 21 பட்டப் பின்படிப்பு பரீட்சைகளும் 07 வேறு டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. இவற்றில், ஆரம்பப் பட்டப் பரீட்சைகள் 39 இனதும், 06 பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பரீட்சைகளினதும், 09 பட்டப்பின்படிப்பு டிப்ளோமா மற்றும் ஏனைய டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகள் 05 இனதும் முடிவுகள் வெளியாகி இருந்தன. முடிவுகள் வெளியாகி இராத மொத்த பரீட்சைகளின் எண்ணிக்கை 38 ஆகக் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி பட்டங்களுக்கு தொடர்பான பரீட்சைகள் நடாத்தப்பட்டு அறிவியலில் கலாநிதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்த ஒரு விண்ணப்பதாரியினதும், அறிவியலில் முதுமானிப் பட்டத்தைப் பூர்த்தி செய்திருந்த 12 விண்ணப்பதாரிகளினதும் கல்வி முதுமானிப் பட்டத்தைப் பூர்த்தி செய்த 20 விண்ணப்பதாரிகளினதும் முடிவுகள் வெளியாகியிருந்தன. மீளாய்வாண்டின் போது மருத்துவ பீடத்தில் 102 முதலாம் பட்டப் பரீட்சைகளும், 01 பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பரீட்சையும், 04 பட்டப்பின்படிப்பு பரீட்சைகளும், 02 டிப்ளோமா பரீட்சைகளும், 01 சான்றிதழ் பரீட்சையும் பேணியிருந்ததுடன் இதன் முதலாவது பட்டப் பரீட்சைகள் 02 இன் பெறுபேறுகள் வெளியாகியிருக்கவில்லை.

3.2.6 மஹபொல புலமைப்பரிசில் மற்றும் மாணவர் உதவி மானியம்

மீளாய்வாண்டின் போது மஹபொல புலமைப்பரிசில்களுக்காக ரூபா 16,272,200 தொகையும் மாணவர்களுக்கான மாணவர் உதவி மானியமாக ரூபா 13,315,400 உம் வழங்கப்பட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 709,800 தொகையான அதிகரிப்பும் ரூபா 319,400 தொகையான குறைவும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2.7 விடுதி வசதியளித்தல்

மீளாய்வாண்டின் போது 13 விடுதிகளில் பதிவு செய்யப்பட்டிருந்த 3,012 மாணவர்களுக்காக ஆண்டின் போது உறப்பட்டிருந்த விடுதிச் செலவினம் ரூபா 25,860,645 ஆன அதேவேளை ஒரு மாணவனுக்காக உறப்பட்டிருந்த விடுதிச் செலவினம் ரூபா 8,586 ஆகும்.

3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

2008 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய ஒழுக்க விசாரணைக் காரியாலயம் மற்றும் சுகாதார மத்திய நிலையத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கியமையால் ஏற்பட்ட நட்டமமான ரூபா 305,014 தொடர்பாக ஆய்வுகள் நடாத்தப்பட்டு பொறுப்பு வாய்ந்தவர்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 சிக்கனமற்ற செலவினங்கள்

"University of Colombo Review" சஞ்சிகையில் 250 பிரதிகள் அச்சிடப்படுவதற்கு பல்கலைக்கழகத்தினால் ரூபா 117,800 செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் 40 பிரதிகள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

3.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பல்கலைக்கழக விடுதியில் உள்ள காணிகளில் 10 மரங்கள் மற்றும் 13 மரங்கள் கிளைகள் வெட்டப்பட்டு அகற்றப்படுவதற்காக உரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 267,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வெட்டியகற்றப்பட்ட மரங்கள் எவ்வித அறவீடும் இன்றி அவ் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

3.6 ஊழியர் சபைக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அமைச்சுச் செயலாளரின் முறையான அங்கீகாரம் இன்றி 60 வயதைக் கடந்திருந்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் மாதம் ஒன்றிற்கு ரூபா 56,000 தொகையான கொடுப்பனவின் கீழ் நிர்வாக உத்தியோகத்தராக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் வழமையான நிர்வாக பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளர் பதவிக்கு உரிய செயற்பாடுகளும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட 108 கல்விசார் பதவியணியினர் இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 218 ஆக இருந்தனர். இதன் பிரகாரம், 110 உத்தியோகத்தர்களின் மிகையான கல்விசார் பதவியணியினர் காணப்பட்டனர்.

3.7 பல்கலைக்கழக வீட்டுப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழக விடுதிகள் 03 இல் குடியிருக்கும் 04 உத்தியோகத்தர்களுடன் வரி உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 ஆண்டுகாலத்திற்காக மாத்திரம் வரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அக் காலப்பகுதிக்கு மேலாக விடுதியைப் பயன்படுத்திய உத்தியோகத்தர்களுக்காக புதிய வரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கட்டுப்பாட்டுச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், பல்கலைக்கழக விடுதியில் குடியிருக்கக் கூடிய ஆகக் கூடிய காலம் 02 ஆண்டுகளான போதிலும் இதற்கு முரணாக உத்தியோகத்தர்களினால் 03 ஆண்டுகள் முதல் 22 ஆண்டுகள் வரையான காலமாக விடுதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) 02 விடுதிகளில் நிலுவையாகக் காணப்பட்ட மின்சாரப் பட்டியல்கள் மற்றும் நீர் பட்டியல்கள் குடியிருந்த உத்தியோகத்தர்களினால் செலுத்தப்பட்டிராமையால் அவர்களிடம் இருந்து அறவிடப்படும் அடிப்படையில் பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை மீள உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலே நிலுவையாகியிருந்த மின்சாரப் பட்டியலுக்காக பல்கலைக்கழகத்தினால் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 55,130 செலுத்தப்பட்டிருந்தது.

(உ) ரூபா 1,792,920 கூட்டுத்தொகைப் பெறுமதியான நிலுவையான வீட்டு வாடகை மற்றும் நீர் பட்டியல் உரிய குடியிருப்பு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்கலைக்கழகத்தினால் உபவேந்தரின் விடுதியின் விடுதி வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டினதும் இதற்கு முன்னைய ஆண்டினதும் மின்சார மற்றும் நீர் பட்டியலுக்காக பல்கலைக்கழகத்தினால் மொத்தப் பெறுமதி ரூபா 291,823 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) விழா முற்பணம் அறவிடப்படல்
(ஆ) பணிக்கொடைக் கணிப்பீடு
(இ) கணக்கீடு
(ஈ) உடன்படிக்கைக் கட்டுப்பாடு

ஒப்பம். (எஸ். ஸ்வர்ணஜோதி)
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான நூலகம், கொழும்புப் பல்கலைக்கழகம்

Printed by Samayawardhana Printers (Pvt)Ltd - Colombo 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org